வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 22.08.2021 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 261 | பக்கங்கள் : 20






08
மேற்குலகின் நெருக்கடியை கையாளுவாரா பீரிஸ்?



09
புதிய முகத்துடன் தலிபான் 2.0



10
எங்களுடைய வாழ்க்கையையும் கொரோனா முடக்கிவிட்டது



13
ரிசு பேப்பரின் விலை 20 கோடி

# கொரோனா உயிரிழப்பு 7 ஆயிரத்தை கடந்தது!

## நேற்று முன்தினம் 198 பேர் பலி

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் கொரோனாவின் கோரப் பிடியில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 7 ஆயிரத்தைக் கடந்துள்ளது.

ஒரே நாளில் நேற்று முன்தினம் 198 பேர் உயிரிழந்துள்ளனர் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் ஒரே நாளில் அதிக அளவானோர் உயிரிழந்த நாளாக நேற்று முன் தினம் அமைந்துள்ளது.

19

# பூப்புனித நீராட்டு நிகழ்வில் பங்கேற்ற 21 பேருக்கு தொற்று

யாழ்ப்பாணம், ஓக. 22

நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் எம். எஸ். லேன் பகுதியில் நடைபெற்ற பூப்புனித நீராட்டு விழாவில் கலந்துகொண்ட 21 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற இந்த விழாவில் பங்கேற்ற சிலருக்குக் கொரோனாத் தொற்று அறிகுறிகள் தென்

19




# ஜனாதிபதி! திமிர் வேண்டாம்!! மறைக்கப்பட்ட பிரபலம் யார்?

## கட்டுவாப்பிட்டி தேவாலயத்துக்கு அருகில் கவனவீர்ப்புப் போராட்டம்

நீர்கொழும்பு, ஓக. 22

“ஜனாதிபதி! திமிர் வேண்டாம்!!”, “மறைக்கப்பட்ட பிரபலம் யார்?” போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு கட்டுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயத்துக்கு அருகில் நேற்றுக் காலை கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கத்தோலிக்க

19

# கொரோனா கட்டுப்படுத்தலில் ராஜபக்ஷ அரசுக்குத் தோல்வி!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு



கொழும்பு, ஓகஸ்ட் 22

“கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தோல்விகண்டுள்ள ராஜபக்ஷ அரசு, தனது இயலாமையை மூடிமறைக்கவே வைரஸ் பரவலுக்கு எதிரணிகளால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களே காரணம் என அறிவிப்பு விடுத்துவருகின்றது” என்று ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியது.

19

# நாடு மீண்டும் மீண்டும் முடக்கப்படின் அரச துறையினரின் சம்பளம் குறைப்பு

## ஆளும் கட்சியின் நிலைப்பாடு இது

கொழும்பு, ஓக. 22

நாடு தனிமைப்படுத்தப்பட்ட 10 நாள்களுக்கு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரசு 2 ஆயிரம் ரூபா வழங்குகிறது என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

நாடு தனிமைப்படுத்தப்பட்ட ஒரு மாதத்துக்கு முன்பு 5 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டிருந்தாலும், இந்த முறை 10 நாள்களுக்கு மட்டுமே தனிமைப்படுத்தப்பட்டிருப்பதால்

19

# ஒரே நாளில் 3,884 பேருக்கு கொரோனா!

கொழும்பு, ஓக. 22

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளான மேலும் 3 ஆயிரத்து 883 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அர

19



## உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின்

# உண்மைகளை மூடி மறைப்பதற்கு எதிராக கறுப்புக் கொடி போராட்டம்

கொழும்பு, ஓக. 22

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுக்கு நீதி கோரி நாடு முழுவதும் நேற்று கறுப்புக் கொடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத்

19

# யாழ்.குடாநாட்டில் 80 பேர் உட்பட வடக்கில் 153 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்.மாவட்டத்தில் 80 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 153 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்

19

# கனடிய பொதுத் தேர்தலில் இம்முறை களமிறங்கும் 7 தமிழ் வேட்பாளர்கள்

ஒட்டோவா, ஓக.22

கனடாவில் செப்டம்பர் 20 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்கு இதுவரை ஏழு தமிழ் வேட்பாளர்களின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இவர்களில் ஐந்து

19

# நிலைமை மிகவும் மோசம் ஊரடங்கை மீற வேண்டாம்

## இராணுவத் தளபதி எச்சரிக்கை

கொழும்பு, ஓக. 22

“இலங்கையில் கொரோனாப் பரவலின் நிலைமை மிகவும் மோசமாக இருக்கின்றது. மக்கள் பாதுகாப்பாக வீட்டில் இருக்க வேண்டும். தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மக்கள் மீறக் கூடாது.”

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் நேற்று

19

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

இரண்டு நண்பர்கள் சந்தித்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

ஒருவர் சொன்னார், 'என் வேலைக்காரன்தான் உலகத்திலேயே படு முட்டாள்' என்று.

அதற்கு மறுத்த அடுத்தவர், 'வாய்ப்பே இல்ல, என் வேலைக்காரனப் பத்தி தெரியாம சொல்றீங்க' என்றார்.

சரி, சோதித்துப் பாத்துவிடுவோம் என்று சொல்லி, முதலில் ஒருவர் தன் வேலைக்காரனை அழைத்தார்.

பத்து ரூபாவைக் கொடுத்து 'கடைக்கு போய், நல்லா பாத்து மாருதி கார் ஒன்று வாங்கிக்கொண்டு வா' என்றார். 'சரிங்க ஐயா' என்று பவ்வியமாக வாங்கிக்கொண்டு போய்விட்டான்.

'பாத்திங்களா, என் ஆள் எப்படி, என்ன வாங்க சொன்னேன்னும் தெரியாது, பத்து ரூபா செல்லுமான்னும் தெரியாது, ஆனா, சொன்ன உடனே வாங்க கிளம்பிவிட்டான் பாருங்க' என்றார்.

'கொஞ்சம் பொறுங்க' என்று சொல்லி அடுத்தவர், அவரின் வேலைக்காரனை கூப்பிட்டார்.

'அவசரமான விஷயம், வீட்டுக்கு போய் நான் இருக்கிறேனான்னு பார்த்திற்று வா' என்றார். 'உடனே பார்த்திற்று வர்றேன்' என்று அவனும் கிளம்பினான்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் நாட்டைக் கைப்பற்றியிருப்பதை நமது தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராட்டியிருக்கின்றது.

"தலிபான்களின் தொடர் போராட்டமும் கொள்கைப்பிடிப்பும் இலக்கு நோக்கிய பயணமும் அவர்களை இன்று தமது தாய்நாட்டை அடைய வைத்திருக்கின்றது. தலிபான்களின் விடுதலை சரியா, பிழையா? என்பது பிரச்னையல்ல. சுதந்திர இயக்கங்களுக்கும் சுதந்திரத்துக்குப் போராடுகின்ற இனங்களுக்கும் தலிபான்களின் விடுதலை ஒரு மாற்றத்தைத் தந்திருக்கின்றது."

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதம் ஒன்றில் அவர் பேசி முடிந்த கையோடு, மற்றுமொரு பாராளுமன்ற உறுப்பினரான இராசமாணிக்கம் ராசபுத்திரன் சாணக்கியா, ஆப்கானிலிருந்து மக்கள் வெளியேறியதைப்போல நமது நாட்டிலிருந்தும் வெளியேற வேண்டிவரும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

"தற்போது ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் இருந்து விமானத்தில் தொங்கிச் செல்லும் மக்கள் அதில் இருந்து விழுகின்றனர். இன்னும் சில காலத்துக்கு இலங்கையில் இவர்கள் ஆட்சி செய்தால் நிச்சயமாக இலங்கை மக்களும் காபூலில் சென்றதைப் போன்று விமானத்தில் செல்லும் நிலைமை ஏற்படும்" என்கிறார் சாணக்கியா.

ஆக, தலிபான்களின் வெற்றியை கொண்டாடுகிறார் சிறிதரன், அங்கு மக்கள் வெளியேறுவதை உதாரணம் காட்டுகிறார் மற்றோர் எம். பி. அங்கு மக்கள் வெளியேறுவது, அங்கு ஆட்சிக்கு வந்திருக்கும் அரசாங்கத்தினால்தான். அந்த அரசு (தலிபான்களின் அரசு) ஏற்பட்டிருப்பதை விரும்பாததாலேயே மக்கள் வெளியேறுகின்றனர் என்கிறார் ஒருவர், ஆனால் தலிபான்கள் ஆட்சிக்கு வந்ததை வரவேற்கிறார் மற்றுமொருவர்.

விடுதலைப் புலிகள் போராட்டம் நடாத்தியபோது, அவர்களுடன் மக்கள் நின்றார்கள். குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுக்களுக்கு மத்தியிலும் அவர்கள் நின்றார்கள். புலிகள் மக்களை தமது கேடயங்களாக வைத்திருந்தனர் என்று அரச தரப்பில் சொல்லப்பட்டாலும், அவர்கள் நினைத்திருந்தால், புலிகளின் தடையையும் மீறிக்கொண்டு வெளியேறியிருக்கலாம்.

அது குறித்து இப்போது சத்திரசிகிச்சை செய்யாவிட்டாலும், இன்று ஆப்கானில் தலிபான்கள் அடைந்த வெற்றியைப்போல புலிகள் வென்றிருந்தால், மக்கள் இப்படி வெளியேறியிருக்கப்போவதில்லை என்பது ஆய்வுக்குரியதல்ல.

எனவே, தலிபான்களின் வெற்றியை அந்த நாட்டு மக்களே கொண்டாடாதபோது, நாம் கொண்டாடுவதில் எந்த நியாயமும் இருக்காது!

**- ஊர்க்குருவி**

# 2 வாரங்களுக்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படாது!

### மரண வீதத்திலும் அதே நிலைமை என்கிறார் உபுல் ரோஹண

கொழும்பு, ஓக. 22

"நாடு தற்போது முடக்கப்பட்டிருந்தாலும் இன்னும் 14 நாட்களுக்குக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும்



மரண எண்ணிக்கையில் குறைவு இருக்காது."

- இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"நாடு 10 நாட்களுக்கு முடக்கப்பட்டுள்ளதால் அடுத்த இரு வாரங்களின் பின்னரே கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறையக்கூடும்.

அதுவரைக்கும் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரண எண்ணிக்கையில் குறைவு இருக்காது. இரு வாரங்களுக்குப் பின்னரே இந்த எண்ணிக்கைகளில் குறைவு ஏற்படக்கூடும். அதனைத் தொடர்ந்தும் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் மக்கள் செயற்பட வேண்டும்.

பொது முடக்கம் நீக்கப்பட்ட பின்னரும் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறு இல்லா விட்டால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது" - என்றார். (இ)

## யானை தாக்கி ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, ஓக. 22

மட்டக்களப்பு மாவட்டம், கரடியனாறு பிரதேசத்தில் யானைத் தாக்குதலுக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கரடியனாறு, கூமாச்சோலை சந்திப் பகுதியைச் சேர்ந்த 42 வயதுடைய கோணேசப்பிள்ளை சிறிராம் ஜீவா என்பவரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

## கிராம சேவகர்கள் 6 பேருக்கு தொற்று

கம்பஹா, ஓக. 22

கம்பஹா மாவட்டம், நிட்டம்புவ பிரதேசத்தில் கிராம சேவகர்கள் 6 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிபடுத்தப்பட்டுள்ளது என அத்தனகல்ல பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

கரஸ்னாகல, ரத்பொகுனகம, கத்தொட்ட மற்றும் தீனா பமுனுவ கிழக்கு பகுதி ஆகிய பிரிவுகளில் பணியாற்றும் கிராம சேவகர்களுக்கே கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளானவர்களும் அவர்களது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (இ)

### கல்வி TV CHANNEL-1
**22.08.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

### கல்வி TV CHANNEL - 2
**22.08.2021 ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
22.08.2021 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 05

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

# பௌத்த பீடங்களின் பலம்

மீண்டும் ஊரடங்கு என்னும் பெயரில் நாடு முடக்கப்பட்டிருக்கின்றது. கடந்த ஒரு மாத காலமாக எதிர்க்கட்சியினர், மருத்துவ நிபுணர்கள் என பல்வேறு தரப்பினரும் நாட்டை முடக்குமாறு கோரிவந்திருக்கின்றனர். தொழிற்சங்கங்களின் தேசிய அமையமும் நாட்டை முடக்குமாறு கோரியிருந்தது. அரசாங்கம் நாட்டை முடக்கும் தீர்மானத்தை எடுக்காவிட்டால், தாம் சில நடவடிக்கைகளை எடுக்க நேரிடுமென்று எச்சரித்திருந்தது. ஆனால், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை முடக்குவதில் ஆர்வம் காண்பிக்கவில்லை. சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்துவதன் மூலம் மட்டுமே விடயங்களை கையாள முற்பட்டார். ஆனால் இறுதியில், இலங்கையின் சக்திவாய்ந்த பௌத்த மத பீடங்களான அஸ்கிரிய மற்றும் மல்வத்த பீடங்கள் நாட்டை முடக்குமாறு கோரிக்கை முன்வைத்ததை தொடர்ந்து, நாடு முடக்கப்பட்டிருக்கின்றது. இவ்வாறான ஒரு கோரிக்கையை இந்த நாட்டில் இருக்கும் இந்து அமைப்புக்கள் அல்லது கிறிஸ்தவ அமைப்புக்கள் ஒன்றிணைந்து அல்லது தனியாக முன்வைத்திருந்தால், ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருப்பாரா?

இலங்கையில் பௌத்த மத பீடங்கள் எத்தகைய செல்வாக்கை கொண்டிருக்கின்றன என்பதற்கு இது சிறந்த உதாரணமாகும். உண்மையில், கொரொனா பெருந்தொற்று விவகாரத்தில் மருத்துவ நிபுணர்களின் முடிவுகளே இறுதி முடிவாக இருக்கவேண்டும். ஏனெனில், இது அடிப்படையில் ஒரு மருத்துவ பிரச்னை. ஆனால், ஆரம்பத்திலிருந்தே மருத்து நிபுணர்கள் ஒரு மாதிரியும், அரசியல் வாதிகள் பிறிதொரு மாதிரியுமே கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். இதனால் தேவையற்ற குழப்பங்களே ஏற்படுகின்றன.

நாட்டை முடக்குமாறு எதிர்க்கட்சியினர் தொடர்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றனர். ஆனால், அரசாங்கம் அவ்வாறான கோரிக்கைகள் எவற்றையும் கருத்தில் கொள்ளவில்லை. அதேபோன்று, விடயங்களில் நிபுணத்துவம் உள்ளவர்களின் ஆலோசனைகளையும் பெரிதாக பொருட்படுத்தவில்லை. ஆனால், ஓர் அறிக்கையின்மூலம் அரசாங்கத்தின் விடாப்பிடி அணுகுமுறையை பௌத்த மதபீடங்கள் மாற்றியிருக்கின்றன. ஜனாதிபதியை இறங்கிவரச் செய்திருக்கின்றன. இதுதான் அவர்களின் பலம்.

இலங்கைத் தீவின் சிங்கள அரசியல் என்பது, பௌத்தத்தோடு பின்னிப்பிணைந்திருக்கும் ஒன்றாகும். இந்த பின்புலத்திலிருந்துதான் சிங்கள - பௌத்தம் என்னும் கருத்தில் வளர்ச்சியுற்றது. உண்மையில், சிங்கள - பௌத்தம் என்பது ஓர் அரசியல் நிலைப்பாடாகும். அது ஒரு மத நிலைப்பாடு அல்ல. சிங்கள - பௌத்தத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்புகளே பௌத்த பீடங்களாக பரிணமித்திருக்கின்றன. பௌத்த மத பீடங்களுக்கு வெளியில் தனியான சிங்கள - பௌத்த அமைப்புக்கள் இயங்குகின்றன. இவைகளே சிங்கள அரசியலை சமநிலைப்படுத்தும் சமூக அமைப்புக்களாகவும் தொழிற்படுகின்றன. பிரதான பௌத்த பீடங்கள் நேரடியாக அரசியலில் ஈடுபடாமல் இருக்கின்றபோது, அந்த பீடங்களில் ஏதோ ஒன்றில் அங்கத்துவம் வகிக்கும் பௌத்த பிக்குகள் தனியாக இயங்கிவருகின்றனர். இதன்மூலம் அரசியல்வாதிகள் சிங்கள - பௌத்த கருத்தியலுக்கு வெளியில் செல்லாதவாறு பார்த்துக்கொள்கின்றனர்.

தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முக்கியமான அரசியல் முடிவுகளையும் இருந்த இடத்திலிருந்தே, மாற்றியமைக்கும் வல்லமையை பௌத்த பீடங்கள் கொண்டிருக்கின்றன. இலங்கையின் உத்தியோகபூர்வ மதமாக பௌத்தம் இருப்பதே இதற்கான காரணமாகும். பௌத்தம் ஓர் அரசியல் பலமாக திரட்சிபெறுவதற்கும் இதுவே காரணமாகும். இலங்கையை உலக தாராளவாத விழுமியங்களுக்கு அமைவான நாடாக முன்கொண்டுசெல்வதில் சிங்கள - பௌத்தம் எப்போதுமே ஒரு குறுக்கீடாகவே இருக்கும். இதற்கு பௌத்த பிக்குகள் அரசியல் ரீதியில் பெற்றுவரும் சலுகைகளே காரணமாகும். அந்த சலுகைகளை இழக்கும் நிலையை அவர்கள் அனுமதிக்கப் போவதில்லை. அவர்களை புறம்தள்ளி செயற்படும் நிலைக்கு சிங்கள தலைவர்கள் எவருமே செயலாற்றப் போவதுமில்லை. இதுதான் இந்தத் தீவின் சிங்கள யதார்த்தம்.

# ஊரடங்கு காலத்தில் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படும் 19 சேவைகள் விவரம்



*கொழும்பு, ஒக. 22*

*இலங்கையில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் காலப்பகுதியில் செயற்பட அனுமதிக்கப்பட்டுள்ள 19 சேவைத்துறையினர் குறித்த விவரங்களை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.*

*சுகாதார சேவை, பாதுகாப்பு மற்றும் உளளூர் நிர்வாக சேவைத்துறை சார்ந்தோருக்கான வழிகாட்டியாக இது அமைந்துள்ளது. இத்தகைய தரப்பினருக்கு எல்லைக் கட்டுப்பாடுகளிலிருந்தும் விதி விலக்கு அளிக்கப்படுகிறது.*

*தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ள காலப்பகுதியில் செயற்பட அனுமதிக்கப்பட்டவர்கள் முன்னரே வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக பேணி செயலாற்ற வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.*

*இந்த அறிவுறுத்தலின்படி அனைத்து அவசர சுகாதார சேவைகள், சுகாதார நிறுவனங்கள், அம்புலன்ஸ் சேவைகள், சுகாதார ஆய்வு கூட மற்றும் நோயறிதல் சேவைகள், வெளிநோயாளர் பிரிவு மருந்து விநியோகம், தனியார் மருத்துவ மையங்கள் (பொதுவான சேவை, ஆய்வக சேவைகள்) இடம்பெறும்.*

*வழக்கமான கிளினிக் நடத்தப்படது. ஆனால் பதிவு செய்யப்பட்ட கிளினிக் நோயாளிகளுக்கு மருந்துகள் அனுப்பப்படும்.*

*தாய், சேய் பராமரிப்பு (அவசிய தேவை எனில் வீட்டுக் கண்காணிப்பு), பொது சுகாதார அதிகாரி பிரிவினரின் தொற்று நோய் கண்டறிதல் மற்றும் கட்டுபடுத்தல், மருந்தகங்கள் (அரசு மற்றும் தனியார் துறை) ஆகியவை ஊடரங்கு காலப்பகுதியில் செயற்பட முடியும்.*

*பொது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் மற்றும் அவற்றின் ஊழியர்கள் முழுமையாக செயல்படவேண்டும்.*


*மாகாண சுகாதார சேவைத் திணைக்களம் மற்றும் பிராந்திய சுகாதார சேவை திணைக்களங்கள் சூழ்நிலைக்கு ஏற்ப தேவைப்படும் ஊழியர்களுடன் செயல்படவேண்டும். இது குறித்து அந்தந்த மாகாண, பிராந்திய சுகாதார பணிப்பாளர் தீர்மானிக்க முடியும்.*

**அனுமதிக்கப்பட்ட 19 சேவைகள், சேவைத் துறையினர்**

*1. கோவிட் 19 தடுப்பூசி திட்டங்கள்*
*2. பொலிஸ் நிலையங்கள்*
*3. கிராம அலுவலர்*
*4. அனைத்து துறை களப் பணி அலுவலர்கள்*
*5. உள்ளூராட்சி அமைப்புகள்*
*6. மின்சாரம், நீர், தொலைத்தொடர்பு, எரிபொருள் நிரப்பு நிலையங்கள், மோட்டார் வாகன திருத்தகங்கள் / ரயர் சேவைகள் (தேவையான ஊழியர்களுடன்) செயற்படலாம். அத்துடன் வீதி புனரமைப்பு, திருத்த வேலைகள் தொடரும்.*
*7. விவசாயம்- பயிர்ச் செய்கை, கால்நடை, மீன்பிடி தொழில்துறையினர் மாவட்ட எல்லைகளைக் கடக்காமல் செயற்பட முடியும். இதன்போது ஆட்களுக்கு இடையிலான இடைவெளி கண்டிப்பாக பேணப்பட வேண்டும்.*
*8. அத்தியாவசிய உணவுப் பொருள் விற்பனை பலசரக்கு கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் வீடுகளுக்கு பொருட்களை விநியோகம் செய்ய முடியும்.*
*9. அத்தியாவசியப் பொருட்கள் விநியோகஸ்தர்கள் நடமாட அனுமதி.*
*10. பேக்கரிகள் - உற்பத்திகளை மேற்கொண்டு எடுத்துச் சென்று விநியோகிக்க விநியோகிக்கலாம்.*
*11. வங்கிகள் - வரையறுக்கப்பட்ட நிதி பரிவர்த்தனைகளுக்காக செயற்பட முடியும். வாடிக்கையாளர்கள் இணைய வங்கிச் சேவையை வங்கிகள் ஊக்குவிக்க வேண்டும்.*
*12. போக்குவரத்து - அத்தியாவசியஃ பிற அனுமதிக்கப்பட்ட சேவைகளுக்காகவும் அத்தியாவசிய பொருட்கள் நடமாடும் விற்பனைக்காவும் செயற்பட முடியும்.*
*13. இறுதிச் சடங்குகள் ஒருவர் இறந்து 24 மணி நேரத்திற்குள் குடும்ப உறுப்பினர்களின் பங்கேற்றுடன் மட்டும் நடைபெறும். (இது கொரோனா இறப்புகளுக்கு பொருந்தாது)*
*14. அத்தியாவசிய தேவை எனில் ஒரு நேரத்தில் ஒருவருக்கு மட்டுமே வீட்டை விட்டு வெளியேற அனுமதி. (தேவை உறுதிப்படுத்தப்பட வேண்டும்)*
*15. 65 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் நாட்பட்ட நோயாளிகள் போன்ற அதிகம் பாதிக்கப்படக்கூடிய தரப்பினர் மருத்துவ தேவை தவிர வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகிறது.*
*16. எந்த நோக்கத்திற்காகவும் தனிப்பட்ட கூட்டங்கள் நடத்த தடை*
*17. தினசரி ஊதியம் பெறும் தொழிலாளர்கள் (கட்டுமான தளங்கள் போன்றவை) குறிப்பிட்ட வேலைக்கு அனுமதிக்கப்படுவார்கள்.*
*18. சுற்றுலா தொடர்பான செயற்பாடுகளுக்கு மேற்கூறப்பட்டவற்றில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.*
*19. மாவட்ட / உள்ளூர் கொவிட் பணி குழுக்களால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்கள் கண்டிப்பாக பேணப்பட வேண்டும்.*

*மேற்கூறப்பட்ட அனைத்து செயல்பாடுகளும் கொவிட் தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார அதிகாரிகளால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களாகும். இவை கண்டிப்பாக கடைபிடிக்கப்பட வேண்டும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தன அறிவுறுத்தியுள்ளார்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
நிம்மதி அடைவீர்கள். பயம் தீரும். சாதனைக்கு முயல்வீர்கள். சேமிப்பு உயரும். புதிய திட்டம் ஒன்று நிறைவேறும். உயர் கல்வி, பணிநிலை குறித்து இன்று யோசிப்பீர்கள்.

**இடபம்**
முன்பு உதவிய சிலரைச் சந்தித்து மகிழ்ச்சியடைவீர்கள். வெளிநாட்டில் உள்ள குழந்தைகளின் மூலம் நல்ல செய்தி வரும். வியாபாரம் சூடுபிடிக்கும். பெண்களின் கவலை தீரும்.

**மிதுனம்**
உங்களின் முயற்சிகளில் அதிக கவனம் செலுத்துவீர்கள். உங்கள் மீது அக்கறை உள்ளவர்கள் வீண் பழி சொன்னால் கவலை வேண்டாம். வம்பில் மாட்டும் செயல் செய்யாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

**கடகம்**
உங்கள் செயலால் சிரமம் வராமல் பார்த்துக் கொள்ளுங்கள். பலகாலம் மனதை அரித்துக் கொண்டிருந்த கவலை நீங்கும். மற்றவர் தலையீட்டால் ஏற்பட்ட பிரச்னைகள் அகலும்.

**சிம்மம்**
உங்களின் பலகாலப் பொறுமைக்கு இன்று பெருமை கிடைக்கும். சேமிக்க தொடங்குவீர்கள். கனவு நனவாகும்.தவறைத் திருத்திக்கொள்வது பற்றிய விருப்பம் மேலோங்கும்.

**கன்னி**
கடன் சுமை குறைவதற்கு அக்கறையுள்ளோர் உதவுவர். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரலாம். சிக்கல் நீங்கும். நெருங்கிய நண்பர்களுக்கிடையே மனஸ்தாபங்கள் நீங்கும்.

**துலாம்**
வளர்ச்சி அதிகரிக்கும். முயற்சியில் முன்னேற்றம் உண்டு. வருங்கால நலன் பற்றிய முயற்சியில் வெற்றி கிட்டும். நண்பர்களுக்கிடையே ஏற்பட்ட வாதத்தைத் தீர்த்து வைப்பீர்கள்.

**விருட்சிகம்**
மற்றவர்களுக்கு உதவிகரமாக இருந்து மகிழ்விப்பீர்கள். சருமம் சம்பந்தப்பட்ட சிரமத்துக்குத் தீர்வு கிடைக்கும். எதுபற்றி பயந்தீர்களோ அந்த விஷயம் நல்லபடியாக முடியும்.

**தனுசு**
ஜாமீன் போட்ட தொகை திருப்பப்பட்டு நிம்மதி தரும். மனச்சுமை குறையும் நாள். உறவினர்களுடன் கவனம் தேவை. பிள்ளைகளால் மனம் மகிழும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

**மகரம்**
உறவை ஒட்டுவதில் ஆர்வம் கூடும். மகிழ்ச்சி அதிகரிக்கும். நவீன பொருட்கள் வாங்குவதில் அதிக செலவு செய்வீர்கள். பெற்றோருக்கு ஏற்பட்ட சிரமம் உங்களால் குறையும்.

**கும்பம்**
பணத்தேவை நிறைவேறும். உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். வாழ்க்கைத்துணை உங்களை பாராட்டுவார். பகைவர் மனம் மாறுவார். குழந்தைகளின் நீண்ட கால பிரச்னைகள் தீரும்.

**மீனம்**
நண்பர்கள் மூலமாக புதியவரின் அறிமுகம் கிடைக்கும். புதிய நபருடன் நட்பை இறுக்க ஆர்வம் காட்டுவீர்கள். புதிய விஷயங்களில் ஆர்வம் செலுத்தி கற்றுக் கொள்வீர்கள்.

# உடலில் உள்ள நச்சுக் கழிவுகளை அகற்றும் “ரசம்”

வைத்திய கலாநிதி செ. போல்ரன் றஜீவ்



தமிழர்களின் உணவுப் பழக்க வழக்கங்களில் மிக முக்கியமானவையாக நீராகாரம் காணப்படுகின்றது. ஏனெனில் புவியின் மத்திய கோட்டின் அயன மண்டலத்தில் உள்ள மக்களுக்கு நீர் இழப்பு அதிகமாக காணப்படும் எனவே எமது உணவுகள் நீராகாரமாகவே காணப்படுவது எம் முன்னோர்கள் நமக்கு தந்த படிப்பினையாகும். அந்த வகையில் கஞ்சி வகைகள், கூழ் வகைகள், களிகள், ரசம் என உணவு முறையை பருவ காலத்திற்கு ஏற்றாற்போல் வகைப்படுத்தி தந்திருக்கிறார்கள்.

இவை இன்று பல்வேறு திரிபுகளுக்கு உள்ளாகி எமது நாக்கின் சுவைக்காக மாற்றி மாற்றி இன்றைய இளம் தாய்மார்களின் நீராகாரமும் எமது மூன்றாம் பரம்பரையின் நீராகாரமும் வேறுபட்டிருக்கின்றது. இது தவறான வழிமுறையாகும். நம் முன்னோர்களின் அனுபவ பழக்கவழக்கத்தை தமது தேவைக்காக மாற்றினால் பின்னடைவில் தொற்றா நோய்களினால் பாதிக்கப்பட்டவர்களின் பட்டியலில் நாமும் இணைந்து விடுவோம். எனவே எம் முன்னோர்களின் பழக்கமும்இ பருவ காலத்திற்கு ஏற்ப பயன்படுத்தினால் ஆரோக்கிய வாழ்வு வாழ்வோம் என்பதில் சந்தேகமில்லை. அந்தவகையில் எல்லா பருவ காலங்களிலும் சேர்க்கக்கூடிய “ரசம்” பற்றி அவதானிக்கும்போதுஇ தமிழரின் மருத்துவம் தெளிவாக இதுபற்றிக் கூறியுள்ளது.

“ரசம்” இது உணவிற்கு முன்னர், உணவிற்கு பின்னர் என இரு பிரிவாக பயன்படுத்துகிறார்கள். அதோடு இதில் சேர்க்கப்படுகின்ற ரச சரக்குகள் மாற்றமடைகின்றன: யாழ்ப்பாணத்தில் ஒரு முறை, மட்டக்களப்பில் இன்னுமொருமுறை, திருகோணமலையில் மற்றுமொருமுறை, கண்டியில் இன்னொரு முறை. இதைவிட, ஏன் யாழ்ப்பாணத்தில் கூட நல்லூர் பிரதேசத்தில் ஒரு வகையான ரசம், தென்மராட்சியில் இன்னொரு வகையான ரசம், வலிகாமத்தில் இன்னும் வேறு ஒரு வகையான ரசம்இ தீவகப் பகுதியில் மற்றொரு வகையான ரசம் இப்படி இதன் திரிபுகள் பல. இவை ஒருபுறமிருக்க, தமிழ் மருத்துவம் கூறும் மருத்துவ முக்கியத்துவம் வாய்ந்த “ரசம்” என்ன என்பதை பார்ப்போம்.

ரசம்- ரசத்தில் எட்டுவகையான பொருட்களைச் சேர்த்து தயாரிக்கிறார்கள். இவை “திரிதோஷ சமனப்பொருட்கள்” என்று அழைக்கப்படும். திரிதோஷம் என்பது பற்றி நாம் யாவரும் அறிந்ததே அதாவது வாதம்- வளி, பித்தம் - அழல், கபம் - ஐயம் இவற்றை சமப்படுத்தி, உடலை சமநிலையில் வைத்திருப்பது திரிதோஷ சமனப்பொருட்கள். இந்த எட்டு வகையான திரிதோஷ சமன பொருட்களிலும் எமது சமையலறையில் உள்ளவையே.

நாம் தமிழ் மருத்துவத்தில் கூறப்பட்ட இந்த எட்டு வகையான பொருட்களைக் கொண்டு ரசம் தயாரித்து அதை பயன்படுத்தி ஆரோக்கியமாக இருப்போம்:

1. மிளகு - Piper nigrum, உலர் கனி
2. சுக்கு - Zingiber officinalis – வேர்த்தண்டுக்கிழங்கு
3. சீரகம் - Cuminum cyminum - உலர் கனி
4. வெந்தயம் - Trigonella foenum greekcum – உலர்விதை
5. மஞ்சள் - Curcuma longa - வேர்த்தண்டுக்கிழங்கு
6. உள்ளி – Allium sativum – தண்டு குமிழ்
7. பெருங்காயம் - Ferula asafoetida – ரெசின்
8. ஏலம் - Elacteria cardamom - உலர் கனி

இவை அனைத்தையும் சேர்ந்து ரசம் தயாரிக்கப்படுகிறது.

கிழமை ஒன்றில் இரண்டு முறையாவது ரசம் அருந்த வேண்டும். இந்த ரசம் பல நவீன விஞ்ஞான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு உடல் செயற்பாடுகளின் விளைவாக வருகின்ற நச்சுக் கழிவுகள் அதாவது உண்ணும் உணவின் சாரம் குருதிக்குள் கொண்டு செல்லப்பட்டு பல அனுபவ தொழில்களில் மூலம் நச்சுக் கழிவுகளை வெளியேற்றுகிறது என நிரூபிக்கப்பட்டுள்ளது.

நாங்கள் உண்ணுகின்ற உணவும் எங்களுடைய எண்ணங்கள் சிந்தனைகள் வருகின்றன நச்சுத்தன்மைகளும், ஈரலில் நஞ்சகற்றும் தொழிற்பாட்டையும், சிறுநீரகத்தில் கழிவகற்றும் தொழிற்பாட்டையும், உணவுக் கால்வாயில் மலமகற்றும் தொழிற்பாட்டையும் உடலில் செரிமானத் தன்மையும் கூட்டும் என்ற வகையில் இந்த ரசம் செயற்படுகின்றமை நவீன விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்ட விடயமாகும்.

எனவே இந்த எட்டு சமையலறையில் உள்ள சரக்குகளை பயன்படுத்தி, அவசியம் அவற்றை அஞ்சறைப் பெட்டியில் வைத்து பாதுகாத்து, ரசத்தை தயாரித்து கிழமையில் இரு தினங்கள் மதிய உணவுக்குப் பின்னர் ஆக அல்லது சோற்றுடன் தனியே ரசமும் சேர்த்து உண்ணுவதன் மூலம் ஆரோக்கியமான உடல், உள சுகத்துடன் நீண்ட நாட்கள் வாழலாம்.

மேலும் இந்த ரசம் ஆனது கோவிட் 19 தொற்று ஏற்படாதவர்களுக்கு இனி தொற்று ஏற்படாமல் இருக்கவும், தொற்று ஏற்பட்டவர்களுக்கும், தொற்று ஏற்பட்டு அதிலிருந்து விடுபட்டு மீண்டு வந்தவர்களுக்கும் என மூன்று நிலைகளிலும் ரசத்தை தயாரித்து பயன்படுத்துவதன் மூலம் நமது எதிர்காலத்தின் ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும்.

ரசத்தை பயன்படுத்தி எம் முன்னோர்கள் நமக்கு தந்த உணவு பழக்கவழக்க, கலாச்சார விழுமியங்களை மறந்துவிடாது பாதுகாப்போம்! ■

# வவுனியாவில் மயங்கி விழுந்த மூதாட்டிக்கும் தொற்று உறுதி

வவுனியா, ஒக. 22

இலங்கையில் "டெல்டா" திரிபு வைரஸ் மிக வேகமாக பரவிவரும் நிலையில் வவுனியாவில் கொவிட் மரணங்கள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

நேற்று முன்தினம் கிணற்றில் குதித்த நிலையில் உயிரிழந்த கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்த நிலையில் மயங்கி விழுந்து உயிரிழந்த மூதாட்டிக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு வவுனியாவில் உயிரிழந்த இரு பெண்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மகாறம்பைக் குளம் பகுதியில் கிணற்றில் விழுந்த பெண் ஒருவர் அயலவர்களால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும் அவர் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. சம்பவத்தில் யசிந்தா (வயது-28) என்ற குடும்ப பெண்ணே மரணமடைந்துள்ளார்.

இதேவேளை, வவுனியா குருமன்காடு பகுதியில் திடீர் என மயங்கி விழுந்த வயதான பெண் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்தார்.

அவருக்கு முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் கொரோனா தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணையில் கத்தோலிக்க ஆயர்கள் அதிருப்தி!

*அரசை சாடினார் குருநாகல் மறைமாவட்ட ஆயர்*

கொழும்பு, ஒக. 22

**2019 ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகளை அரசாங்கம் தாமதப்படுத்துவதாக இலங்கையின் கத்தோலிக்க திருச்சபைப் பிரதிநிதிகள் குற்றம்சாட்டியுள்ளனர்.**



குருநாகல் மறைமாவட்ட ஆயர் கித்சிறி பெர்னாண்டோ இது குறித்து தெரிவிக்கையில்,

குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணைகளின் மந்தமான தன்மையில் நடைபெறுகின்றன எனத் தனது ஏமாற்றத்தை வெளிப்படுத்தினார்.

விசாரணைகளின் முன்னேற்றத்தில் அவர்கள் அதிருப்தி அடைந்துள்ளதாக தெரிவித்த ஆயர், விசாரணைகளை நடத்துவதில் அரசாங்கத்தின் தயக்கத்தை புரிந்து கொள்ள முடியவில்லை என்றார்.

விசாரணைகள் நடந்து கொண்டிருப்பதாக அரசாங்கம் கூறியுள்ளது. ஆனால் தாக்குதல்களின் மூளையைப் பற்றி பேசவில்லை என்றும் அவர் கூறினார்.

தாக்குதல்களில் கொல்லப்பட்ட அப்பாவி உயிர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும், உண்மையை மறைக்க முடியாது என்று ஆயர் கூறினார்.

# தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி 55,842 பேர் இதுவரை கைதாகினர்!

கொழும்பு, ஒக. 22

கொரோனாத் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் இலங்கையில் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி நடமாடிய குற்றச்சாட்டில் மேலும் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 6.00 மணியுடன் நிறைவு பெற்ற கடந்த 24 மணி நேரத்தில் இவ்வாறு தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய குற்றச்சாட்டில் 186 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கமைய, தனிமைப் படுத்தல் சட்டம் அமுலுக்கு வந்த கடந்த ஒக்ரோபரிலிருந்து இதுவரையில் 55,842 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாண எல்லைப்பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 12 சோதனைச் சாவடிகளில் மேல் மாகாணங்களில் இருந்து வெளியேறிய 735 வாகனங்களும் 1,261 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே மேல் மாகாணத்துக்கு பிரவேசித்த 787 வாகனங்களும், 1, 437 நபர்களும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது. மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாட்டினை மீறி மேல் மாகாணத்துக்குள் பிரவேசிக்க முயன்ற 191 வாகனங்கள் மற்றும் 471 நபர்கள் திருப்பியனுப்பப் பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# வவுனியாவில் கிணற்றுக்குள் குதித்த இளம் கர்ப்பிணிப் பெண் உயிரிழப்பு

## பரிசோதனையில் கொரோனா உறுதி

கொழும்பு, ஒக. 22

வவுனியாவில் கிணற்றுக்குள் குதித்து இளம் கர்ப்பிணித் தாயொருவர் உயிரை மாயத்துக் கொண்ட நிலையில் அவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இடம் பெற்றுள்ள இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியா, மகாறம்பைக் குளம் பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய கர்ப்பிணிப் பெண் ஒருவர் கிணற்றுக்குள் குதித்து தற்கொலைக்கு முயற்சித்துள்ளார்.

இதனையடுத்து கிராம மக்கள் மற்றும் உறவினர்கள் குறித்த பெண்ணைக் கிணற்றில் இருந்து மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

எனினும் சிகிச்சை பலனின்றி குறித்த கர்ப்பிணிப் பெண் மரணமடைந்தார்.

இதையடுத்து அவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவருடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# அன்டிஜென், பி.சி.ஆர் சோதனை ஊரடங்கு காலத்திலும் நடக்கும்

## சாவகச்சேரி சுகாதார அதிகாரி பணிமனையினர் அறிவிப்பு

கொழும்பு, ஒக. 22

நாடு தழுவியதாக நேற்று முன் தினம் இரவு 10.00 மணி முதல் பொது முடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள நிலையில் குறித்த காலத்தில் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட அவசியமான பொதுமக்களிடம் இருந்து கொவிட் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீடுகளில் தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் மற்றும் கொரோனா அறிகுறிகள் உள்ளவர்கள் தமது பரிசோதனைகள் இக் காலத்தில் தடையின்றி பெற்றுக் கொள்ள முடியும்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனை செவ்வாய்க் கிழமை, வியாழக்கிழமை, சனிக்கிழமை ஆகிய தினங்களில் காலை 8.30 மண யிலிருந்து 9.30 மணிவரை இடம் பெறும் என சாவகச்சேரி சுகாதாரப் பணி மனையினர் அறிவித்துள்ளனர்.

எனவே வீதி தடைகளில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினர் மற்றும் பொலிஸாருக்கு தகவலை உரிய முறையில் தெரிவிப்பதனூடாக சுகாதாரப் சேவைகள் பணிமனைக்கான பயணங்களை சிரமமின்றி மேற்கொள்ள முடியும் என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# டிக்கோயா வைத்தியசாலையில் 4 மருத்துவர்களுக்கு கொரோனா

கொழும்பு, ஒக. 22

டிக்கோயா மாவட்ட ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றும் நான்கு வைத்தியர்கள் உட்பட 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலை ஊழியர்கள் 07 பேர், தாதியர்கள் 06 பேர் மற்றும் 04 வைத்தியர்களுமாக 17 பேருக்கே கொரோனா தொற்று உறுதியானதாக பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேலும் வைத்தியசாலையில் கொரோனா நோயாளர் விடுதியில் அதிகளவான தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருவது டன் வைத்தியசாலையில் வைத்திய சேவை நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

தொற்றுக்குள்ளான 17 பேரையும் கொரோனா சிகிச்சை மத்திய நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களோடு தொடர்பைப் பேணியவர்களை சுயதனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர் .

இதேவேளை, பொகவந்தலாவை வைத்தியசாலைக்கு சிக்சைக்காக வந்த நோயாளர்களில் அதிகமானோருக்கு கொரோனா தொற்று இருப்பதாக பொகவந்தலவை வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களுக்கு கடந்த இரண்டு தினங்களில் மேற்கொண்ட அன்டிஜென், பி.சி. ஆர் பரிசோதனைகளில் 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

(அ)

# 'பொட்ட' நௌபருக்கும் கொரோனா

கொழும்பு, ஒக. 22

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில் பூசா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிழல் உலக தாதா பொட்ட நௌபருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள அவர், பரிசோதனைக்காக கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார். இதன்போது மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையில் வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# முகமாலை குளத்தில் கைக்குண்டு மீட்பு

கிளிநொச்சி, ஒக. 22

முகமாலையிலுள்ள கோவானக்குளத்தில் இருந்த கைக்குண்டு பாதுகாப்பாக அகற்றப்பட்டுள்ளது.

அந்தக் குளத்தை அபிவிருத்திக்காக பார்வையிடச் சென்ற இராஜாங்க அமைச்சர் அனுராத ஜயரத்னவின் இணைப்புச் செயலாளர் சுமுது தலைமையிலான குழுவினரால் குறித்த கைக்குண்டு அடையாளம் காணப்பட்டது.

அதன்பின்னர் குறித்த பகுதியை ஆபத்தான பகுதியாக அடையாளப்படுத்தி அருகிலுள்ள இராணுவ சோதனைச் சாவடிக்கு சம்பவம் தொடர்பில் தகவல் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற படையினர், பாதுகாப்பான முறையில் கைக்குண்டை அகற்றினர்.

(அ)

# ஊரடங்கால் வருமானம் இழந்த குடும்பங்களுக்கு 2 ஆயிரம் ரூபா

கொழும்பு, ஒக. 22

கொவிட்-19 தொற்று நோயால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக வருமான இழப்பை எதிர்கொண்டுள்ள மக்களுக்கு 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கும் திட்டம் தொடர்பான முதற்கட்டப் பணிகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகும் என்று நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அரசின் மாதாந்த உதவித் தொகை எதனையும் பெற்றுக் கொள்ளாத குடும்பங்களுக்கே இந்த 2 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

(அ)

# 72 மணி நேரத்துக்குள் 11,321 பேருக்கு தொற்று!

## கொரோனாவின் பிடியில் திணறும் இலங்கை

கொழும்பு, ஒக. 22

இலங்கையில் நாளாந்தம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வரும் நிலையில் நேற்று முன்தினம் இதுவரையான நாட்களில் அதிகூடிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்ட நாளாக பதிவாகியுள்ளது.

நேற்று முன் தினம் (ஒகஸ்ட் - 20) புதுவருட கொத்தணியில் 3835 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்த நிலையில் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பியவர்களில் மேலும் 4 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் 20,274 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இவ்வாறு நேற்று முன்தினம் 3839 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதேபோன்று கடந்த 19ஆம் திகதி 3806 தொற்றாளர்களும், ஒகஸ்ட்-18 இல் 3676 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டிருந்தனர்.

இதன் மூலம் கடந்த மூன்று நாட்களில் மட்டும் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 11,321 ஆக பதிவாகியுள்ளது.

இதையடுத்து இலங்கையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களது மொத்த எண்ணிக்கை 381,812 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 19ஆம் திகதி 195 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்ட நிலையில், கொவிட் உயிரிழப்புகளிலும் அதிகூடி மரணங்கள் பதிவாகிய நாளாக ஒகஸ்ட்-19 ஆம் திகதி பதிவாகியுள்ளது.

இதன்மூலம் இலங்கையில் இதுவரை கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்தவர்களது மொத்த எண்ணிக்கை 6985 ஆக அதிகரித்துள்ளது.

(அ)

# திட்டமிடல் இல்லாத அரசால் மக்களே தொடர்ந்தும் பாதிப்பு

## செல்வம் எம்.பி. கூறுகிறார்

மன்னார், ஒக. 22

அரசாங்கம் தான்தோன்றித்தனமாக ஒவ்வொரு செயற்பாட்டையும் முன்னெடுப்பதினால் பொதுமக்கள்தான் அதிகளவு அவதிக்குள்ளாகும் நிலைமை ஏற்பட்டுள்ளதாக வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் திடீரென கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்தவேளையில், மருத்துவர்களும் சுகாதார தரப்பினரும் இணைந்து நாட்டை முடக்கி கொரோனாவை கட்டுப்படுத்துங்கள் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

ஆனால், அதன்போது அந்த விடயத்தை கவனத்தில் கொள்ளாமல் செயற்பட்டுவந்த அரசாங்கம், தற்போது வேண்டா வெறுப்பாக எத்துயர் ஏற்பட்டாலும் அதனை மக்களே எதிர்கொள்ளட்டும் என்ற விரோத சிந்தனையுடன் திடீரென நாட்டை முடக்குவதாக தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் திடீர் அறிவிப்பினால், பொது மக்கள் பலரும் நகரப்பகுதியில் அதிகளவில் ஒன்று கூடியிருந்தனர். இது கொரோனா தொற்றை நிறுத்துவதற்கு பதிலாக அதிகரிப்புக்கே வழிவகுத்துள்ளது.

அதாவது வங்கிகள், நகை அடகு வைக்கும் இடங்களில் மக்கள் அதிகமாக காணப்பட்டனர். வர்த்தக நிலையங்களில் நீண்ட வரிசை காணப்பட்டது. இது பாரதூரமான விளைவை ஏற்படுத்தும்.

அரசாங்கம் ஒரு நாள் தவணை வழங்கி நாட்டை முடக்கியிருக்கலாம். திட்டமிடல் இல்லாத அரசாங்கத்தால் மக்களே தொடர்ந்தும் பாதிக்கப்படுகின்றனர் - என்று கூறியுள்ளார்.(அ)

# சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்ற சந்நிதியான் தேர்த்திருவிழா





யாழ்ப்பாணம்,ஒக.22

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவ தேர்த்திருவிழா நேற்று காலை 9 மணியளவில் விசேட பூஜை ஆராதனைகள் இடம்பெற்று உள்வீதியில் முருகப்பெருமான் சிறிய தேரில் வலம் வந்து சிறப்பாக இடம்பெற்றது.

நாடுபூராகவும் ஊரடங்கு அமுல் படுத்தப்பட்டுள்ள நிலையில் சுகாதார அமைச்சினால் ஆலயங்களுக்கு என வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை பின்பற்றி மட்டுப்படுத்தப்பட்ட அடியவர்களோடு சிறப்பாக தேர் உற்சவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.


(அ-2-3)

# 60 வகையான மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலை அறிவிப்பு

கொழும்பு, ஒக. 22

நாட்டில் 60 வகையான மருந்துகளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயித்து சிறப்பு வர்த்தமானி அறிவிப்பை சுகாதார அமைச்சர் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல வெளியிட்டுள்ளார்.

இதில் மாத்திரைகள், திரவ மருந்துகள் உள்ளடங்குகின்றன.





தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் காரணமாக நேற்று முற்றாக முடங்கிய யாழ். நகரப் பகுதி.

# வவுனியாவை மிரட்டும் கொரோனா; மேலும் 150 பேருக்கு தொற்று உறுதி!

வவுனியா, ஒக. 22

வவுனியாவில் மேலும் 150 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 150 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

நேற்று முன் தினம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிவுகளின் ஒரு தொகுதி வெளியிடப்பட்டிருந்தபோது 144 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தார்கள்.

இதேவேளை, வவுனியாவில் கடந்த சில நாட்களாக கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 100 ற்கும் அதிகமாக சடுதியாக அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மன்னாரில் நாளுக்கு நாள் உயரும் தொற்று; 20 நாள்களில் 356 பேருக்கு கொரோனா!

மன்னார், ஒக. 22

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லுகின்ற நிலையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மேலும் புதிதாக 29 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் நேற்று சனிக்கிழமை காலை விடுத்துள்ள கொரோனா நிலைவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாலை மேலும் 29 கொரோனா தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக வந்தபோது மேற்கொள்ள பி.சி.ஆர். பரிசோதனைகளின் 16 தொற்றாளர்களும், சமூகத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனைகளின்போது 13 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் முசலி பிரதேச செயலகத்தில் 4 தொற்றாளர்களும், நானாட்டான் பிரதேச சபையில் 2 தொற்றாளர்களும், விடத்தல்தீவு பிரதேச வைத்தியசாலையில் 2 தொற்றாளர்களும், தலைமன்னார் பிரதேச வைத்தியசாலையில் 2 தொற்றாளர்களும்,மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் 2 தொற்றாளர்களும், முருங்கன் தள வைத்தியசாலையில் 1 தொற்றாளர் இவ்வாறு அன்டிஜென் பரிசோதனை மூலம் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இம் மாதம் முதலாம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை 356 கொரோனா தொற்றாளர்களும், இவ்வருடம் மாத்திரம் 1380 தொற்றாளர்களும்,மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 1397 தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


மாவட்டத்தில் தற்போது வரை 13 கொரோனா மரணங்கள் நிகழ்ந்துள்ளது - என்றுள்ளது.

(அ)




# தாய்மொழித் தமிழில் ஒலிக்கும் மந்திரங்கள் பக்தர் மனங்களில் ஆன்மீக சிலிர்ப்பு

## தி. மு. க. அரசு மதத்துக்கு எதிரானதல்ல



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

*ஆரூர் அமர்ந்த அரசே போற்றி*
*சீரார் திருவையாறா போற்றி*
*ஏகம்பத்துறை எந்தாய் போற்றி*
*பாகம் பெணுரு ஆனாய் போற்றி!*

ஆன்மீக உணர்வுடன் மனதை சிலிர்க்கவைக்கும் இந்த மந்திரங்கள் தாய்மொழித் தமிழில் ஒலித்து, கோவில்களில் குவியும் பக்தர்களுக்கு உணர்வெழுச்சியைத் தருகின்றன. இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஓகஸ்ட் 5ஆம் திகதி தமிழில் அர்ச்சனை செய்யும் முறையைப் புகழ்பெற்ற கபாலீஸ்வரர் கோவிலில் துவக்கி வைத்தார். தி. மு. க. தலைவர் மு. க. ஸ்டாலினின் தேர்தல் வாக்குறுதிப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 47 கோவில்களில் முதற்கட்டமாகத் தமிழில் வழிபாடு செய்யும்முறை தொடங்கப்பட்டிருக்கிறது. தமிழில் அர்ச்சனை செய்யும் நடைமுறை ஸ்டாலிலினின் தந்தையான மு. கருணாநிதியின் ஆட்சிக்காலத்திலேயே இருந்ததாக கபாலீஸ்வரர் கோவில் விழாவில் சேகர்பாபு நினைவுபடுத்தினார். தேவார திருவாசகங்களில் உள்ள பாடல்களைப் பெருமையுடன் பாடுவதாக அர்ச்சகர்கள் தந்த பேட்டிகள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பு செய்யப்பட்டன. அந்நிய மொழியான சமஸ்கிருதத்தில் மந்திரங்கள் சொல்லப்பட்டபோது எதுவும் புரியாது என்றும், தமிழ் மொழியில் வழிபாடு நடக்கும்போது அர்த்தம் புரிவதால் இறை உணர்வு பெருகுகிறது என்று பக்தர்களும் பேட்டியளித்தார்கள்.

இப்போது உள்ள நடைமுறையின்படி, சமஸ்கிருதத்தில் அர்ச்சனை செய்யப்படுவது தொடரும் என்றும், கேட்பவர்களுக்குத் தமிழ் அர்ச்சனைகள் செய்யப்படும் என்றும் சேகர் பாபு தெளிவுபடுத்தினார். அந்தந்த கோவில்களில் தமிழ் அர்ச்சனை செய்யக்கூடிய அர்ச்சகர்களின் பெயர்களும் அலைபேசி எண்களும்கொண்ட பலகையை இந்து சமய அறநிலையைத் துறை ஏற்பாடு செய்திருக்கிறது. பக்தர்கள் வழிபாட்டுக்காக அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் விளக்கினார்.

சமஸ்கிருதத்துக்கு மாற்றாக கோவில் பூசைகளில் தமிழைப் பயன்படுத்துவது சரிதானா என்று சமூக வலைதளங்களும், பரபரப்பாக இயங்குகிற தொலைகாட்சி சனல்களும் விவாதிக்க ஆரம்பித்தன. சில காவி அடிப்படைவாதிகள், சமஸ்கிருதம் தேவ பாஷை என்று வாதிட்டார்கள். திராவிட ஆட்சி கடவுளுக்கும் இந்துக்களுக்கும் எதிரானது என்பதால் பக்தர்களின் மனதைப் புண்படுத்துவதற்காகவே பாரம்பரிய ஆகம விதிப்படி நடக்கும் சடங்குகளை மாற்றியமைப்பதாக அவர்கள் குற்றம் சாட்டினர். அதிர்ஷ்டவசமாக இதுபோன்ற பிற்போக்கு சிந்தனை கொண்டவர்கள் மிகவும் சிலர்தான். தி. மு. க. அரசு மதத்துக்கு எதிரானதல்ல என்றும், பக்தர்களின் நம்பிக்கைகளைப் புண்படுத்தமாட்டோம் என்றும் ஸ்டாலி னும் சேகர்பாபுவும் உறுதியளிப்பதைப் பலர் நம்புகிறார்கள்.

இது, கடவுளர்களுக்கும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கவேண்டும். தங்களுக்கே புரியாத மொழியில், தவறாக உச்சரிக்கிறோமா என்றுகூடத் தெரியாமல் அர்ச்சகர்கள் சொல்லும் மந்திரங்களைக் கடவுள் இனி கேட்கவேண்டியதில்லை. தமிழில் மந்திரங்கள் சொல்லும்போது அந்த அர்த்தத்தை உள்வாங்கும் பக்தர்கள் ஆன்மீக ஞானத்தின் ஆழத்துக்குள் கவனத்தோடு ஈடுபடுவதால், கடவுளர்களுக்கு மேலும் மகிழ்ச்சியாகவே இருக்கும். கருவறையில் கிட்டத்தட்ட தியான நிலையில் நின்றுகொண்டு, சிவனின் அருள் வேண்டிக் கண்ணீர் மல்கி, அர்ச்சகர்களின் அன்னைத் தமிழ் மந்திரங்களைத் தாமும் ஓதியபடி நின்ற பல பக்தர்களைப் பார்த்தேன்.

கருவறைக்குள் சமீபகாலமாக ஆட்சி செய்துகொண்டிருக்கும் சமஸ்கிருத மந்திரங்களைக் கேட்டபடியே மெல்லிய குரலில் தமிழ் மந்திரங்களை சொல்லிக்கொண்டு தியானிக்கும் பக்தர்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால், அர்ச்சகர்களிடையே தனக்குத் தகுதியான ஒரு முக்கியமான இடத்தைத் தமிழ்மொழி பிடித்திருக்கிறது. சிறுபான்மையினரைக் கவர்வதற்காக இந்துக்களைப் புண்படுத்துகிறார்கள் என்று எந்த தி. மு. க. அரசின் மீது உயர்சாதியினர் குற்றம் சாட்டினார்களோ, அதே தி. மு. க. அரசு தான் இதை சாதித்துக் காட்டியிருக்கிறது.




அது மட்டுமல்லாமல், அறநிலையத் துறையால் நிர்வகிக்கப்படும் கோவில்களில் உள்ள அர்ச்சகர் காலியிடங்களையும் அரசு வேகமாக நிரப்பிவருகிறது. ஆகமப் பயிற்சி பெற்றிருந்தும் பல வருடங்களாக வேலை இல்லாமல் தவித்துவந்த அர்ச்சகர்களின் முகத்தில் இது மகிழ்ச்சியை வரவழைத்திருக்கிறது. “கடந்த பத்து ஆண்டுகளில் எந்த அர்ச்சகரும் நியமிக்கப்படவில்லை. இதற்கு முன் இருந்த அ. இ. அ. தி. மு. க. அரசு அறநிலையத்துறையை சீர்குலைத்துவிட்டது” என்றார் அமைச்சர் சேகர்பாபு. கோவில் நிலங்களையும் கட்டடங்களையும் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்தவர்களிடமிருந்தும், குறைந்தபட்ச வாடகை தந்தவர்களிடமிருந்தும் இவர் மீட்டெடுத்தது பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. அதனால், தமிழ்நாட் டுக் கடவுள்கள் பணக்காரர்களாகிவிட்டார்கள்.

இந்த மாநிலத்தில் நடக்கும் இன்னொரு தெய்வீகப் புரட்சியையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆகமவிதிகளிலும் கோவில் சடங்குகளிலும் பயிற்சிபெற்ற பெண்களை இந்த அரசு அறநிலையத் துறைக் கோவில்களில் ஓதுவார்களாகப் பணியமர்த்தியிருக்கிறது. இதற்கு முன்பு கிராமங்களில் உள்ள அம்மன் கோவில்களில் மட்டுமே பெண் பூசாரிகளைப் பார்த்திருப்போம். ஆனால், இனிமேல் நகரத்தின் பெரிய கோவில்களில் உள்ள கருவறைகளிலும் இந்தக் காட்சியைப் பார்க்கலாம். தமிழ் நாட்டின் முதல் பெண் ஓதுவாராகி யிருக்கும் சுகான்சனா, தெற்கு சென்னையின் தாம்பரத்தை அடுத்த மாதம்பாக்கத் தில் உள்ள தேனுபுரீஸ்வரர் கோவிலில் ஓகஸ்ட் 15ஆம் திகதி தேவார திருவாசகங்களைப் பாடி, தன் பணியைத் தொடங்கினார்.

இந்தக் கோவில் புரட்சியில் ஓர் அரசியல் கோணமும் இருக்கிறது. இந்துக்களுக்கும் கடவுள்களுக்கும் எதிரான கட்சி என்று எதிர்கட்சிகள் வைக்கும் குற்றச்சாட்டை இந்தப் புரட்சி மூலம் தி. மு. க, அடித்து நொறுக்க விரும்புகிறது. எண்ணிக்கையில் குறைந்தவர்களாக இருந்தாலும், பா. ஜ. க. வின் பாரம்பரிய ஆதரவாளர்களான




## சுவாரஸ்யமான உச்ச கட்டத்தில் கொடநாடு வழக்கு!

உயர்சாதிகள், குறிப்பாக பிராமணர்களின் ஆதரவைப் பெறமுடியும் என்று நம்புகிறது. முன்பு வட இந்தியாவில் சில இடங்களில் வெற்றிபெற்ற தனது சாதி அரசியலை இங்கும் நடத்தி, 2024 லோக்சபா தேர்தலில் பா. ஜ. க. வெற்றிபெற நினைக்கிறது. அது ஒரு வெற்றுக் கனவு. 1999இல் வாஜ்பாயி அரசு ஜெயலலிதாவால் கவிழ்க்கப்பட்டபோது ஓர் அநுதாப அலை எழுந்தது. அதனாலும், பாகிஸ்தானுக்கு எதிரான கார்கில் போரின் வெற்றியாலும் ஓரளவு பா. ஜ. க. வுக்கு இந்த திராவிட மாநிலத்தில் வாக்குகள் கிடைத்தன. இந்திய வாக்காளர்கள் வாஜ்பாயிக்கு ஓர் அமோக வெற்றியைப் பரிசளித்தனர். தன் ஐந்தாண்டு கால ஆட்சியை முழுவதுமாக செயல்படுத்திய காங்கிரசல்லாத கட்சியைச் சேர்ந்த முதல் பிரதமர் என்ற பெருமையும் அவருக்குக் கிடைத்தது.

ஜெயலலிதாவைப் பொறுத்தவரை அவரது 1991-96 ஊழல், அ. இ. அ. தி. மு. க. வின் அடுத்தடுத்த தேர்தல் வெற்றிகளை பாதிக்கவில்லை என்றே சொல்ல வேண்டும். 2001இல் மீண்டும் ஆட்சிக்கு வந்த அவர், இருமுறை முதல்வரானார். ஊழல் வழக்குகளால் தகுதி இழந்தபோது இடையில் ஆறு மாதங்களுக்கு ஓ. பன்னீர்செல்வம் முதல்வராக அமர வைக்கப்பட்டார். விதியின் திட்டம் வேறு மாதிரியாக இருந்தது. அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் நோய் வாய்ப்பட்ட ஜெயலலிதா, 75 நாட்கள் மருத்துவமனையில் கழித்துவிட்டு இறந்தார். அம்மாவின் உடன்பிறவா சகோதரியான சசிகலா, பன்னீர்செல்வத் தையே மீண்டும் முதல்வராக முன்னிறுத்தினார். அடிமையாக இருக்க அவர் ஒத்துக்கொள்ளாதபோது, குறைந்த காலத்திற்குள்ளேயே எடப்பாடி பழனிச்சாமி முதல்வராக்கப்பட்டார்.

தன் கிரீடத்தை எடப்பாடி விலைக்கு வாங்கினார் என்று ஒரு குற்றச்சாட்டு உண்டு. இதுவரை இந்த மாநிலம் காணாத ஓர் ஊழல் அரசின் தலைவராக அவர் தனது சிம்மாசனத்தை நான்கு ஆண்டுகள் காப்பாற்றிக்கொண்டிருக்கிறார். புதிய தி. மு. க. ஆட்சியில் தொடர்ந்து வீசப்படும் ‘ரெய்டுகள்’ மற்றும் ஊழல் வழக்குகளுக்கு இதுவே காரணம். ஆனால், தங்களுக்கு முந்தைய அரசுகளின் தீய செயல்களை விசாரிப்பதில் மென்மையோடு செயல்படும் வழக்கத்தையும், அதைக் கண்டுகொள்ளாமல் இருக்கும் மக்களின் எண்ணத்துடனும் ஒப்பிடும்போது இது சற்றே மாறுபட வாய்ப்பு இருக்கிறது. அம்மாவும் சின்னம்மாவும் இணைந்து சட்டவிரோதமாகக் குவித்த சொத்து, சின்னம்மாவின் ஓட்டுநர், வாட்ச்மேன் ஆகியோரின் மரணங்கள், எடப்பாடி அரசின்போது நடந்த வேறு சில விஷயங்கள் பற்றிய 2017 கொடநாடு வழக்கு, தனது சுவாரஸ்யமான உச்சகட்டதை எட்டியுள்ளது.

“என்னை ஸ்டாலின் ஒரு கொலைகாரராக சித்தரிக்க முயற்சி செய்கிறார், இது பழிவாங்கும் நடவடிக்கை” என்று அலறிய எடப்பாடி, ஓகஸ்ட் 18ஆம் திகதியன்று சட்டசபையிலிருந்து கட்சி உறுப்பினர்களுடன் வெளியேறினார். இந்த அரசுதான் கொடநாடு வழக்கு மீதான விசாரணைக்கு உத்தரவிட்டிருக்கிறது என்று தெரிந்தபின்பு இந்த வெளிநடப்பு அரங்கேறியது. தெகல்காவின் முன்னாள் ஆசிரியர் மாத்யூஸ், கொடநாடு கொலைகளுக்கு எடப்பாடிதான் காரணம் என்று குற்றம் சாட்டி, 2018இல் கலைஞர் ரிவிக்கு அளித்த பேட்டியும் சமூக வலைத்தளங்களில் மறுபடி வேகமாக சுற்றிக்கொண்டிருக்கிறது.

பிபிசி ஒரு கருத்துக்கணிப்பை நடத்தியது : இது பழிவாங்கும் நடடிக்கை என்று எடப்பாடி சொல்வது உண்மைதானா? கோபமாக வந்த பதில்கள் அவரது அலறலை மட்டுப்படுத்தின. ஒரு பதிவாளர், 2017ஆம் ஆண்டே கொட நாடு வாட்ச்மேனின் கொலைபற்றிய விசாரணை என்னவாயிற்று என்று ஓ. பன்னீர்செல்வம் அப்போதைய முதல்வர் எடப்பாடியை நோக்கிக் கேட்கும் வீடியோவைப் பகிர்ந்திருந்தார். அந்த ட்விட்டர் பதிவும் பெரிய வரவேற்பைப் பெற்றது.

அடுத்தடுத்த நாட்கள் சுவாரஸ்யமானவையாக இருக்கும். வயதால் மட்டுமல்லாமல், தொடர்ந்து வெற்று முயற்சிகளாகப் போய்க்கொண்டிருக்கும் ஊழல் வழக்குகளாலும் தளர்ந்துபோயிருக்கும் பத்திரிக்கையாளன் என்ற முறையில், எதாவது ஒரு வழியில் இப்பொழுதாவது நீதி விரைவாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

●

# இலங்கை மீதான மேற்குலகின் நெருக்கடியை கையாளுவாரா புதிய வெளியுறவு அமைச்சர்?

**அமைச்சரவை மாற்றம் என்ற பெயரில் ஜி.எல்.பீரிஸை வெளிவிவகார அமைச்சராக்கியதன் மூலம் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான மேற்கு நாடுகளை கையாளுவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்தியாவை கையாள மிலிந்த மொறகொடவின் வழிவரைபடம் அமைவதுபோல் அமெரிக்காவை கையாள திருகோணமலையில் 33000 ஏக்கர் வழங்கப்பட்டதுபோல் பீரிஸை முன்னிறுத்தி ஐரோப்பிய நாடுகளை குறிப்பாக, பிரித்தானியாவை கையாளும் உத்தியை இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது.**



கே.ரீ.கணேசலிங்கம்

இலங்கை அரசாங்கம் பல நெருக்கடிகளை ஒரே நேரத்தில் எதிர்கொள்ள ஆரம்பித்துள்ளது. குறிப்பாக உள்நாட்டில் பொருளாதார நெருக்கடியும், கொரோனா பெருந்தொற்று நெருக்கடியும் பாரிய சவால்மிக்க சூழலை ஏற்படுத்தி வருகிறது. அதிலும் கொரோனா பெருந்தொற்று ஆளுந்தரப்பின் எதிர்கால அரசியலையே கேள்விக்குள்ளாக்கி வருகிறது. அவ்வாறே ஜெனீவா விவகாரமும் சர்வதேச மட்டத்தில் இலங்கை ஆட்சியாளர்களுக்கும் தென்னிலங்கை அரசியலுக்கும் பாரிய நெருக்கடியாக மாறி வருகிறது. இவற்றை கையாளும் உத்தியோடு அமைச்சரவை மாற்றங்களை அவற்றிற்குரித்தான இராஜதந்திர நகர்வுகளையும் தென்னிலங்கை ஆட்சியாளர்கள் திட்டமிட்டு வருகின்றனர். அதில் மிகப்பிரதான விடயமாக இலங்கையின் வெளிவிவகார அமைச்சு கைமாற்றப்பட்டு இருப்பதன் நோக்கம் எது என்பதை விளங்கிக்கொள்வதே இக்கட்டுரையின் வெளிப்பாடாகும்.

எதிர்வரும் செப்ரெம்பர் - 13ஆம் திகதி 48ஆவது ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை விவகாரம் முன்னெடுக்கப்பட வாய்ப்பு அதிகமாக உள்ளது. அத்தகைய நிகழ்வுக்கு முன்னரே பிரித்தானியா இரு முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை முன்னெடுத்துள்ளது. ஒன்று, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணைக்குழு நிறைவேற்றியுள்ள இலங்கை தொடர்பான தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதியை ஆணைக்குழுவுக்கு ஒதுக்குவது தொடர்பில் பிரித்தானியா கவனம் எடுக்குமென பிரிட்டனின் வெளிவிவகார செயலாளர் டொமினிக் ட்ராவ் தெரிவித்துள்ளார். இரண்டு, இலங்கையின் பொலிஸாருக்கு பயிற்சி அளித்து வந்த பிரித்தானியாவின் ஸ்கொட்லான்யாட் அதனை இடைநிறுத்துவதாக அறிவித்துள்ளது என்பதை பிரிட்டன் பாராளுமன்ற உறுப்பினர் எலியற் கொல்பேர்ன் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த இருசெய்திகளும் பிரித்தானியாவின் நகர்வை வெளிப்படுத்துவதோடு கடந்த ஜெனிவா அரங்கையும் பிரித்தானியாவே வழிநடத்தியது என்ற அடிப்படையில் இலங்கை மேற்கு நாடுகள் மீதான கையாள்கையை புதிய தளத்தில் ஆரம்பித்துள்ளது. அதாவது அமைச்சரவை மாற்றத்தில் உள்நாட்டு அரசியலில் ஏற்பட்டுவரும் வங்குரோத்து நிலையை கையாள முயன்றதோடு மறுபக்கத்தில் மேற்கு நாடுகளை கையாளும் பொறிமுறையையும் அத்தகைய அமைச்சரவை மாற்றத்தின் மூலம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. கல்வி அமைச்சராக இருந்த ஜி.எல்.பீரிஸ் வெளிவிவகார அமைச்சராக மாற்றப்பட்டுள்ளார். இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்த மொறகொட இந்தியாவை நோக்கி வழிவரைபடத்தோடு புறப்பட்டது போல் ஜி.எல்.பீரிஸின் முகம் மேற்கு நாடுகளை குறிப்பாக பிரித்தானியாவை கையாளும் முகமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். இதனை சற்று விரிவாக நோக்குவோம்.

முதலாவது, ஜி.எல்.பீரிஸ் ஒரு புலமையாளர். கொழும்பு பல்கலைக் கழகத்தின் நிர்வாகப்பதவிகளிலும் சட்டத்துறையிலும் தேர்ச்சி உடையவர் என்பதோடு அரசியல்ரீதியிலான அனுபவமும் கொண்டவர் என்ற அடிப்படையில் வெளிவிவகார அமைச்சராக அடையாளப்படுத்தப்பட்டுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்தவர். அவரது சட்டப்புலமையும், அரசியல் ஆளுமையும் ஜெனிவாவில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை சுமுகமாக்குவதற்கான உபாயத்தை தருமென இலங்கை ஆட்சியாளர்கள் கணித்துள்ளனர். இலங்கையின் இனப்பிரச்சினையை ஒரு சட்டப்பிரச்சினையாகவும் பொருளாதாரப் பிரச்சினையாகவும் வடிவமைக்க முயலும் இலங்கை ஆட்சியாளர்கள் அதனை நியாயப்படுத்த ஜி.எல்.பீரிஸ்ன் முகத்தை முன்னிறுத்த திட்டமிட்டுள்ளனர்.

இரண்டாவது, ஜி.எல்.பீரிஸினது மேற்கு நாடுகளுக்கு ஏற்ற வகையிலான அவரது தோற்றம் தனித்துவமானது. குறிப்பாக முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தினேஸ்குணவர்த்தன ஆசிய பாரம்பரியங்களோடு இலங்கையின் அடையாளத்தையும் அரைகுறை சோசலிசத்தின் எச்சத்தையும் பிரதிபலிப்பவராக விளங்கும் போது பீரிஸ் பிரித்தானியரின் மரபுகளுக்கு உட்பட்ட ஆடை அணிகலன்களையும் ஆங்கில மொழி அதீத தேர்ச்சியையும் கொண்டவராக விளங்குவார் என்பதே தென்னிலங்கை ஆட்சியாளர்களது எதிர்பார்ப்பாகும். பீரிஸின் மொழியும் அவரது உடல் மொழியும் பிரித்தானிய உட்பட்ட மேற்கு நாடுகளை ஈர்த்துக்கொள்வதற்கான உபாயமாக தென்னிலங்கை ஆட்சியாளர்கள் எண்ணுகின்றனர். இதன்மூலம் இலங்கைக்கு எதிரான அணுகுமுறையை பிரித்தானியரிட மிருந்து மட்டுப்படுத்த முடியுமெனவம் குறைந்தபட்சம் கால அவகாசத்தை கோரி பெற்றுக்கொள்வதன் மூலம் அதனை வெற்றிக்கொள்ளலாமென கருதுகின்றனர்.

மூன்றாவது, புதிய வெளிவிவகார அமைச்சரான ஜி.எல்.பீரிஸ் பல பேச்சுவார்த்தை களங்களை எதிர்கொண்டவர். குறிப்பாக விடுதலைப் புலிகளுடனான ஆறு கட்டப் பேச்சுக்களின் போது கலந்து கொண்டதோடு தலைமை பேச்சாளராகவும் செயற்பட்டிருந்தார். அக்காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையில் அரசாங்கத்தின் பிரதான ஆலோசனைகள் வழங்கியதோடு சட்டரீதியான உரையாடல்களை கொண்டு செல்லவும் பீரிஸ் காரணமாக இருந்தார். ஏறக்குறைய அப்பேச்சுவார்த்தையினை கையாளும் பிரதான பங்காளியாக ஜி.எல்.பீரிஸ் செயற்பட்டமையே அவரை வெளிவிவகார அமைச்சராக அடை யாளங்காட்டியது.

நான்காவது, மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது ஆட்சிக்காலத்தில் வெளிவிவகார அமைச்சராக பணியாற்றிய காலப்பகுதியில் இலங்கைக்கு ஏற்பட்ட நெருக்கடிகளை கையாண்டுள்ளார். குறிப்பாக, மேற்கு நாடுகளாலும் இந்தியாவினாலும் முன்வைக்கப்பட்ட ஜெனிவா தீர்மானங்களை கையாளுவதில் பெரும் பங்காற்றியிருந்தார். அவரது வெற்றிகரமான வெளியுறவுக் கொள்கையே உள்நாட்டில் தமிழர் தரப்பையும் சர்வதேசத்தில் மேற்கையும் கையாளும் இராஜதந்திர செய்முறையை வெளிக்காட்டி இருந்தது. அதுவொரு கால நீடிப்பையும் ஒத்திவைப்புக்களையும் இலங்கைக்கு வழங்க உதவியது.

ஐந்தாவது, ஜி.எல்.பீரிஸினது வெளிவிவகார கொள்கை சீனாவை முன்னிறுத்தி இந்தியாவையும் மேற்கையும் கையாளும் பொறிமுறையை அதிகம் வெளிப்படுத்தியவராகவும், லக்ஸ்மன் கதிர்காமருக்கு பின்னர் உலக நாடுகள் மத்தியில் பிரபல்யமான வெளிவிவகார அமைச்சராகவும் விளங்கினார். அதுமட்டுமன்றி பீரிஸ் இலங்கை-சீன உறவை பலப்படுத்துவதிலும் அதேநேரம் மேற்கு நாடுகளை கையாளுவதிலும் தேர்ச்சி பெற்றவராக விளங்கினார்.

எனவே தான் அமைச்சரவை மாற்றம் என்ற பெயரில் ஜி.எல்.பீரிஸை வெளிவிவகார அமைச்சராக்கியதன் மூலம் இலங்கைத் தமிழருக்கு ஆதரவான மேற்கு நாடுகளை கையாளுவதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் திட்டமிட்டுள்ளனர். இந்தியாவை கையாள மிலிந்த மொறகொடவின்ன் வழிவரைபடம் அமைவதுபோல் அமெரிக்காவை கையாள திருகோணமலையில் 33000 ஏக்கர் வழங்கப்பட்டதுபோல் பீரிஸை முன்னிறுத்தி ஐரோப்பிய நாடுகளை குறிப்பாக பிரித்தானியாவை கையாளும் உத்தியை இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளது. எற்கனவே மிலிந்த மொறகொடவால் ஸ்தாபிக்கப்பட்ட பாத்பைன்டர் அமைப்பு பிரித்தானியாவை நோக்கி தனது உரையாடலை ஆரம்பித்துள்ள சூழலில் பீரிஸ் ஜெனீவாவையும் மேற்கையும் கையாள இராஜதந்திர ரீதியாக அடையாளப்படுத்தப்பட்டார். அவர் அமெரிக்க தூதுவர் முன்னிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரை சந்தித்து உரையாடியதுடன் மேற்குக்கும் தமிழ் தரப்புக்சுகும் இடையில் செயல்படும் ஆளுமையாகக் கருதப்படுகின்றார். அவரது வெளியுறவுக்கான வருகை அதிக மாற்றத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வியை தந்துள்ளது. ■

-நன்றி அருவி






# புதிய முகத்துடன் "தலிபான் 2.0"

**பாரிஸிலிருந்து குமாரதாஸன்**

**தொலைக்காட்சியில் பெண் அறிவிப்பாளர் ஒருவர் தலிபான் இயக்க அதிகாரியிடம் காபூல் நகரின் நிலைவரம் குறித்துக் கேள்வி கேட்டு செவ்வி காணும் காட்சி உலகை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.**

தொலைக்காட்சி பார்த்த குற்றத்துக்காகச் சில பெண்கள் கல் எறிந்து கொல்லப்பட்டனர். இரண்டு தசாப்தங்களுக்கு முந்திய ஆப்கானிஸ்தானில் இது நடந்தது. அந்த இருண்ட அத்தியாயம் மீண்டும் தம் வாழ்வைச் சூழ்ந்து விடுமோ என்ற அச்சத்துடன் பலர் அங்கு ஓடி ஒளிந்துகொண்டிருக் கிறார்கள். ஆனால் தலிபான்களது ஆரம்பமோ வேறு விதமாக இருக் கிறது.

ஆப்கானிஸ்தானின் அதிகா ரத்தை தலிபான்கள் முழுமையாகக் கைப்பற்றி இரண்டு தினங்களில் அந்நாட்டு மக்கள் சற்றும் எதிர்பார்த்திராத காட்சி ஒன்றை தொலைக்காட்சி ஒளிபரப்பி உள்ளது. ஆப்கானின் "ரோலோ" செய்திச் சனல் (Tolo news channel) தொலைக்காட்சியில் பெண் அறிவிப்பாளர் ஒருவர் தலிபான் இயக்க அதிகாரியிடம் காபூல் நகரின் நிலைவரம் குறித்துக் கேள்வி கேட்டு செவ்வி காணும் காட்சி உலகை வியப்பில் ஆழ்த்தி உள்ளது.

முக்காடு அணிந்து சுமார் இரண்டரை மீற்றர் தூரம் தள்ளி இருந்தவாறு அந்தப் பெண் அறிவிப்பாளர் தலிபான் அதிகாரியோடு பேசுகிறார். காபூல் நகரில் வீடுவீடாக நடத்தப்பட்டு வருகின்ற சோதனைகள் தொடர்பாகப் பெண் செய்தியாளர் ஒருவர் வீதியில் நின்று செய்தி வழங்கும் காட்சியையும் ரோலோ தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

1996 முதல் 2001 வரை நீடித்த தலிபான்களின் முந்திய ஆட்சியின் திகில் அனுபவங்களில் இருந்து விடுபடாத பெண்களும் காபூல் மக்களும் இந்தக் காட்சியைக் "கனவு" போலக் கண்டு வியந்துள்ளனர்.

தலிபான்களின் 1996-2001 ஆட்சியில் பெண்களது கல்வி உரிமை ஆரம்பப் பள்ளியுடன் தடுக்கப்பட்டது. அவர்கள் தொலைக்காட்சி பார்ப்பதும் பாட்டுக் கேட்பதும் தடைசெய்யப்பட்டிருந்தது. மீறி நடப்போர் கல் எறிந்து கொல்லப்பட்டனர்.

ஆனால் இன்று காபூலில் அதிகாரத்தைக் கைப்பற்றி யுள்ள தலிபான்கள் தங்களது புது முகம் ஒன்றைக் காட்ட முற்படுகின்றனரா? புதிதாக வந்துள்ள தலிபான்களை "தலிபான் 2.0" என்று ஊட கங்கள் எழுதுகின்றன. தலிபான் பேச்சாளர் காபூ லில் நகரில் நடத்திய முதலாவது செய்தியாளர் சந்திப்பில், ஓர் இணக்கமான முகத்தைக் காட்டியிருக் கிறார். முன்னாள் அரசு நிர்வாகிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பை அறிவித்தார். பெண்கள் இஸ்லாமியச் சட்டங்களின் கீழ் தொழில், கல்வி என்பவற்றுடன் சமூகத்தில் செயற்பாடு மிகுந்தவர்களாக சுதந்திரத்துடன் வாழ அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவித் தார்.ஊடக சுதந்திரமும் மதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை-ஜலாலாபாத் நகரில் ஆப்கான் கொடியை ஏற்ற முற்பட்ட பத்திரிகையாளர் ஒருவர் சுடப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படுகிறது. காபூல் நகரில் தலிபான் ஆயுத பாணிகள் மக்களைத் தாக்குகின்ற வீடியோக்கள் வெளியாகி வருகின்றன. திருட்டுக் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் எனக் கூறப்படுவோர் வாகனத்தில் கட்டி இழுக்கப்படுகின்ற காட்சிக ளும்வெளியாகி உள்ளன.சமூக வலைத்தளங்கள் அங்கு நடக்கும் மனித உரிமைமீறல் சம்பாவங்களை வெளி உலகிற்கு அம்பலப்படுத்திவருகின்ற போதிலும் தலிபான்கள் தகவல் தொடர்பு சாதனங்களில் கை வைக்க மாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

தலிபான்களின் புதிய தலைமுறைத் தலைவர்களும் தளபதிகளும் ருவீற்றர் போன்ற சமூக ஊடகக் கணக்கு களை வைத்திருக்கின்றனர். சமூக வலைத்தளங்கள் மூலமா கவே அவர்கள் தங்கள்கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டுசெல்கின்றனர். டிஜிட்டல் தலைமுறையினராக மாறிவிட்ட அவர்கள் இனியும் பழைய பாணியில் இணைய சேவைகளையோ அல்லது சமூக ஊடகங்களையோ தடை செய்கின்ற முயற்சிகளில் இறங்கமாட்டார்கள் என்று கூறப்படு கிறது.

பரவலான சந்தேகங்களுக்கு மத்தியில் தலிபான் இயக்கம் அதன் முந்திய-கொடூ ரங்கள் நிறைந்த - கடும் போக்கான- மார்க்கத்துக்குத் திரும்ப மாட்டாது என்ற கருத்தைப் பரப்புவதற்கு அது தீவிரமாக முயன்று வருவது தெரிகிறது. அதிகாரம் முழுமை யாகக் கைக்கு வந்து விட்டது. இனிமேல் ஆப்கானிஸ்தானின் தலிபான் ஆட்சிக்குத் தலைமை வகிக்கப் போவது யார்?

53 வயதான அப்துல் ஹானி பரதர் (Abdul Ghani Baradar) என்னும் தலிபானின் இரண்டாம் நிலைத் தலைவர் தனது சகாக்கள் சகிதம் கட்டாரை விட்டுப் புறப்பட்டு கந்தகார் விமான நிலையத்தில் இறங்கி யுள்ளார். புதிதாக உருவாகி இருக்கும் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்தின் அரசை நிறுவி அதன் அதிபராக அவரே பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

**யார் இந்த அப்துல் ஹானி?**

சமீப காலமாக தலிபான்களின் "அரசியல் முகமாகத்" தோன்றுபவர். ஆனால் 1980 களில் சோவியத் - ஆப்கான் போர்க்காலத் தில் இருந்தே தீவிர ஜிஹாத் கெரில்லாவாக விளங்கியவர்.முன்னாள் தலைவர் முஹமட் ஒமர் (Mohammad Omar) 1994 இல் தலிபான் இயக்கத்தை நிறுவிய போது அவரது வலது கரமாகச் செயற்பட்டவர். உலகெங்கும் ஜிகாத்தைப் பரப்பி மேற்கு நாடுகளது படையினரையும் மக்களையும் கொன்று பழிவாங்குதில் முன்னின்ற வர்.

ஆப்கானிஸ்தானின் நீண்ட போரில் வெளிநாட்டுப் படைகளைக் கண்ணி வைத்துக் கொல்வதில் கைதேர்ந்த வராகவும் விளங்கியவர் அப்துல் ஹானி. ஆப்கானின் மலைத் தொடர்களிலும் கரடுமுரடான தெருக்களிலும் பூங்கொத்துகளோடு சேர்த்து பொறி வெடிகளை மறைத்து வைத்து வெளிநாட்டுப்படையினரை அதில் சிக்க வைத்தவர். அதனால் இயக்கத்தில் அவர் "பூக்காரன்" என்று அழைக்கப்பட்டவர்.

2001 இல் அமெரிக்கா தலைமையில் நேட்டோ படைகள் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த பிறகு அங்கிருந்து கட்டாருக்குத் தப்பிச் சென்று தலைமறை வாக வாழ்ந்தார். கட்டாரின் தலைநகர் டோஹா வில் இயங்கிய தலிபானின் அரசியல் பிரிவு அலுவலகத்தின் தலைவராகச் செயற்பட்ட அவர் அமெரிக்காவுடனான சமாதானப் பேச்சுக்களில் தலிபானின் பிரதிநிதியாக அப்போதைய ராஜாங்கச் செயலாளர் மைக் பொம் பியோ உட்பட பல வெளிநாட்டு அதிகாரிகளுடன் நேரில் பங்குபற்றியிருந்தார்.சமாதான உடன்படிக் கையிலும் அவரே கைச்சாத்திட்டிருந்தார்.

தலைநகர் காபூல் கைப்பற்றப்பட்டதும் கடந்த ஞாயிறன்று அந்த வெற்றிச் செய்தியை அவரே வீடியோப் பதிவு ஒன்றில் தோன்றி அறிவித்தார். கட்டாரில் இருந்து இருபது வருடங்களின் பின்னர் பல மூத்த தலைவர்களுடன் ஆப்கானிஸ்தான் திரும்பியுள்ள அவர், இன்னும் இரண்டொரு தினங்களில் காபூலுக்குச் சென்று புதிய அரசாங்கம் ஒன்றை அறிவிக்கவுள்ளார். ■



**படங்கள் :**
**Tolo news channel**



# எங்களுடைய வாழ்க்கையையும் கொரோனா முடக்கிவிட்டது!

## நாதஸ்வரக் கலைஞர் ஒருவரின் ஆதங்கம்



**பா. சந்தனேஸ்வரன்**

“என்னுடைய 12 வயதில் நான் நாதஸ்வரம் வாசிக்கத் தொடங்கினோன். 50 வருடங்களாக தொடர்ந்தும் இதே தொழிலைத்தான் செய்துகொண்டிருக்கிறன். எத்தனையோ இடப்பெயர்வுகள், கலவரங்களைக் கண்டிருக்கிறன். ஆனால், இந்த கொரோனா ஏற்படுத்திய பாதிப்பைப் போல அது ஒன்றும் இருக்கவில்லை...” என்று தன்னுடைய சோகக் கதையைச் சொல்கின்றார் யாழ்ப்பாணம் தாவடியின் பிரபல நாதஸ்வரக் கலைஞர் முத்துசாமி சிவலிங்கம்.

“எனக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது. இப்ப ஒன்றரை வருடங்களுக்கு மேலாக திருமணங்களுக்கு எம்மை அழைப்பதில்லை. கோவில் திருவிழாக்களில் கட்டுப்பாடு. சுயமாகத் தொழில் செய்து கௌரவமாக வாழ்ந்த நாங்கள் 18 மாதங்களுக்கு மேலாக தொழிலை இழந்துபோய்.. ஒரு சதம் வருமானம் இல்லாமல் இருக்கிறம்....” என்பது அவரது நிலை மட்டுமல்ல, யாழ்ப்பாணத்தில் உள்ள 500 க்கும் அதிகமான நாதஸ்வரக் கலைஞர்களின் நிலையும் அதுதான்.

திருமண நிகழ்வுகள், கோவில் திருவிழாக்கள், திறப்புவிழாக்கள், பொது நிகழ்வுகள் என அனைத்திலும் “கொரோனா“ கட்டுப்பாட்டை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், அவற்றையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் நாதஸ்வர, தவில், கலைஞர்கள் உட்பட பல நூற்றுக்கணக்கானவர்களின் நிலையும் இவ்வாறுதான் உள்ளது.

தமிழர்களுடைய பண்பாட்டுடன் இணைந்திருக்கும் நாதஸ்வரக் கலைக்கு உயிரூட்டிக்கொண்டிருந்த அந்தக் கலைஞர்கள் கொரோனா முடக்கத்தினால் நலிந்துபோயிருக்கும் நிலையில் தமிழ் அரசியல் தலைமைகள் எதுவுமே அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கு இதுவரையில் முன்வரவில்லை என்பதும் அவர்களுடைய ஆதங்கமாகவுள்ளது.

### கொரோனா முடக்கம்

மங்கள நிகழ்வுகளுக்கு உயிர்ப்பைக் கொடுக்கும் இந்த இனிமையான இசையை கடந்த ஒன்றரை வருடங்களாக அவ்வாறான நிகழ்வுகளில் கேட்கமுடியவில்லை. திருமணம், கோவில் திருவிழாக்கள், திறப்புவிழாக்கள் போன்ற மங்களகரமான நிகழ்வுகள் எதுவுமே தவில், நாதஸ்வர இசை இல்லாமல் நடைபெறுவதில்லை. ஆனால், கொரோனா அதையும் மாற்றிவிட்டது.

கடந்த சுமார் ஒன்றரை வருடத்தில் பல மாத காலம் முழு அளவிலான ஊரடங்குடன் போய்விட்டது. மிகுதியான நாட்கள் கொரோனா சட்டத்தின் மூலம் மட்டுப்படுத்தப்பட் டது. திருமணம் என்றால் 15 பேர், கோவில் திருவிழா என்றால் 10 பேர் என அனுமதி வழங்கப்பட்டுவந்த நிலையில், நாதஸ்வர, தவில் இசைகளுக்கு அங்கு இடமிருப்பதில்லை.

யாழ்ப்பாண மக்களுடைய பண்பாட்டுடன் இணைந்த ஒன்றாகத் தான் இந்த தவில், நாதஸ்வர இசை இருந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் பரம்பரை பரம்பரையாக இதனைத் தமது குடும்பத் தொழிலாகக் கொண்டுள்ள பலர் இருக்கின்றார்கள். திருமண சீசன், கோவில் திருவிழா சீசன், திறப்பு விழா சீசன் என அனைத்து சீசன்களும் அவர்களுக்கு இப்போது கைக்கெட் டாத ஒன்றாகவே கடந்து சென்றுவிட்டது.

இவை மட்டுமன்றி, அவ்வப்போது நடைபெறும் இசைக்கச்சேரிகள், கம்பன் விழா போன்றவற்றில் இடம் பெறும் இசை நிகழ்வுகளும் மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம். நாதஸ்வரக் கலைஞர்கள் ஹீரோக்களாகப் பார்க்கப்படும் ஒரு நிலையும் இருந்தது. அந்தளவுக்கு அவர்கள் கௌரவிக்கப்பட்டார்கள்.

கொரோனா நாட்டை மட்டுமல்ல இந்தக் கலைஞர்களின் வாழ்க்கையையும் முற்றாகவே முடக்கிப்போட்டுவிட்டது.

இந்தப் பின்னணியில் நாதஸ்வரன் கலைஞர்கள், என்ன செய்கின்றார்கள் இந்த கோரோனா முடக்கத்தை அவர்கள் எப்படி எதிர்கொண்டார்கள்? என்பவற்றை அறிய யாழ்ப்பாணம் இணுவிலில் உள்ள பிரபல நாதஸ்வரன் கலைஞரான சிவலிங்கம் அவர்களைச் சந்தித்தோம்.

**கேள்வி:** கொரோனா முடக்கத்தினால் கடந்த ஒன்றரை வருடகாலமாக திருமணம், கோவில் திருவிழாக்கள், திறப்புவிழாக்கள் மற்றும் பொது நிகழ்வுகள் என எதுவும் நடைபெறவில்லை. அல்லது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. ஒரு நாதஸ்வரக் கலைஞரான நீங்கள் இந்தக் காலத்தை எவ்வாறு கடந்து வந்தீர்கள்?

**பதில்:** வாய்விட்டுச் சொல்ல முடியாத சிரமங்களைத்தான் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. உண்மையில் இந்தத் தொழிலை விட்டால் எமக்கு வேறு தொழில் எதுவும் தெரியாது. இதன் மூலம் வரக்கூடிய வருமானம்தான் எமக்கு சீவியம். அதிலும் ஆரம்பத்தில் தொடர்ச்சியாக மூன்று - நான்கு மாத காலம் முடக்கப்பட்டு - ஊரடங்கு இருந்த காலத்தில் முற்றாகவே எம்மால் எதுவும் செய்ய முடியவில்லை. என்னைப் பொறுத்தவரையில் மகள் வேலை செய்வதால், சாப்பாட்டுக்கு கையேந்தத் தேவையில்லாமல் இந்தக் காலத்தைக் கடந்துவிட்டோம். ஆனால், வாழ்க்கையில் மிகவும் கடினமான ஒரு காலகட்டமாகத்தான் இந்தக் காலகட்டம் இருந்தது. மற்றைய நிலைஞர்களைப் பொறுத்தவரையில் இது மிகவும் கடினமானதொரு காலமாகவே இருந்திருக்கும்.

**கேள்வி:** உங்களைப் போல இன்னும் எத்தனை தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் இருக்கின்றார்கள்?

**பதில்:** யாழ். மாவட்டத்தில் மட்டும் இவ்வாறு 500 க்கும் அதிகமான தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் எல்லோருடைய நிலைமைகளும் மிகவும் மோசம்தான். நாங்கள் உழைக்கின்ற காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக வங்கியில் சேமித்து வைத்திருந்தது இந்தக் காலத்தில் எமக்குப் பெருமளவுக்கு உதவியது. ஆனால், ஒன்றரை வருடத்தில் ஒரு சதம் வருமானம் இல்லாமல் வங்கியிலிருந்த சேமிப்பை மட்டும் எவ்வளவு காலத்துக்கு நம்பியிருக்க முடியும்? அதுவும் கரைந்து போய்விட்டது என்பதுதான் நிலைமை. இந்தக் கலைஞர்கள் எல்லோருடைய வாழ்க்கையும் பெரும் சிரமத்தின் மத்தியில்தான் ஓடிக்கொண்டிருக்குது.

**கேள்வி:** நீங்கள் எவ்வளவு காலமாக இந்தத் தொழிலைச் செய்துகொண்டு வந்திருக்கின்றீர்கள்?

**பதில்:** 50 வருடகாலமாக இதனைத் தொழிலாகச் செய்துகொண்டிருக்கின்றேன். 12 வயதில் சிறுவனாக இருக்கும் போதே இந்தத் தொழிலை ஆரம்பித்துவிட்டேன்.

**கேள்வி:** இந்த அரை நூற்றாண்டு காலத்தில் இது போன்ற நெருக்கடி ஏதாவது உங்களுக்கு எந்திருக்கின்றதா?

**பதில்:** இல்லை ஒரு போதும் வந்ததில்லை. எத்தனையோ இடப்பெயர்வுகள், கலவரங்கள் எல்லாம் வந்திருக்குது. அப்போதெல்லாம் இப்படி ஒரு நெருக்கடி வந்ததில்லை.

**கேள்வி:** கோவில் திருவிழாக்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையான பக்தர்களுடன் நடத்தலாம் எனச் சொல்லப்பட்டிருக்குது. இந்த நிலையில் அவர்கள் உங்களுக்கு அழைப்பு விடுப்பார்களா?

**பதில்:** அவ்வாறான நிலையில் அவர்கள் எம்மை அழைப்பதில்லை.

**கேள்வி:** 500 க்கும் அதிகமான நாதஸ்வரக் கலைஞர்கள் யாழ்ப்பாணத்துக்குள் மட்டும் இருப்பதாகச் சொன்னீர்கள். இவர்களுக்கு கொரோனா காலத்தில் ஏதாவது நிவாரணங்களை அரசாங்கம் வழங்கியதா?

**பதில்:** இளம் கலைஞர்கள் சிலர் இது தொடர்பில் அமைச்சர்கள் மட்டத்தில் சில பேச்சுக்களை நடத்தியிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. குறிப்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அங்கயன் இராமநாதன் போன்றவர்களுடன் பேச்சுக்களை நடத்தியிருக்கின்றார்கள். ஆனால், இதுவரையில் எங்கள் குடும்பங்களுக்கு இதற்கான உதவிகள் வந்து சேரவில்லை. அதனால், எங்களுடைய இந்தப் பிரச்சினை உரிய இடங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் எனக்கு எழுகின்றது.

**கேள்வி:** நாதஸ்வரம் போன்றன பெருமளவுக்கு பரம்பரையாக தொடர்ந்து வரும் ஒரு கலை. இளைய தலைமுறையினர் இந்தக் கலையைப் பயில வேண்டும் - நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்பதில் ஆர்வமாக இருக்கின்றார்களா?

**பதில்:** ஆம். கொஞ்சப்பேர் படிக்கின்றார்கள். ஆனால், இந்த தவில் நாதஸ்வரக் கலையை தொழிலாகக் கொள்வதற்கான விருப்பம் அவர்களுக்குள்ளது. அவர்கள் ஆர்வமாக - சிறப்பாகச் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், சாப்பாட்டுக்குக் கூட ஒன்றும் செய்ய முடியாது என்றொரு நிலை வரும்போது கொஞ்சம் விரக்தி வரத்தான் செய்கின்றது. ஆனால், இந்தக் கலை மீது இளைய தலைமுறையினர் ஆர்வமாக இருக்கின்றார்கள் என்பது எமக்கும் பெருமளவுக்கு திருப்தியளிக்கும் விடயம்தான்.



யாழ்ப்பாணத்தில் சித்தூர் சுப்பிரமணியபிள்ளையின் கச்சேரி. ஐயாக்கண்ணு தேசிகரும் உடனிருக்கிறார்.
தனதேவி மித்திரதேவா (சுப்பையா) - வயலின், ஏ. எஸ். இராமநாதன் - மிருதங்கம்.



எம். எஸ். விஸ்வநாதனுடன் ஏ. எஸ். இராமநாதன்

கலை

# தலைமுறை தொடரும் ஈழத்து இசை லயம்!

**மாலி**

கர்நாடக இசையையும், அந்த இசையின் ரசனையையும் வளப்படுத்தியது நாதஸ்வரம். இந்தியாவின் மிகச் சிறந்த நாதஸ்வர கலைஞர்கள் இலங்கை வருவதும், யாழ்ப்பாணத்து கலைஞர்களுடன் சமானமாக வாசிப்பதும், அதில் ரசிகர்களின் அங்கீகாரத் தீர்ப்பும் நாதஸ்வர கலையின் வரலாற்றோடிணைந்தது. திருவிழா காலங்களில் அந்த ஆறு மாதங்களும் இந்தியாவிலிருந்து தவில், நாதஸ்வர கலைஞர்களை வரவழைத்து, இலங்கையின் தவில், நாதஸ்வர கலைஞர்கள் தங்கள் தங்கள் பெயர்களில் கோஷ்டிகள் அமைப்பார்கள். பேச்சு வழக்கில் இது 'மேளம் கட்டுதல்' எனப்படும்.

இலங்கைக்கு 'வீசா' தேவையில்லாதிருந்த வேளைகளில் இந்தியாவிலிருந்து இவர்கள் தாமாகவே இத் திருவிழா காலங்களில் வேதாரணியத்திலிருந்து வந்து நெடுந்தீவு, ஊர்காவற்றுறை கரைகளில் இறங்குவார்கள்.

இக் கோஷ்டிகள், அந்த பருவ காலத்தில் போட்டி அணிகள்போன்ற ஓர் உன்னதத்தைப் பெறும்.

புகழ்பெற்ற நாதஸ்வர மேதைகள் திருவீழிமிழலை சகோதரர்களுக்கும் அவர்களுக்கு தவில் வாசித்துக்கொண்டிருந்த 'தவில் மாமன்னர்' நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கும் ஏற்பட்ட தகராறில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தொடர்ந்து அவர்களுக்கு வாசிக்க மறுத்தபோது, 'மீனாட்சி இல்லாவிட்டால் காமாட்சி' என்ற சுலோகத்தை கலையுலக வரலாற்றில் பதித்து, திருவீழிமிழலை சகோதரர்கள் யாழ்ப்பாணம் காமாட்சிசுந்தரம் பிள்ளையை தமக்கு தவில்காரராக்கினார்கள்.

யாழ்ப்பாணம் தட்சணாமூர்த்தியின் குருவாக விளங்கியவர் காமாட்சிசுந்தரம் பிள்ளை.

ஆக, ஒரு பண்பட்ட இசை ரசனையில் இலங்கை செழுமையுற்றிருந்தது. மகாராஜபுரம் சந்தானம் என்ற ஓர் இசை உலக மன்னரை செம்மைப்படுத்திய செழுமை அது.

"இசையில் என்னை நானாக ஆக்கியது, யாழ்ப்பாணத்தின் அந்த ஐந்து ஆண்டுகள்" - மகாராஜபுரம் சந்தானம் சொன்ன வார்த்தைகள்.

அறுபதுகளில் மருதனாமடம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி (அக்கடெமி) ஆரம்பிக்கப்பட்ட போது, அதனைத் தொடக்கிவைத்த தந்தையார் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயருடன் வந்திருந்த புதல்வர் சந்தானம், கல்லூரியின் ஸ்தாபகரான சேர் பொன். இராமநாதனின் மருகர் சு. நடேசபிள்ளையின் விருப்பில், அக் கல்லூரியின் முதல்வராக ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார். அதுவே அவர் சொல்லும் 'அந்த ஐந்து ஆண்டுகள்'.

யாழ்ப்பாணத்தில் மூலை முடுக்கெல்லாம் நடைபெற்ற அவரின் கச்சேரிகளில், தன்னுடைய வித்துவ தனித்துவத்தை அவர் அப்போது சோதித்துத் தேர்ந்தார்.

அவ்வேளையில், வீ. ஆர். இராசநாயகம், டபிள்யூ. எம். குமாரசாமி ஆகியோர் ஆரம்பித்து நடாத்திய யாழ். நடன பள்ளியில், கேரளாவிலிருந்து வந்து நாட்டிய மேதைகள் கோபிநாத் - தங்கமணி, செல்லப்பன் - பவானி ஆகியோர் கதகளி நடனம் கற்பித்தனர். கொக்குவில், ஏரம்பு சுப்பையா பரதநாட்டியம் கற்பித்தார். ஊரிக்காடு நடராஜா, புத்துவாட்டி சோமு, அச்சுவேலி இரத்தினம் போன்றவர்கள் உள்ளூரில் இசைக் கலைஞர்களாக திகழ்ந்தார்கள். இசைப் புலவர் சண்முகரத்தினம் பெரும் வித்வானாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தார்.

பிரபல இந்திய வயலின் வித்வான்கள் எல். சுப்பிரமணியம், எல். வைத்தியநாதன் ஆகியோரின் தந்தையார் லக்ஷ்மிநாராயணா, ஐயாக்கண்ணு தேசிகர், சங்கர ஐயர் போன்ற இந்திய வித்வான்கள் யாழ்ப்பாணத்தில் வசித்துவந்தார்கள். 'சங்கீத கலாநிதி' சித்தூர் சுப்பிரமணியபிள்ளை ஐந்து ஆண்டுகள் இராமநாதன் அக்கடமியில் அதிபராகவிருந்தார்.

ரசிக ரஞ்சன சபாவில் இசைவிழாக்கள் நடைபெற்றன.

தம்பாப்பிள்ளை, தங்கம், எம். என். செல்லத்ததுரை போன்றோர் மிருதங்கம் வாசித்தார்கள். இவர்கள் பிரதான மாக கூத்து, சின்னமேளத்துக்கு வாசிப்பவர்களாகவே இருந்தார்கள்.



ஏ. எஸ். இராமநாதன்

**"யாழ்ப்பாணத்தில் - ஏன் இலங்கையில், நாதஸ்வரம் தவிர்ந்த இசை, நடனத்தின் லய மூலமாக, ஒரு யுகத்தைப் படைத்து எழுந்தது அந்த மிருதங்க நாதம்**

**'மீனாட்சி இல்லாவிட்டால் காமாட்சி' என்ற சுலோகத்தை கலையுலக வரலாற்றில் பதித்து, திருவீழிமிழலை சகோதரர்கள் யாழ்ப்பாணம் காமாட்சிசுந்தரம் பிள்ளையை தமக்கு தவில்காரராக்கினார்கள்**

ஆக, தவிலில் பெரும் லய சிம்மங்களின் கர்ஜனை ஆர்ப்பரித்த அவ்வேளையில், மிருதங்க லயம் அவ்வளவுக்கு பிடிப்பில்லாமலேயேயிருந்தது.

யாழ்ப்பாணத்தில் பரம் தில்லைராஜாவினால் புதிதாக தொடங்கப்பட்ட சங்கீத வித்வத் சபை ஏற்பாட்டில், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரா கல்லூரி மண்டபத்தில் புதுமையான ஒரு நிகழ்ச்சி நடந்தது. தட்சணாமூர்த்தி தவில் வாசிக்க, அவருடன் இணைந்து இன்னொருவர் மிருதங்கம் வாசித்த தாளவாத்திய நிகழ்ச்சி அது.

யாழ்ப்பாணத்தில் - ஏன் இலங்கையில், நாதஸ்வரம் தவிர்ந்த இசை, நடனத்தின் லய மூலமாக, ஒரு யுகத்தைப் படைத்து எழுந்தது அன்று அந்த மிருதங்க நாதம்.

ஒருவர் வழிக்கு மற்றவர் செல்லாமல், இருவரிடத்தும் வெளிப்பட்ட வித்துவ வித்தையில் அவர்கள் இருவரினதும் அந்த லய விந்யாசம் கொள்ளைகொண்டது.

யாழ். நடன பாடசாலையில் வாய்ப்பாட்டுக் கென்று, சிதம்பரத்திலிருந்து வந்திருந்த மிருதங்க வித் வான் அவர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் இலங்கையர் பலர் 'சங்கீத பூஷணம்' பட்டத்துக்காக பயில ஆரம்பித்த அக் காலத்தில், அங்கு மிருதங்கம் பயின்றுகொண்டிருந்தவரை, பட்டத்தை முடித்துக்கொண்டு இலங்கைக்கு வர வற்புறுத்தினார்கள் அந்த இலங்கையர்கள் சிலர். அந்த வற்புறுத்தலில், 1948ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் வந்தார் அந்த மிருதங்க வித்வான் சிதம்பரம் ஏ. எஸ். இராமநாதன்.

அப்போது, இலங்கையில் ஒரு புது சகாப்தம் ஆரம்பமானது. கலைகளின் வளர்ச்சியில், ரசனையில் ஒரு புது வளம் செறிந்தது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் மைலாட்டூர் சாமி ஐயரிடம் பயின்ற அவர், பின்னர் பழநி சுப்பிரமணிய பிள்ளையிடமும் பயின்றவர். இசைக் கலைஞர்களுக்கும் நடன கலைஞர்களுக்கும் உந்துதலான பக்கவாத்தியமாக மட்டுமன்றி, இலங்கையில் ஒரு மிருதங்க பரம்பரையின் - பாரம்பரியத்தின் பிதாமகராகவும் அவர் உரு பெற்றார்.

சங்கீத உகில் முசிரி சுப்பிரமணிய ஐயரைப்போல, மிருதங்கத்தில் ஒரு மாணவ பரம்பரையை உருவாக்கிய தனி சிறப்பு ஏ. எஸ். இராமநாதனுடையது. இலங்கையிலிருந்து, இன்று தமிழர் வாழுமிடமெல்லாம் உலகில் இவரது மாணவர்களே சிறக்கிறார்கள். தலைமுறைகளாக புதிய பரம்பரை வியாபிக்கிறது.

இராமநாதன் நுண்கலைக் கல்லூரி உள்பட, பொதுவாக யாழ்ப்பாணத்தின் முதன்மையான அனைத்து இசை, நடன நிறுவனங்களுடனும் இராமநாதன் தொடர்புற்றிருந்தார்.

தமிழிசைக்காக யாழ்ப்பாணத்தில் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தையும் ஆரம்பித்து நடாத்தினார். வட இலங்கை சங்கீத சபையில் மிருதங்கத்தை இணைத்தார்.

1961இல் திருமணத்தின் பின்னரும், யாழ்ப்பாணத்திலேயே குடும்பத்துடன் இராமநாதன் வாழ்ந்தார். இராமநாதன் நுண்கலைக் கல்லூரி யாழ்ப்பாண பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்ட பின்னர், இந்திய பிரஜையான இராமநாதனுடைய நியமன அங்கீகாரத்தில் சில தாமதங்கள் ஏற்பட்டபோது, 1983இல் அவர் இந்தியா திரும்பினார். அங்கு அண்ண மாலைப் பல்கலைக் கழகத்தில் ஆறு ஆண்டுகள் மிருதங்க விரிவுரையாளராக பணியாற்றி ஓய்வுபெற் றார். இலங்கையில் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் அவர் ஏற்படுத்திய கற்கை நெறியை அண்ணாம லைப் பல்கலைக்கழகமும், தமிழ் நாடு இசைக் கல்லூரியும் நெறிப்படுத்த தலைப்பட்டன.

கலைஞர்கள், மாணவர்கள், அபிமானிகள் என்று இலங்கையில், குறிப்பாக யாழ்ப்பாணத்தில், ஒரு குடும்ப அபிமானத்தைப் பெற்றவர் இராமநாதன். அவருடைய சங்கீத மேதாவிலாசத்துடன், அவரின் சங்கீத பாஷையும், சங்கீத காஷியமும் கூடவே ரசிப்பூட்டும்.

2011இல், 80ஆவது வயதில் சென்னையில் காலமான இராமநாதனுக்கு, கடந்த 16ஆம் திகதி 90 ஆவது பிறந்த தினம் என்பதை முகநூல் பதிவொன்று நினைவுபடுத்தியது.



நடிகை பூஜா ஹெக்டே தற்போது தமிழ், தெலுங்கு மற்றும் ஹிந்தி மொழிகளில் முன்னணி நடிகையாக உருவெடுத்துள்ளார்.

தமிழில் முகமூடி படம் மூலம் அறிமுகமான பூஜா ஹெக்டே தற்போது 9 வருடங்கள் கழித்து மீண்டும் விஜயின் பீஸ்ட் படம் மூலம் தமிழுக்கு மீண்டும் வருகிறார். இதையடுத்து மேலும் பல தமிழ் படங்களில் நடிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது பூஜா ஹெக்டே அரைக்கால் சட்டையுடன் வலம் வரும் புகைப்படங்கள் இணையத்தைக் கலக்கி வருகின்றன. இதற்கிடையில் பிரபாஸ் உடன் ராதே ஷ்யாம் என்ற பிரமாண்ட படத்திலும் நடித்து முடித்துள்ளார்.



நெல்சன் திலீப் குமார் இயக்கும் பீஸ்ட் படத்தில் நடித்து வருகிறார் விஜய். படத்தின் மூன்றாம் கட்ட படப்பிடிப்பு தற்போது சென்னையில் நடைபெற்று வரும் நிலையில் அடுத்த கட்ட படப்பிடிப்பிற்காக விரைவில் ரஷ்யா செல்லவுள்ளனர்.

இந்த நிலையில் ஏற்கனவே பீஸ்ட் படத்தின் இரண்டு விதமான முதல்பார்வைகள் வெளியிடப்பட்ட நிலையில், தீபாவளி அன்று பீஸ்ட் படத்தின் முதல் சிங்கிள் பாடல் வெளியாகவுள்ளது என்று வந்த செய்திகள் ரசிகர்களுக்கு மிகப்பெரிய உற்சாகத்தை கொடுத்திருக்கிறது.



தமிழில் ராம்குமார் இயக்கத்தில் விஷ்ணு - அமலாபால் நடிப்பில் வெளியான படம் ராட்சசன். இப்படம் தெலுங்கில் ரக்சாசுடு என்ற பெயரில் மீள உருவாகின்றது. பெல்லம் கொண்ட ஸ்ரீனிவாஸ் - அனுபமா பரமேஸ்வரன் நடித்தனர்.

இந்தநிலையில் தற்போது ராட்சசன் படம் ஹிந்தியிலும் ரீமேக் ஆகிறது. இந்தப் படத்தில் அக்சய்குமார் - ரகுல்பிரீத்சிங் இணைகின்றனர். இந்த வார இறுதியில் இப்படத்தின் படப்பிடிப்பு லண்டனில் தொடங்குகிறது.

"மாஸ்டர்" படத்தில் கதாநாயகியாக நடித்ததன் மூலம் தமிழ் சினிமா ரசிகர்களிடம் பிரபலமானவர் மாளவிகா மோகனன். தற்போது தனுஷ் ஜோடியாக "மாறன்" படத்தில் நடித்து வருகிறார். அதிகம் கவர்ச்சி காட்டமல் நடிப்பவர்.

ஆனால், சமூக வலைத்தளங்களில் மாளவிகா மோகனைப் பார்த்தால் ரசிகர்கள் ஆச்சரியப்படுவார்கள். சமயங்களில் அதிர்ச்சியும் கூட அடைவார்கள். அந்த அளவிற்கு கவர்ச்சி என விதவிதமான புகைப்படங்களை அடிக்கடி பதிவிட்டுக் கொண்டே இருப்பார்.

அண்மையில் அவர் வெளியிட்ட சில கவர்ச்சிப் புகைப்படங்கள்கூட அதிர்ச்சி ரகம் தான். "திங்கள் கிழமை, சனிக்கிழமையாகத் தெரிந்தால்…" என்ற வாசகத்துடன் இந்தப் புகைப்படங்களைப் பகிர்ந்துள்ளார். அவர் பதிவிட்ட புகைப்படங்களுக்கு மொத்தமாக 20 இலட்சம் விருப்புகளை கடந்துள்ளது.





துப்பறிவாளன் படம் மூலம் அறிமுகமானவர் அனு இமானுவல். அடுத்தாக நம்மவீட்டு பிள்ளை படத்தில் நடித்தார். அதன் பின்னர் அவருக்கு வாய்ப்புகள் இல்லை.

அவரின் இந்த நிலைக்கு அவர் கவர்ச்சி காட்ட மறுத்ததுதான் காரணம். இதைப் புரிந்து கொண்ட அவர் தற்போது நடித்து வரும் மகாசமுத்திரம் படத்தில் அதீத கவர்ச்சி காட்டி நடித்து வருகிறார்.

# திரை விமர்சனம்




**திரைப்படம் - திட்டம் இரண்டு**
**இயக்கம் - விக்னேஷ் கார்த்திக்**
**இசை - சதீஷ் ரகுநாதன்**
**நடிப்பு - ஐஸ்வர்யா ராஜேஷ், சுபாஷ் செல்வம்**

தமிழ் சினிமாவில் இதுவரை யாரும் சொல்லாத ஒரு கதையைத் தேடிப் பிடிக்க வேண்டும் என படத்தின் இயக்குநர் தீயாய் தேடியிருப்பார் போலிருக்கிறது. கரு, திருப்புமுனை என்று எதையுமே ஊகிக்க முடியாத கதை.

உச்சக்கட்டத்தில் வைக்கப்பட்ட அந்த திருப்புமுனை அதிர்ச்சி. எனினும், ஐயோ என்று சொல்ல வைக்காமல் அச்சச்சோ என்று பாவப்பட வைத்துவிட்டார் இயக்குநர்.

திருச்சியிலிருந்து சென்னைக்கு மாற்றலாகி வருகிறார் இன்ஸ்பெக்டர் ஐஸ்வர்யா ராஜேஷ். பேருந்தில் உடன் பயணிக்கும் சுபாஷ் செல்வமை பார்த்ததும் மனசுக்குள் காதல் அரும்புகிறது. சென்னை வந்து காவல்நிலையத்தில் பொறுப்பேற்றதும், அவருடைய நெருங்கிய தோழி அனன்யா ராம்பிரசாத் காணாமல் போய்விட்டாரென முறைப்பாடு வருகிறது. தோழியின் கணவர் கோகுல் ஆனந்திடம் விசாரிக்கிறார் ஐஸ்வர்யா.

சில நாட்கள் கழித்து அனன்யாவின் கார் நெடுஞ் சாலையில் மரத்தில் மோதி எரிந்த நிலையில், அனன்யா வும் எரிந்து எலும்புக் கூடாக்க் கிடைக்கிறார். அது விபத்தல்ல, கொலையாகத்தான் இருக்கும் என சந்தேகப் படுகிறார் ஐஸ்வர்யா. தீவிர விசாரணையை ஆரம்பிக் கும் சூர்யாவின் கொலைக்குக் காரணம் என்ன என்பதைக் கண்டுபிடித்தாரா இல்லையா என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

குற்றம் - திகில் காட்சியுடன் ஆரம்பமாகும் கதை ஆரம்பத்தில் தடுமாறி ஆமையாக நகர்ந்து பின்னர் வேகமெடுத்து அதிர்ச்சி திருப்பத்துடன் உச்சக்கட்ட காட்சியுடன் பதிந்து உணர்வுபூர்வமாக முடிகிறது. திரைக்கதை தடுமாற்றங்களை தவிர்த்திருந்தால் படத்தின் விறுவிறுப்பு இன்னும் கூடியிருக்கும்.

நாயகியாக வரும் ஐஸ்வர்யா ராஜேஷ் காவல்துறை கம்பீரத்தை முகத்தில் காட்டுவதில் தடுமாறினாலும், பேச்சு, உடல்மொழியில் அதை சரி செய்ய முயன்றுள் ளார். காதல் காட்சியில் பொருந்தினாலும், கோப காட்சிகளில் பதியவில்லை.

சுபாஷ் செல்வம் நடிப்பில் தன்னை ஆழமாக பதிய வைத்துள்ளார். அனன்யா சுமார் ரக நடிப்பையே வெளிப்படுத்தினார்.

கொலைக் கதை என்றால் ரசிகர்களைக் குழப்புவதற் காக நான்கைந்து கதாபாத்திரங்களைப் படத்தில் வைப்பார்கள். அந்த வழக்கத்தை மாற்றாமல் இந்தப் படத்திலும் அப்படியான சில கதாபாத்திரங்கள் இருக்கின்றன. அனன்யாவின் கணவராக கோகுல் ஆனந்த், சப் இன்ஸ்பெக்டர்களாக முரளி ராதாகிருஷ்ணன், ஜீவா ரவி, அனன்யாவின் முன்னாள் காதலரான பாவல் நவகீதன் ஆகியோரும் அவரவர் கதாபாத்திரத்தில் இயக்குநர் சொன்னதை சரியாகச் செய்திருக்கிறார்கள்.

கோகுல் பினாயின் ஒளிப்பதிவில் இரவு நேரக் காட்சிகளும், திகில் படங்களுக்கே உரிய பிரேமிங்குகளும் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. ஒரு தீம் மியுசிக்கை சரியாக உருவாக்கிவிட்டு, அதை படம் முழுவதும் அடிக்கடி பொருத்தமாக பயன்படுத்தியிருக்கிறார் இசையமைப்பாளர் சதீஷ் ரகுநாதன்.

உச்சகட்ட திருப்பம், அதில் சொல்லப்படும் காரணம், மனரீதியான, உடல்ரீதியான சில விஷயங்கள் ரசிகர்களுக்குப் பிடித்துப் போனால், இந்தப் படம் திகட்டாத த்ரில்லர் படமாக அமையலாம்.



# காயம் தந்த பாடம்!

உலகின் முதல்நிலை வீராங்கனையாக வலம் வந்தவர் ருமேனியாவின் சிமோனா ஹாலேப். சின்சினாட்டி போட்டி யிலிருந்து இரண்டாவது சுற்றிலேயே வெளியேறினார். அவரின் வலது காலில் ஏற்பட்டிந்த தசை நார் கிழிவே அவரின் விலகலுக்கு காரணம்.

அவரின் ரசிகர்களுக்கு இந்த முடிவு ஏமாற்றத்தை தந்தாலும், கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற அமெரிக்க ஒப்பனில் அவர் ஆடி பட்டம் வெல்லும் அவரின் கனவை நனவாக்க இந்த விலகல் அவசியம் என்றே கூறலாம்.

ரோமில் நடந்த இத்தாலி ஒப்பனில் மக்தா லினொட்டை எதிர்த்த சிமோனா இடது காலில் தசைநார் கிழிவால் பாதிக்கப்பட்டார். அந்த சிறுகாயத்தை பொருட்படுத்தாமல் சிமோனா மீண்டும் ஆடினார். இதன் விளைவால் அடுத்து வந்த பெரும் தொடர்களான விம்பிள்டன் ஒப்பன், பிரெஞ்சு ஒப்பன் தொடர்களை இழந்தார். இரு கிராண்ட்ஸ்லம் அந்தஸ்து பெற்ற இந்தப் போட்டிகளில் அவரால் ஆடமுடியாமல் போனது பெரும் சோகமே.

இந்நிலையில்தான் சின்சினாட்டி தொடரில் வியாழன் இரவு போட்டி தொடங்க முன்னர் தனது ருவிட் டர் தளத்தில் பதிவிட்ட அவர், "துரதிர்ஷ்டவசமாக சோதனையில் வலதுபுறத்தில் சிறிய காயத்தை காட்டியது. அதனால் இன்றிரவு (வியாழன்) ஆடுவது மிகவும் ஆபத்தானது." என்று கூறியிருந்தார்.

29 வயதான சிமோனா இந்தப் போட்டியில் ஆடியிருந்தால் எதிர்வரும் 30ஆம் திகதி ஆரம்பமாகும் அமெரிக்க ஒப்பனில் அவரால் ஆட முடியாது போயிருக்கும். அவ்வாறு நடந்திருந்தால் அவரின் மூன்றாவது கிராண்ட்ஸ்லம் கனவு கனவாகவே போயிருக்கும். எனவேதான் சிமோனா, ரோம் தொடரில் கிடைத்த பாடத்தை சரியாக பின்பற்றி இந்தத் தொடரிலிருந்து விலகியிருக்கிறார்.

# ரிசு பேப்பரின் விலை 20 கோடி

மெஸ்ஸி பயன்படுத்திய 'ரிசு பேப்பர்' இற்கு அடிப்படை ஏலத் தொகை நம் நாட்டு மதிப்பில் சுமார் 20 கோடி ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள் ளது.

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரான மெஸ்ஸி 34. தனது 13 வயதில் ஸ்பெயினின் பார்ஸிலோனா கழக அணியில் இணைந்தார்.

21 ஆண்டுகளாக அந்த அணியில் நீடித்த இவர், 778 போட்டிகளில், 672 கோல் அடித்து, 35 வெற்றிக் கிண்ணங்களையும் வென்றார் கொரோனா காரணமாக ஏற்பட்ட நிதிச்சுமை காரணமாக, மெஸ்ஸியை பார்ஸிலோனா அணி வெளியேற்றியது.

இதற்கான பத்திரிகையாளர் சந்திப்பில் மெஸ்ஸி, மனைவி, குழந்தைகளுடன் பங்கேற்றார். ஒருகட்டத்தில் மெஸ்ஸி கண்ணீர் விட்டு அழுதார். அப்போது 'ரிசு பேப்பர்' கொண்டு துடைத்து விட்டு, கீழே போட்டு விட்டார். நிகழ்ச்சியில் பங்கேற்ற ஒருவர் அதை எடுத்து, சர்வதேச ஏல இணையதளம் 'மெய்கெடுயோ'



வில் விற்பனைக்கு வைத்துள்ளார். இதன் அடிப்படைத் தொகை 10 இலட்சம் டொலராக நிர்ணயித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்,"இதில் மெஸ்சியின் மரபணு பொருட்கள் உள்ளன. இதைக் கொண்டு 'குளோனிங்' முறையில் புதிய ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரை உருவாக்கலாம்," என கற்பனை கலந்து தெரிவித்துள்ளார்.

# கொடையின் தோல்வி



ஜப்பான் ரென்னிஸ் நட்சத்திரம் நவோமி ஒசாகா. களத்தில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்துவதில் மட்டுமல்லாது எதைப் பற்றியும் கவலைப்படாமல் தனது கருத்துகளை மிகத் துணிச்சலாக வெளிப்படுத்தக்கூடியவர். இந்த ஆண்டு ஆஸி. ஒப்பனில் 2வது முறையாக சம்பியன் பட்டம் வென்ற ஒசாகா, பிரெஞ்சு ஓபனில் சம்பிரதாய மான செய்தியாளர்கள் சந்திப்பில் தன்னால் கலந்துகொள்ள முடியாது என அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டதுடன், கடுமையான நடவடிக்கையை சந்திக்க வேண்டியிருக்கும் என கிராண்ட்ஸ்லாம் போட்டி நிர்வாகிகள் அச்சுறுத்தினர். அடுத்த நாளே மன உளைச்சல் காரணமாக பிரெஞ்சு ஒப்பனில் இருந்து விலகுகிறேன் என்று அறிவித்த ஒசாகா, விம்பிள்டன் தொடரிலும் பங்கேற்கவில்லை.

ரோக்கியோ ஒலிம்பிக் தொடக்கவிழாவின்போது ஒலிம்பிக் தீபத்தை ஏற்றும் கௌரவம் அவருக்கு அளிக்கப்பட்டது. ஒலிம்பிக் தொடரில் 3ஆவது சுற்றிலேயே அதிர்ச்சி தோல்வி கண்ட ஒசாகா, சின்சினாட்டி ஒப்பனில் களமிறங்கினார்.

முன்னதாக செய்தியாளர் சந்திப்பை புறக்கணிக்காமல் கேள்விகளுக்கு பதிலளித்தாலும், மிகவும் உணர்ச்சிவசப்பட்டார். இந்த நிலையில், 'ஹெய்ட்டி நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் ஏராளமானோர் உயிரிழந்தமை மிகவும் வேதனை அளிக்கிறது. சின்சினாட்டி ஒப்பனில் விளையாடுவதால் கிடைக்கும் பரிசுத் தொகை முழுவதையும் ஹெய்ட்டி நிவாரணத்துக்காக அளிக்க உள்ளேன். இந்தப் பேரழிவில் இருந்து நாம் நிச்சயம் மீண்டு வருவோம்' என்று தனது ருவிட்டர் பக்கத்தில் தகவல் பதிந்திருந்தார்.

ஒசாகாவின் தந்தை ஹெய்ட்டி நாட்டை சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், ஒசாகா இந்தத் தொடரிலும் மூன்றாவது சுற்றிலேயே தோல்வியடைந்து வெளியேறினார்.

# களமிறங்க காத்திருப்பு...!




பார்ஸிலோனாவின் சீருடை அணியாத மெஸ்ஸியை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கிறார்கள். கடந்த 21 வருட ஐரோப்பிய கழக உதைபந்தாட்ட வரலாற்றில் மெஸ்ஸியும் பார்ஸிலோனாவும் பிரித்தறியப்படாதவர்கள். ஆனால், இன்று நிலைமை தலைகீழ்.

நிதிநிலை நெருக்கடியால் பார்ஸிலோனா அணி அவருடனான ஒப்பந்தத்தை நீடிக்கவில்லை. இதனால், தான் வளர்ந்த கழகத்தை விட்டு வெளியேற வேண்டியதாயிற்று, தற்போது பிரான்ஸின் பாரிஸ் சென். ஜெர்மைன் அணிக்காக விளையாட ஒப்பந்தமாகியுள்ளார்.

லா லிகா தொடரில் சனிக்கிழமை இரவு 12.30 மணிக்கு இடம்பெறும் போட்டியில் விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் அவர் களமிறங்கவில்லை. இந்த நிலையில் அடுத்த வாரம் அவர் களமிறங்குவார் என்று கூறப்படுகின்றது.

பாரிஸ் சென். ஜெர்மைன் அணியில் உலகின் முன்னிலை வீரர்களான பிரேஸிலின் நெய்மர், பிரான்ஸின் கலியன் எம்பாப்பே, ஆர்ஜென்ரீனாவின் ஏஞ்சல் டி மரியா ஆகியோர் விளையாடி வருகின்றனர். நேற்றைய போட்டியில் இந்த அணி 4 -2 என்ற கோல் கணக்கில் பிரெஸ்ட் அணியை வென்றாலும் மெஸ்ஸியை வேறு சீருடையில் பார்க்கத் துடித்தவர்களுக்கு ஏமாற்றம்தான்.

எனினும், அடுத்த வாரம் பாரிஸ் சென். ஜெர்மைன் சீருடையில் களமிறங்கும் மெஸ்ஸியை காண ரசிகர்களின் காத்திருப்பு தொடர்கிறது.



# எழுத்தெண்ணிப் பயின்ற இளங்குமரனார்

**ந.கௌதமன்**

ஊர்ப் பெயரும் தாயார் பெயரும் ஒன்றாகக் கொண்ட வர் இளங்குமரனார் (1930 - 2021). தாயார் பெயர் வாழவந்தாள். ஊர்ப் பெயர் வாழவந்தாள்புரம். தந்தை பெயர் இராமு் ஊர் வைத்த பெயர் 'படிக் கராமு'. பெற்றோரின் எட்டாவது குழந்தையாகப் பிறந்ததால், அந்த நாள் வழக்கப்படி அவருக்கு வைக்கப்பட்ட பெயர் 'கிருஷ்ணன்'. மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் நூல்கள் தந்த தனித்தமிழ் உணர்வால் இவர் மாற்றிக்கொண்ட பெயர், 'இளங்குமரன்'.

இடைவிடாமல் படிக்கும் தந்தையாரின் பழக்கம் இவரிடமும் ஒட்டிக்கொண்டது. திருக்குறள் முழுவதையும் 12 வயதுக்குள் ளும், தொல்காப்பியம் முழுவதையும் 16 வயதுக்குள்ளும் மனப்பாடம் செய்து விட்டார். சங்க இலக்கியப் பயிற்சியைத் தொடங்கியது 18 ஆம் வயதில்.

சொந்த ஊரிலேயே தொடக்கப் பள்ளி ஆசிரியர் பணியை 8.4.1946 இல் தொடங்கினார். புலவர் பட் டம் பெற்ற பின் 1951இல் தமிழாசிரியர் பணியை கரி வலம்வந்தநல்லூ ரில் தொடங்கினார் தளவாய்புரத் தில் தொடர்ந்தார் மதுரை மு.மு.மேல் நிலைப் பள்ளியில் நிலைத்தார். இறுதி நான்காண்டுகள் மதுரை காமராசர் பல்கலைக்கழக ஆய்வறிஞ ராகப் பணியாற்றி ஓய்வுபெற்றார். தொடர்ந்து 43 ஆண்டுகள் ஆசிரியர் பணியாற் றும் வாய்ப்பை இளங்குமரனார் பெற்றது போல இனியொருவர் பெற இயலாது.

மதுரை காமராசர் பல்கலைக்கழகப் பணியில் இவர் உருவாக்கியது 'தொல்காப் பியக் கலைச் சொற்களஞ்சியம்'. தொல் காப்பியம், திருக்குறள் இரு நூல்களையும் பல கோணங்களில் பார்த்து, இளங்குமர னார் வெளிப்படுத்திய நூல்கள் மிகுதி.

தனித்தமிழ்ச் சொல்லாய்வாளர், வரலாற் றாசிரியர், உரையாசிரியர், படைப்பாளர், பாவலர், பதிப்பாசிரியர், பழம்நூல் மீட்பர் எனப் பல முனைகளிலும் விரிந்த அறிவுப் பரப்பைக் காட்டுவன இவரின் நூல்கள். ஐநூ றுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார் இளங்குமரனார். அத்தனையும் இவர் கைப்பட எழுதியவை. மறைவதற்குச் சில நாட்கள் முன்பு இவர் இறுதியாக எழுதிய எழுத்தும் மணிமணி யாக உள்ளது. எழுத்து நடுக்கமும் நினைவுத் தடுமாற்றமும் வராத பெறும் பேறானது 91 வயதிலும் இவருக்கு வாய்த்தது வியப்பு.

தொல்காப்பியத்தில் மனம் தோய்ந்து மூழ்கி எழுந்த இளங்குமரனார், தொல்காப் பிய முழு நூற்பிழிவாக வழங்கியுள்ள அரிய நூல் 'தமிழர் வாழ்வியல் இலக்கணம்'. தொல்காப்பியத்தில் புலமை பெற விரும்பு வோருக்கு அவர் வழங்கியுள்ள வழிகாட்டி நூல் 'தொல்காப்பியம் சொற்பொருட்களஞ் சியம்'. பெருமுயற்சியில் ஈடுபட்டு 'செந்த மிழ்ச் சொற்பொருட்களஞ்சியம்' எனும் 10 தொகுதிகளை வழங்கியுள்ளார். அழிந்து போன நூல்களாகக் கூறப்பட்ட 'காக்கை பாடினியம்', 'களவியற்காரிகை' முதலிய பல நூல்கள் இளங்குமரனாரால் உயிர்பெற்றன.

சுவடிகள் அச்சேறிய அரிய வரலாற்றை விளக்கும் 'சுவடிக்கலை' (1984), 'சுவடிப் பதிப்பு வரலாறு' (1990) போன்ற அரிய நூல் கள் இவருடைய உழைப்பில் பிறந்தவை என் பதை அறிந்தோர் சிலரே. பழைய நூல்களைத் தேடிப் பதிப்பிப்பதில் நம் கால உ.வே.சா. வாகத் திகழ்ந்தார் இளங்கு மரனார்! ■

# கலை, இலக்கிய சஞ்சிகை ஞானம்




கலை, இலக்கியச் சஞ் சிகை யான "ஞானம்" ஆகஸ்ட் மாத இதழ், மாத் தளை கார்த்திகேசு குறித்த சிறப்புக் கட் டுரை ஒன்று டன் வெளிவந்திருக்கின் றது. இது ஞானத்தின் 255 ஆவது இதழ் என்பதும் குறிப்பிடத் தக்கது. பிரபல எழுத்தாளர் தி.ஞானசேகரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் ஞானம், இந்த இதழிலும் வழமைபோல கனதியான, கலை, இலக்கியக் கட்டுரைகளையும், செய்தி களை யும் தாங்கி வெளிவந்திருக்கின்றது.

மாத்தளை கார்த்திகேசு குறித்த விஷேட கட்டுரையை மு.நித்தியானந்தன் எழுதியிருக் கின்றார். மலையகத்தில் கலை, இலக்கியம், நாடகம், சினிமா, நாவல், நூல் பிரசுரம் என்று இத்தனை துறைகளில் ஆளுமை காட்டிய பெருமகன் கார்த்திகேசு என அவரது ஆளுமையை நித்தியானந்தன் விபரிக்கிறார்.

இதனைவிட, கவிதைகள், தாட்சாயணி, முஸ்டீன், பொ. கருணாகரமூர்த்தி (பெர்லின் ), சூசை எட்வேட், மதிவதனி (சுவிஸ்) ஆகி யோரின் சிறுகதைகள். பேராசிரியர் செ. யோகராசா, ஏலையா க. முருகதாசன் (யேர் மனி), செங்கதிரோன், கோ.குகன், தி. ஞான சேகரன் ஆகியோரின் கட்டுரைகள், பேரா சிரியர் துரை மனோகரன் எழுதும் "எழுதத் தூண்டும் எண் ணங்கள்" பத்தி, சமகால கலை இலக்கிய நிகழ்வுகள் குறித்து கே.பொன்னுத் துரை எழுதும் பத்தி என்பவற்றுடன் முழுமை யான ஒரு இலக்கிய இதழாக ஞானம் ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்தள்ளது.

# அறிந்திரன் சிறுவர் இதழ்

## சிறுவர் வாசிப்புலகத்தில் விடிவெள்ளி

**கானா பிரபா**

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்ற பொன்மொழிக்கேற்ப நம் ஏட்டுக் கல்வி கடந்து பரந்த உலக ஞானத்தை வளர்த்துக் கொள்வதில் சிறுவர் சஞ்சிகைகள் முக்கிய இடத்தைப் பெற்றவை. ஆனால் இன்றைய நவீன சூழலில் ஆகப் பெரிய தமிழர் இருப்பைக் கொண்ட இந்தியாவில் கூட ஒரு சிறுவர் சஞ்சிகை தானும் நீண்ட கால இருப்போடு தொடர முடியாத நிலை எழுந்திருகின்றது. அம்புலிமாமா, பாலமித்திரா, ரத்னபாலா போன்ற சிறுவர் கதை இலக்கியங்கள் சார்ந்த இதழ்களோடு கோகுலம், சுட்டி விகடன் போன்ற பரந்த வாசிப்பு எல்லையைக் கொண்ட சஞ்சி கைகளும் தம் இருப்பைக் கலைத்து விட்டன.

இந்தச் சூழலில் ஈழத்தில் இருந்து "அறிந்திரன்" என்ற சிறுவர் இதழ் வெளிவருவதோடு, எடுத்த எடுப்பிலேயே அதற்கு ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்தும் வாசகர்களை ஈர்த்தது அதன் முதல் வெற்றி எனலாம்.

ஒருவனது பரந்த வாசிப்பு வெளிக்கும், பன்முக எழுத்தாற்றலுக்கும் முகிழ் போல அமைவது அவனது சிறு வயது வாசிப்புப் பழக்கம்.

இதற்கான முன்னோடிச் செயற்பாடாக "அறிந்திரன்" சிறுவர் இதழ், கணபதி சர்வானந்தாவை ஆசிரியராகக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றது. சிறுவர்களுக் குக் கைக்கு அடக்கமாக, வள வள காகிதத் தில் பல் நிறமூட்டிய பதிப்பாக வந்ததே இந்த இதழின் சீரிய நோக்குத் தெளிவா கின்றது. அதுவும் வெறும் இருபது ரூபா இலங்கைக் காசில் விலை நிர்ணயித்திருப்பது கூட சிறுவர்களின் காற்சட்டைப்பை யில் தேங்கும் பணத்தை இலக்கு வைத்த ஒரு எளிய முயற்சியாக அமைந்திருக்கின்றது.

"புத்தகப் படிப்பைத் தாண்டிய பரவலான வாசிப்பே ஒரு மனிதனைப் பூரணமாக்கும்" என்ற தொனியோடு ஆசிரியர் அறிவன் அண்ணாவின் ஆசிரியத் தலையங்கம் தாங்கி, நன்னெறிக் கதை, அறிவியல், உலக நடப்பு, வித்தியாசத்தைக் கண்டு பிடியுங்கள், புவியியல், வர்ணம் தீட்டுதல், குறுக்கெழுத் துப் போட்டி, கவிதை என்று ஒரு முழுமை யான சிறுவர் இதழாக, அழகான வடிவமைப்பு, புகைப் படங்கள் என்று கலந்து கட்டி ஜொலிக்கிறது.

ஐந்தாவது இதழில் தமிழகத்து எழுத்தாளர் அழ. வள்ளியப்பாவை உள் வாங்கிக் கொண்டதைப்போல எதிர்காலத்தில் ஈழத்துக் கவிஞர்கள் அமரர் சத்தியசீலன், துரை சிங்கம் போன்றோரையும் "அறிந்திரன்" உள்வாங்க வேண்டும்.




தன்னுடைய முதல் இதழில் எப்படியான இலகு நடை, சிறுவர்களை இலக்கு வைத்த படைப்புகள் என்று கோடிட்டுக் காட்டியதோ அதனைத் தன் தொடர்ந்த இதழ்களிலும் விடாப்பிடியாக வைத்திருப்பதோடு, இந்தப் பாங்கிலேயே அறிந்திரனில் பங்களிக்கும் சிறுவர்களையும் எழுத வைப்பது அறிந்திரனின் ஆளுமைத் திறனுக்கு ஓர் சான்று.

இன்று சிறுவர் சஞ்சிகைகள் தமிழகத்திலும் நின்று போன நிலையில் "அறிந்திரன்" வரவு ஈழத்துச் சிறுவர் இலக்கியப் பரப்பில் மட்டுமல்ல உலகத் தமிழரது வாசிப்பு வட்டத்தில் மிக முக்கியமானதொரு செயற்பாடாக நோக்க வேண்டும். ■




# ஆசி கந்தராஜாவின் "பணச்சடங்கு"

ஆசி கந்தராஜாவின் மற்று மொரு சிறுகதைத் தொகுப்பான "பணச்சடங்கு" இலங்கை, "எங் கட புத்தகங்கள்" நிறுவன வெளி யீடாக சமீபத்தில் வெளி வந்துள் ளது. இந்நூலுக்கு அணிந்துரை எழுதிய பிரபல இந்திய எழுத்தா ளர் நாஞ்சில் நாடன், "பணச் சடங்கு சிறுகதைத் தொகுப்பில் பதினைந்து கதைகள். ஒருசேர இவற்றை வாசித்து முடித்த போது எவ்வகை மிகையும் போலிமையும் இன்றி எனக்குச் சொல்லத் தோன்றுவது இவ் வகைக் கதைகள் தமிழுக்குப் புதி யன என்று.

புனைவும் அறிவிய லும் இயற்கையும் பண்பாட் டுக்கூறுகளும் சுவைபட விரவப் பட்டு வாசிப்பு அனுபவத்தை மேம்படுத்து கின்றன" எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை முன்னுரை எழுதிய கல்வி மான் பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் பின்வரு மாறு சொல்கிறார். "ஆசி கந்தராஜா இன்றைய ஈழத்து புலம்பெயர் எழுத்துலகில் மிக முக்கியமான ஆளுமைகளுள் ஒருவர். "பணச் சடங்கு" என்னும் இவரின் தொகுப்பில் உள்ள சிறுகதைகள் ஒவ்வொன்றும் கந்தராஜாவின் முத்திரை பதித்த கதைகள். வாசிக் கும் ஆர்வத்தைத் தூண்டுபவை. பல கதைகள் மனதை அதிரவைப் பவை என்கிறார்.

ஆசி கந்தராஜா, இலங்கை சாகித்திய விருது மற்றும் இந்திய தமிழக அரசின் தமிழ்ச்சங்க விருது உட்பட பல விருதுகள் பெற்ற மூத்த எழுத்தாளராவார். கைதடியைச் சேர்ந்த இவர், அவுஸ்தி ரேலியாவில் பேராசிரியராகக் கடமையாற்றிவருகின்றார்.

# தெத்தெரி... தெத்தெரி

**ஜீவகுமாரன்** -டென்மார்க்



தெத்தெரி...தெத்தெரி...தெத்தெரி... தெரி... தெரி.... தெரியேல்லை...

தெத்தெரி... தெத்தெரி..தெத்தெரி... தெரி... தெரி... தெரியேல்லை...”

“தெத்தெரிக் குருடன்” டென்மார்க்கிற்கு வந்தது போல இருந்தது.

சிவமணி திடுக்கிட்டு எழுந்தார்.

பகல்நேரத் தூக்கத்தில் இருந்து எழும்பிய திகைப்பில் தெத்தெரிக் குருடனும் டென்மார்க் செஞ்சிலுவைச் சங்கத்தின் அகதி முகாமுக்கு வந்து விட்டானோ என்றும்... எப்படி வந்தான் என்ற வியப்புடனும் சுற்றும் முற்றும் பார்த்தார்.

அவனைக் காணவில்லை.

சிவமணியின் கனவுக்கும் பிரமைக்கும் இடையில் அவன் நின்றிருந்தான்.

அவரின் முகம் கைகால்கள் எல்லாம் வியர்ந்திருந்தன. சேலைத் தலைப்பால் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

தனது மன உளைச்சலைப் பகிர்ந்து கொள்ள அவளது கணவன் இராசநாய கமோ மகன் பாலனோ அறையில் இல்லை.

இராசநாயத்தார் பக்கத்து அறையில் இருந்த மற்ற இலங்கை ஆட்களுடன் சீட்டு விளையாடப் போயிருந்தார்.

பாலன் தன் வயதொத்த இளைஞர் களுடன் வலைப்பந்து விளையாடப் போயிருந்தான்.

தெத்தெரிக் குருடனை யாழ்ப்பாணக் குடாநாட்டில் தெரியாதவர்களே இல்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தாண்டி பரந்தன் கிளிநொச்சி விசுவமடு முள்ளிவாய்க்கால்வரை அனைவரும் அவனை அறிந்திருந்தார்கள்.

அவனின் நதிமூலம் ரிஷிமூலம் எதுவும் யாருக்கும் தெரியாது.

பிறப்பிலேயே குருடனான அவனின் கண்கள் திறந்திருப்பது போலவே இருக்கும்.

எனவே அனைவரும் அவனுக்கு கண்தெரிகிறது என்று சொல்லும் பொழுது “தெரியேல்லை... தெரியேல்லை...” எனச் சொல்லத் தொடங்கி அவனாகவே “தெத்தெரி... தெத்தெரி.... தெரியேல்லை” எனச் சொல்லவும் அவனின் பெயரும் “தெத்தெரி” ஆகிவிட்டது.

அவன் தன் தலையை ஆட்டி ஆட்டி அவ்வாறு சொல்லியதாலோ என்னவோ அவனுக்கு தலையாட்டும் பழக்கமும் வந்து விட்டது.

தேனீர் குடிக்கும் பொழுதும் சரி... சாப்பிடும் பொழுதும் சரி.. தலையை ஆட்டிக் கொண்டே இருப்பான்.

தலை போகும் திசையை நோக்கி தேத்தண்ணிக் கோப்பை போகும். அல்லது வாயை நோக்கி சாப்பாடு போகும்.

சில இடங்களில் தலையாட்டித் தெத்தெரி என்றும் அழைப்பார்கள்.

அவன் என்றும் சேட்டோ பனியனோ அணிந்து யாரும் கண்டதில்லை.

இடுப்பிற்கும் முழங்காலுக்கும் இடையே ஒரு சாரத்தை அணிந்திருப்பான் - தனது நடைக்கு இடைஞ்சல் இல்லாதவாறு. சாதாராண சாரம் அவனுக்கு இரண்டு சாரங்களாக பிரித்துப் பாவிக்க முடியும். அவனின் சாரங்களுக்கு நடுவில் இணைப்பு இராது. நாலு முழ வேட்டியைக் கட்டிக் கொள்ளுவது போல கட்டிக் கொள்வான். இடுப்பில் தங்கி நிற்பதற்காக ஒரு முடிச்சு ஒன்றைப் போட்டிருப்பான். பொதுவாக அந்த முடிச்சினுள் அவன் ஏதாவது காசை முடிந்து வைத்திருக்கின்றான் என நினைப்பார்கள். ஆனால் அப்படி அல்ல. அவனின் சாராத்தை யாராவது தோய்த்துக் கொடுக்க உதவி செய்யும் பொழுதும் அந்த முடிச்சைக் கழற்றி விட வேண்டாம் என கேட்டுக் கொள்வான்.

சில சிறுவர்கள் அவனது கண்ணுக்கு நேரே டோர்ச் லைற்றை அடித்தால் ஏதோ ஒரு கூச்ச உணர்வால் இன்னமும் தலையாட்டுவான்.

“அப்போ உனக்கு கண்ணு தெரிகிறது” என்று சிறுவர்கள் பரிகாசம் செய்தால் தனது ஊன்றுகோலை சுற்றி அவர்களைக் கலைப்பான்.

அவன் செல்லும் ஊர்களில் எல்லாம் அவனுக்கு ஆதரவு கொடுக்க சுமார் பத்து பன்னிரண்டு வீடுகள் இருந்தன.

இவ்வாறு 5-6 ஊர்களில் மொத்தம் ஐம்பதில் இருந்து அறுபது வீடுகள் அவனுக்கு உறவுகளாகும்.

ஒவ்வோர் ஊர்களிலும் அவனுக்கான தேனீர் குவளையோ அல்லது பாவித்த பால் ரின்னோ அத்துடன் எனாமல் கழன்று போன சாப்பாட்டுக் கோப்பையோ அவர் அவர்கள் வீட்டு தாழ்வாரங்களில் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும்.

காலைத்தேநீருக்கு... காலைச்சாப்பாட்டுக்கு... மதிய சாப்பாட்டுக்கு... மாலைத்தேநீருக்கு... இரவுச் சாப்பாட்டுக்கும் நித்திரைக்கும் என ஒவ்வோர் ஊரிலும் உள்ள அந்த பத்துப் பன்னிரண்டு வீடுகளையும் தானே பிரித்து வைத்துக் கொள்வான்.

அவர்கள் தன்னை மறந்து விடக்கூடாது என்பதற்காகச் சிலவேளை இரண்டு மூன்று வீடுகளில் காலைத்தேனீர் வாங்கிக் குடிப்பான். அவ்வாறே மாலைத் தேனீரும். சிலவேளைகளில் காலைச்சாப்பாட்டு கூட இரண்டு வீடுகளில் அமைந்து விடுவதுண்டு.

அவ்வகையில் கொக்குவிலில் இரவுச் சாப்பாட்டுக் கும் இரவுத்தூக்கத்திற்கும் இராசநாயகம் சிவமணிவீடு.

வெள்ளிக்கிழமைகளில் அல்லது திருவிழாக்காலங் களில் மாமிச உணவுகள் கிடைக்காத வீட்டுக்காரரை “சாமியார் வீடுகள்” என பரிகாசம் பண்ணுவான். அவ்வாறாக மற்றவர்கள் மரக்கறி சமைக்கும் நாட்களில் கிறிஸ்தவ வீடுகளைத் தேடிச்செல்வான்.

அவனுக்கு யாராவது ரோஷம் வருமாறு அவனது குருட்டுத்தன்மையைப் பற்றி அல்லது ஏழ்மையைப் பற்றி பேசிவிட்டால் பின்பு அவர்கள் வீட்டுக்குப் பேகமாட்டான். அவ்வளவு ரோசக்காரன் அவன்.

முதலில் சென்ற ஊர்களில் பிச்சை எடுத்த காசை பாலனிடம் கொடுத்து எண்ணி வாங்குவான். அல்லது பாலனையே கவனமாக வைத்துக் கொள்ளும்படி கொடுப்பான்.

பாலன் இராசநாயம் சிவமணியின் ஒரே மகன். 16 வயதை எட்டிக் கொண்டு இருந்தான். எல்லோரையும் நம்பி அவன் தனது காசுப் பேணியை யாரிடமும் கொடுக்கமாட்டான். தெத்தரிக்கு ஊருக்கு ஒரு சேமிப்பு வங்கி. இங்கு அது இராசநாயகத்தார் வீடு. முகாமையாளர் பாலன்.

கொக்குவிலில் தங்கியிருக்கும் இரண்டு கிழமையில் ஏதாவது ஒரு சனிக்கிழமையில் பால னைக் கொண்டு 200 மில்லி சாராயம் வாங்கிக் குடித்து விட்டு உரத்த குரலில் பாடுவான்.

”பூமியில் மானிட ஜென்மம மடைந்துமோர்
புண்ணியம் மின்றி விலங்குகள் போல்”, என்ற பாடலை அபசுரத்தில் பாடுவான்.

“சங்கீத வித்துவான் இனிப்பாட்டை நிற்பாட் டுங்கோ” என சிவமணிஅவனைப் பரிகாசம் செய்வார்.

அதேவேளை பாலனை சாராயக் கடைக்கு அனுப்பியதற்காக தங்கம் மாவிடம் நல்ல திட்டும் வாங்குவான்.

அவ்வாறே தனக்குப் பிடித்த மாட்டிறச்சி கால் கிலோவை வாங்கி பாலனைக் கொண்டு வீட்டின் வெளி வளவுக்குள் கல்லு அடுப்பு வைத்து சமைப்பித்தும் உண்பான்.

மாட்டிறைச்சியை எல்லாம் சிவமணி அம்மையாரின் குசினி உள்ளே அனு மதியாது. அப்பிடி ஒரு சாதிப் பிரதிஷ் டம்... அல்லது சைவப்பிரதிஷ்டம்.

பாலனே அன்று அவனுக்கு தலையில் குளிக்க வார்த்து அவனது ஊத்தைச் சாரங்களையும் துவைத்துக் கொடுப் பான். அதற்காக சிவமணியிடம் வேறு பாலன் ஏச்சு வேண்ட வேண்டி வரும்.

மற்ற மற்ற ஊர்க்களில் அவன் கிணற்றடியில் தன் கச்சையுடன் குந்தியிருந்து தனது சரத்தை கும்மி கும்மி தோய்க்கும் பொழுதும் தலையில் அள்ளி ஊர்த்தும் தண்ணீரிலேயே அவன் சரத்தைத் தோய்ப்பான். சில வேளை வீட்டுக்காரர்கள் தங்களுக்கு வேண்டிய ஒரு சவர்க்காரத் துண்டில் சிறிய துண்டை வெட்டி அவனுக்குக் கொடுப்பார்கள். அல்லது கிட்டத் தட்ட முற்று முழு தாக தேய்ந்து போன சவர்க்காரக் கட்டியை கொடுப்பார்கள்.

அவன் பாலனிடம் நெடுகச் சொல்வது ஒன்றுதான்.

“மற்ற மற்ற இடத்தில் உள்ள என்ரை காசு எல்லாத்தையும் விசுவமடு விதானையார் வீட்டைதான் குடுத்து வைச்சிருக்கிறன். நான் செத்தால் நீ தான் வந்து என்னை அடக்கம் செய்ய வேண்டும்.

அதுக்குப் பிறகு இருக்கிற எல்லாக் காசுக்கும் சந்நதி கோவிலில் இருக்கிற பிச்சைக்காரருக்கு அன்னதானம் செய்ய வேண்டும்”

அவ்வளவு பாசமும், அன்பும், நம்பிக்கையும் பாலனில் அவனுக்கிருந்தது.

அவன் ஒவ்வோர் வீடாகத் திரியும் பொழுது அவன் அங்கு இருக்கின்றான் என்பதை மறந்து அந்த வீட்டுக்கா ரர் ஏதாவது குடும்பக் கதைகள் கதைத்து விட்டால் அவன் ஊரெல்லாம் பரப்பி விடுவான்.

அவனுக்கு கண் தெரியாது என்று தெரிந்த மக்கள் அவனுக்கு காது கேட்கும் என்பதனை மறந்து விடுவார்கள்.

பின்பு எல்லாரிடமும் நல்ல ஏச்சும் திட்டும் வாங்குவான்.

பல வீடுகளின் நதிமூலம் ரிஷி மூலம் இவன் மூலமே வெளிக் கசிந்து விடுவது உண்டு ... பள்ளி செல்லும் பழைய சேர்மனின் கடைசிப் பெண்ணின் வயிற்றை வீட்டில் வைத்து சின்னத்தாயி மருத்துவிச்சி கலைத்த விடயம் ஊருக்கு தெரிய வந்து அந்தப் பெண் தற்கொலை செய்தது ஊரறிந்த விடயம் ஆயிற்று. அன்றிலிந்து பழைய சேர்மன் வீட்டார் இவனை அங்கு சேர்ப்பதில்லை.

இராசநாயகம் குடும்பம் டென்மார்க் வருவதற்காக மலேசியா சென்று அங்கிருந்து டென்மார்க் செல்ல ஆயத்தம் செய்து கொண்டிருந்த அந்தக் கிழமை இவன் அங்கு முற்றத்தில் இருந்து தன்பாட்டில் தலையையும் ஆட்டிக் கொண்டும் சிவமணி கொடுத்த முறுக்கை ஒரு பக்க வாயால் கொறித்துக் கொண்டும் இருந்த பொழுது, இவன் அங்கு இருக்கின்றான் என்பதனை மறந்து மலேசியா ஊடாக டென்மார்க்கிற்கு பயணம் செய்யவுள்ள பயணக் கதையைக் கதைத்து விட்டார்கள்.

அன்று நடுநிசி இருக்கும்.

தூரத்தில் நாய்கள் ஊளையிட்டுக் கொண்டிருந்தன.

தெத்தரி முணங்கி முணங்கி அழுது கொண்டிருந்தது போல இருந்திருக்கின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க....)

# நூல் வெளியீடு:

## புதுக்கோட்டையில் மலையக எழுத்தாளர் க.தங்கவேலுவின் ‘கறிவேப்பிலைகள்’




பதுளை, கந்தேகெதர கொல்லு மண்டித் தோட்டத்தில் 1947 இல் பிறந்து, புதுவாழ்வு காண்பதற்காக சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் மார் 1970களில் தாயகம் திரும்பி, தற்போது புதுக்கோட்டையில் வாழும் ‘குறிஞ்சித்தங்கம்’ நூலாசிரியர் தங்கவேலு, தாம் பதுளையில் வாழ்ந்த காலத்தில் எழுதிய பதினொரு சிறுகதைகளை தொகுத்து, ‘கறிவேப்பிலைகள்’ என்ற தலைப்பில் வெளியிட்ட சிறுகதைத் தொகுதியின் வெளியீட்டு விழா புதுக் கோட்டை அம்மா சரஸ்வதி இல்ல புலவர் தி. சு. மலையப் பனார் அரங்கில் நடைபெற்றது.

இக் கதைகள் 1970இல் வெளிவந்திருக்கவேண்டும். சூழ்நிலைத் தாக்கங்களால் சுமார் 50 ஆண்டுகளுக்குப் பின்னால் வெளிவரும் நிலை ஏற்பட்டுள்ளது. இக்கதைகள் வெளிவர தூண்டுகோலாய்




இருப்பவர், மலையகத்தின் மூத்த பத்திரிகையாளரும், 1960களின் முற்பகுதியில் மலையகத்தின் எழுச்சி நாயகன் இர. சிவலிங்கம் அவர்களின் பாசறையில் வளர்ந்தவருமான மலையக அரசியல், கலை இலக்கிய செயற்பாட்டாளர் எச். எச். விக்கிரமசிங்க.

காலமென்ற தூசுக்குள் அமிழ்ந்து புதைந்து போயிருந்த என்னை - எனது இருப்பிடத்தை மிகவும் சிரமப்பட்டு கண்டறிந்து, என்மீது படர்ந்திருந்த தூசுகளைத் தட்டி அகழ்ந்து மீட்டெடுத்து, வெளிக் கொண்டுவந்த அவருக்கு நன்றி. மேலும், எனது கதைகளிலொன்றைத் தந்துதவிய, தற்போது லண்டனில் வசித்து வருபவரும், எனது பள்ளிக் கூட நண்பரும், சமூக வரலாற்று ஆய்வாளரும், முன்னாள் சிரேஷ்ட பொருளிய விரிவுரையாளருமான ‘ஈழத்து மலையக இலக்கிய செல்நெறி’ மு. நித்தியானந்தனையும் இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானது என்று, ‘கறிவேப்பலை’ சிறுகதைத் தொகுதியின் ஆசிரியர் க. தங்கவேலு தனது முன்னுரையில் பதிவு செய்துள்ளார்.

‘தூக்குப் பையுக்குள் தானிய மணிகள்’ என்று மு. நித்தியானந்தன் எழுதிய அணிந்துரையும், மலைநாட்டு எழுத்தாளர் மன்றத் தலைவர் தெளிவத்தை ஜோசப்பின் கருத்துரையும், பேராசிரியர் சோ. சந்திரசேகரனின் வாழ்த்துரையும் இத்தொகுதிக்கு அணி சேர்க்கின்றன.

---

# தெத்தெரி... தெத்தெரி

(15 ஆம் பக்கத் தொடர்ச்சி....)

இதுவரையும் அவன் அழுது யாரும் பார்த்ததும் இல்லை. கேட்டதும் இல்லை.

அவனின் இருபது வயதுப் பராயத்தில் சாவகச்சேரிச் சந்தையில் இவனுடன் தன்னை இணைத்தும் இணையாமலும் இருந்த கமலி என்ற ஒரு குருட்டுப் பெண்ணுடன் இவனுக்கு ஏற்பட்ட தொடர்பும்... பின்பொரு நடுநிசியில் நாலைந்து குடிகாரார் அவளை வாய் பொத்தி தூக்கிச் சென்று ரயில்வே தண்டவாளத்தில் சீரழித்ததும்... அந்த வேதனையில் அடுத்த நாள் கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி வந்த மெயில் வண்டி முன் அவள் பாய்ந்து தற்கொலை செய்த போதும் அவன் அழவேயில்லை.

சந்தையில் வரி போடும் கனகரம்மான் அவனை கைத்தாங்கலாக பிடித்துக் கூட்டிக் கொண்டு போய் அவளின் இறந்த உடலை தொட்டுப் பார்த்ததுடன் அவனது காதல் வாழ்வு முடிந்து விட்டது.

அப்போது கூட அழாத இவன் அழுது முணுகிய போது அவனுக்கு அடுத்த விறாந்தையில் படுத்திருந்த பாலன் அவனைத் தட்டி எழுப்பி, “தெத்தரி உனக்கேதும் காச்சாலா?” எனக் கேட்க முதல் பாலனைக் கட்டிப் பிடித்தபடி அழத்தொடங்கி விட்டான்.

எல்லோரும் நித்திரையில் இருந்து திகைத்து எழுந்து ஓடி வந்தார்கள்.

அவன் பாலனைக் கட்டிப் பிடித்தபடி, “நீ என்னை விட்டுட்டுப் போகப் போறியோ” என பலத்த குரலில் அழுதான்.

அனைவரும் திகைத்துப் போய் நின்றார்கள்.

பகலில் அவனிருந்த பொழுது தாங்கள் கதைத்தவைகளை அவன் கேட்டு விட்டான் எனப் புரிந்தது.

இராசநாயகமும் சிவமணியும் அவனை அணைத்து தேற்ற முயன்று தோற்றுக் கொண்டிருந்தார்கள்.

“வெள்ளிக் கிழமைகளில் நீங்கள் எல்லாரும் சாமியள் என்றாலும் உங்கடை வீட்டைதானே தேடி படுக்க வாறனான். இனி எங்கை போவன்”

அவனின் அழுகையை அடக்க முடியவில்லை.

“தெத்தரி! எங்களுக்கு இப்பிடி ஒரு யோசனை பின்னேரம் போலை இருந்தது தான். ஆனால் இப்ப அப்பிடியில்லை... அதாலை நாளைக்கு ஊரெல்லாம் சொல்லித் திரியாதே”, இராசநாயகமும் துணிந்து ஒரு பொய்யைச் சொல்லி அவனைச் சமாதானப்படுத்தினார்.

அவனும் சமாதானப்பட்டவன் போலக் காணப்பட்டான்.

பின்பு எல்லோரும் அமைதியாகத் தூங்கி விட்டார்கள்.

ஆனால் இன்று பகல் கனவு கண்ட பொழுது ஏதோ அவனுக்கு துரோகம் செய்து போட்டு வந்து விட்டது போல சிவமணிக்கு மனத்திற்குள் ஒரு குற்ற உணர்வு.

தெத்தெரியை பலர் தங்கள் வீட்டில் ஒருவனாகப் பாசம் காட்டினாலும் யாராவது பயணம் செல்லும் பொழுது அவன் கண்ணெதிரே வருவதைத் தவிர்த்துக் கொள்வார்கள்.

குருடனின் முழிவியளம் போகிற காரியத்திற்கு கூடாது என்பது அவர்களது ஐதீகம்.

எனவேதான் இன்று அவனைக் கனவில் கண்ட பொழுது சிவமணிக்கு மனம் சஞ்சலப்பட்டது.

அன்று பகல் முழுக்க தெத்தெரிக் குருடனும்.. ஊரில் உள்ள மற்றவர்களும்.. காலையும் மாலையும் தாண்டிச் செய்யும் வைரவ கோயிலையும்... மேலாக பயணத்திற்காக மூன்று தலைமுறையாக அவர்கள் வாழ்ந்த வீட்டை அறாவிலைக்கு வட்டிக்கார பசுபதிக்கு விற்றுவிட்டு வந்ததும்.... சிவமணியின் நினைவில் வந்து வந்து எந்த வேலையும் செய்ய விடாமல் குழப்பிக் கொண்டிருந்தன.

▼ ▼ ▼

அடுத்த நாள் மூன்று விடயங்கள் நடைபெற்றன.

ஒன்றுடன் ஒன்று தொடர்பு உடையது போலவும் இருந்தது.

இல்லாதது போலவும் இருந்தது.

(1)

அதிகாலையில் வந்த செய்தியால் கிட்டத் தட்ட குடும்பமே ஊரில் உள்ள மற்ற உறவினர்களிம் முன்னால் தலை குனிந்து நிற்பது போல உணர்ந்தார்கள்.

யாருக்கும் தெரியாது மிகவும் மலிவாக எவருக்கு தங்கள் வீட்டையும் பொதுக்கிணறு இருந்த அவர்களின் காணியையும் விற்றார்களோ, அவர் மிக உயர்ந்த விலைக்கு முன்பின் தெரியாத ஒரு பகுதியினருக்கு விற்று விட்டாராம்.

ஊரில் உள்ள உறவினர்கள் இப்போது காணியை வாங்கிய குடும்பத்தினரின் நதிமூலம் ரிஷி மூலத்தை விசாரித்துக் கொண்டு இருக்கின்றார்களாம்.

(2)

காலை பத்து மணி போல இராசநாயகம் குடும்பம் டென்மார்க் அரசாங்கத்திடம் விண்ணப்பித்திருந்த அகதிக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

நீதிமன்றத்திற்கு கொண்டு சென்றாலும் கூட மீள் விசாரணை செய்யும் தகமை இழந்த ஒரு கோரிக்கையாக கருதப்பட்டு நிராகரிக்கப்பட்டிருந்தால் அவர்களின் வழக்கை மேல் அகதிகள் மன்றத்தில் முறையீடு செய்ய முடியாது என உறுதிப்பட்டிருந்தது.

அவர்களை பொருளாதாரத்திற்கும் நல்வாழ்விற்கும் அகதி அந்தஸ்து கோரும் ”பொருளாதார அகதிகள்” பிரிவில இணைத்திருந்தார்கள்.

அத்துடன் அவர்களை நாடு கடத்தும் ஏற்பாடுகளை கவனிக்கும் பொலிஸ்பிரிவினருடன் ஒத்துழைக்கும்படி அறிவுறுத்தப்பட் டிருந்தது.

(3)

மாலையில் பரந்தனுக்கும் கிளிநொச்சிக்கும் இடையில் பஸ் நின்று செல்லும் பெரிய நாவல் மரத்தடியில் தெத்தெரி முதல்நாள் இரவு மரணம் அடைந்திருந்தான்.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் : 1 மணித்தியாலம்


கல்வி tv CHANNEL

26. கபடி மட்டும் விளையாடுபவர் யார்?

1) H 2) A 3) D

27. தளவாடியில் பார்க்கும்போது மாற்றமின்றித் தெரியும் உரு யாது?

1) 2) 3)



28. 21 ஆம் நூற்றாண்டின் 7 ஆவது தசாப்தத்திற்கு உரிய ஆண்டினைத் தெரிவு செய்க.

1) 2007 ஆம் ஆண்டு 2) 2021 ஆம் ஆண்டு 3) 2061 ஆம் ஆண்டு

❖ **29 ஆம், 30ஆம் வினாக்களுக்குத் தரப்பட்ட கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு விடையினைத் தெரிவு செய்க.**

29. ஏப்ரல் மாதம் முழுவதும் தினமும் உண்டியலில் பணம் சேர்க்கும் ஒருவர் பணம் சேர்க்கும் நாள் எத்தனையாம் திகதியோ அந்தத் திகதிக்குரிய பணத்தை உண்டியலில் இடுவார் எனின் 30ஆம் நாளின் இறுதியில் அவர் சேர்ந்த பணம் எவ்வளவு?

1) ரூபாய் 450.00 2) ரூபாய் 465.00 3) ரூபாய் 30.00


30. இரும்பு ஒட்டும் தொழிற்சாலை ஒன்றில் 2 கம்பிகளைப் பொருத்தி ஒட்டுவதற்கு ரூபாய் 50.00 செலுத்த வேண்டும். 9 கம்பித்துண்டுகளை ஒன்றாகப் பொருத்துவதற்கு செலவாகும் பணம் எவ்வளவு?,

1) ரூபாய் 100.00 2) ரூபாய் 450.00 3) ரூபாய் 400.00

31. 3 மீற்றர் நீளமும் 2 மீற்றர் அகலமும் உடைய சுவர் ஒன்றிற்கு தீந்தை பூசுவற்கு 2ℓ தீந்தை தேவைப்பட்டது எனின், 6 மீற்றர் நீளமும் 3 மீற்றர் அகலமும் உடைய சுவரிற்குப் பூசுவதற்குத் தேவையான தீந்தை எவ்வளவு?

1) 3 ℓ 2) 4 ℓ 3) 6 ℓ

❖ **32 ஆம், 33 ஆம் வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள தொடர்பினை அவதானித்து விடை எழுதுக.**



+ = ரூபாய் 140.00

+ = ரூபாய் 250.00

32. 6 பென்சில்களினதும் 3 கொப்பிகளினதும் விலை யாது?

1) ரூபாய் 250.00 2) ரூபாய் 390.00 3) ரூபாய் 400.00

33. ஒரு கொப்பியின் விலைக்கும் ஒரு பென்சிலின் விலைக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

1) ரூபாய் 90.00 2) ரூபாய் 50.00 3) ரூபாய் 100.00

34. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு A, B, C ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகளைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| A ................................ | மல்லிகை | பலா |
| கத்தரி | B ................................ | மா |
| துளசி | தாமரை | C ................................ |

1) பூசணி, பாகல், பாலை 2) வெண்டி, பூசணி, வேம்பு 3) மிளகாய், பாகல், வாழை

35. சரியான கணிதச் செய்கைக்குரிய கோவையைத் தெரிவு செய்க.

1) $6 \times 4 + 6 = 60$

2) $6 \times 6 + 4 = 40$


3) $6 \times 0 + 4 = 10$

36.

A

B

C




A என்ற கீலம் புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பெற்று B, என்ற கீலம் பெறப்பட்டது. B புள்ளிக் கோடுகள் வழியே மடிக்கப்பட்டு C என்ற கீலம் பெறப்பட்டு குறித்த பகுதிகள் வெட்டி அகற்றிய பின் விரிக்கும் போது தோற்றமளிக்கும் விதத்தைக் காட்டும் உரு எது?

1)

2)

3)



# மூன்று வாரங்களுக்கேனும் நாட்டை முடக்க வேண்டும்!

## ஒரு வார ஊரடங்கு பயனற்றது என்கிறார் சம்பிக்க



கொழும்பு, ஓக. 22

"ஒருவார காலத்துக்கு மாத்திரம் நாட்டை முடக்குவதால் எவ்வித பயனும் ஏற்படாது. ஏனெனில் கொரோனாவின் தாக்கம் தீவிரடைந்துள்ளது. குறைந்தபட்சம் மூன்று வாரங்களுக்காவது நாட்டை முழுமையாக முடக்க வேண்டும்."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போரை வெற்றி கொண்டதைப் போன்று கொரோனா வைரஸ் தாக்கத்தையும் வெற்றி கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு ஜனாதிபதி மற்றும் அவர் தலைமையிலான அரசு செயற்பட்டதால் இன்று நாட்டு மக்கள் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளார்கள்.

அரசின் மந்தகரமான செயற்பாடு காரணமாக நாட்டு மக்கள் வாழ்வா, சாவா என்ற போராட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

சித்திரைப் புத்தாண்டுக் கொரோனாக் கொத்தணியைத் தொடர்ந்து வைரஸ் பரவல் தீவிரமடைந்துள்ளது. ஆகவே, நாட்டை முடக்குங்கள் எனப் பல்வேறு தரப்பினர் அரசிடம் வலியுறுத்தினர்.

சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட பேராசிரியர் சுகத் அகம்பொடி கடந்த 5 ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ ருவிட்டர் வலைத்தளத்தில், "அரசு டெல்டா வைரஸ் தாக்கத்துக்குச் சவால் விடுத்துள்ளது. ஆகவே, இனிவரும் நாட்களில் ஒரு நாளில் 150 தொடக்கம் 200 வரையிலான உடல்களைத் தகனம் செய்யும் தகனசாலைகளை இனித் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று அரசின் பொறுப்பற்ற செயற்பாட்டை விமர்சித்து நாடு எதிர்கொண்டுள்ள அச்சுறுத்தல் தன்மையை விளக்கிப் பதிவேற்றம் செய்திருந்தார்.

பின்னர் அவர் ஆகஸ்ட் 10 ஆம் திகதி "கொரோனாத் தொற்று தீவிரமடைந்துள்ளது. ஆகவே, நாட்டை மூன்று வாரங்களுக்குக் கட்டாயம் முடக்க வேண்டும். இல்லாவிடின் 20 நாட்களுக்குள் 1200 மரணங்கள் பதிவாகும். இவற்றில் 700 மரணங்களை மனிதப் படுகொலையாகக் கருத வேண்டும்" என்று பதிவேற்றம் செய்திருந்தார்.

இவரது கணிப்பு இன்று உண்மையாகிவிட்டது. கொரோனாத் தொற்றால் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை கடந்த ஒரு வாரத்திலிருந்து அதிகரித்துள்ளதே தவிர குறைவடையவில்லை. நாட்டை முடக்குங்கள் என்று விசேட வைத்திய நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைக்கு ஜனாதிபதி செவிசாய்க்கவில்லை.

ஆசிய நாடுகளில் கொரோனாத் தொற்றால் பதிவாகும் மரணங்களின் தரப்படுத்தலில் இலங்கை முன்னிலை வகிக்கின்றது. இரண்டாவதாக மலேசியா உள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த மலேசிய அரசு பலவீனமடைந்துள்ளது என்று அந்த நாட்டு மக்கள் அரசுக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

மக்களின் சிந்தனைக்கும், கருத்துக்கும் மதிப்பளித்து அந்த நாட்டுப் பிரதமர் பதவி விலகினார். இதுவே சிறந்த அரச தலைவருக்கு எடுத்துக்காட்டு. இவ்வாறான கலாசாரத்தை எமது நாட்டில் காண முடியாது.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை தொடர்பில் முரண்பட்ட தரப்படுத்தல் காணப்படுகின்றது.

அரசு வழங்கும் தரவுக்கும், பிரதேச சுகாதாரப் பணிப்பாளர்கள் வழங்கும் தரவுக்கும் இடையில் பாரிய வேறுபாடு காணப்படுகின்றது.இதற்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் பொறுப்புக்கூற வேண்டும்.

கொரோனாத் தாக்கத்தைக் கருத்தில்கொண்டு 10 நாட்களுக்கு நாடு தழுவிய ரீதியில் நாட்டை முடக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆனால், அத்தியாவசிய சேவைகள் மாத்திரம் வழமை போன்று இடம்பெறும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு வார காலத்துக்கு மாத்திரம் நாட்டை முடக்குவதால் எவ்வித பயனும் கிடைக்கப் பெறாது. இதனால் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையும், பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கையும் குறைவடையாது.

சுகாதார வழிமுறைக்கு அமைய மூன்று வார காலத்துக்கு நாட்டை முடக்குங்கள் என்றே சுகாதாரத் தரப்பினர்கள் குறிப்பிட்டார்கள்.

நாட்டை ஒருபோதும் முடக்க முடியாது என்று ஜனாதிபதி பிடிவாதமாக இருந்தார். இவரது தீர்மானத்தை நாட்டு மக்கள் புறக்கணித்துத் தகுந்த பாடம் புகட்டியுள்ளார்கள்.

அரசைப் புறக்கணித்து மக்கள் ஊரடங்குச் சட்டத்தை சுயமாகப் பிறப்பித்து ஜனாதிபதிக்கும், அரசுக்கும் தகுந்த பாடம் புகட்டியுள்ளார்கள்"

- என்றார். (இ)

## மரண அறிவித்தல்



மலர்வு 26 - 03 - 1943

உதிர்வு 18 - 08 - 2021

### முத்தையா நாகரத்தினம்

### (பொன்னையா J.P)

யாழ். புங்குடுதீவு 4ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா நாகரத்தினம் கடந்த 18.08.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முத்தையா – தங்கம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான நல்லையா – நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுபத்திரையின் அன்புக் கணவரும், அன்பழகன் ( நோர்வே ), அன்பரசி (பிரான்ஸ்), அன்புச் செல்வன் (பிரான்ஸ்), அன்பமுதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நல்லம்மா ( இராசமணி ), கனகம்மா, கிருஸ்ணபிள்ளை, துரையப்பா, பாக்கியம் (பிள்ளையம்மா), கணேசமூர்த்தி (துரைச்சாமி) மற்றும் சிரோன்மணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும்,

காலஞ்சென்ற கணேசு, கணபதிப்பிள்ளை, நல்லையா, ஏகாம்பரம் ( சாம்பு ), நீலாம்பிகை ( நீலா ), பரமேஸ்வரி, தங்கமணி ( கிளி – டென்மார்க்), செல்வமணி (பிரான்ஸ்), காலஞ்சென்ற குருநாதலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற பரமநாதன், பர்வதபத்தினி ஆகியோரின் அன்புச் சகலனும், பஞ்சலிங்கம், விக்கினேஸ்வரி, கோமதி, கௌரிதேவி ஆகியோரின் அன்பு மாமானாரும், அபிநயா, அபிஷன், அட்சயா, தனுசன், தாரகன், தாரகா, அஹானா, அஜானா, ஆதிரா, அனீசன், அனா, அக்சய் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்றுமுன்தினம் (20.08.2021) வெள்ளிக்கிழமை தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீட்டு முகவரி :
இல. 250/4, அளுத்மாவத்தை வீதி,
கொழும்பு – 15.

தகவல் :
**மனைவி, பிள்ளைகள்**

தொடர்புகளுக்கு :
**வீடு (குடும்பத்தினர்) 0112520599**
**சுபத்திரை (மனைவி) 0763724436**
**அன்பு (மகன்) - 004792680580**
**செல்வி (மகள்) - 0033951505339**
**செல்வன் (மகன்) - 0033613027718**
**அமுதன் (மகன்) - 0033629273209**

# பைஸர் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ்

மன்னார், ஓக. 22

நாடு முடக்கப்பட்டுள்ள நிலையிலும் மன்னார் மாவட்டத்தில் பைஸர் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்று வழங்கப்பட்டுள்ளது.

காலை 8.30 மணி முதல் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள மன்னார் சித்தி விநாயகர் இந்து தேசிய பாடசாலை, முசலி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் கட்டையடம்பன் பாடசாலை ஆகிய இடங்களில் பைஸர் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டது.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், வைத்தியசாலை ஊழியர்கள் ஆகியோரின் உதவியுடன் தடுப்பூசி ஏற்றும் பணி முன்னெடுக்கப்பட்டது. (இ)

# மோ. சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்

மாத்தளை, ஓக. 22

மாத்தளை மாவட்டத்தின் கலேவெல பொலிஸ் பிரிவுகுட்பட்ட மஹவெஹெர பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மாத்தளையிலிருந்து கலேவெல நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிச் சென்று மின்சாரத் தூண் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இவ்விபத்தில் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் படுகாயமடைந்த நபரை கலேவெல வைத்தியசாலையில் சேர்த்தபோதிலும் குறித்த நபர் வைத்தியசாலையில் சேர்க்கப்படும்போது உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் கலேவெல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ)

# கொடூரமாகத் தாக்கப்பட்டு ஆண் ஒருவர் படுகொலை!

குருநாகல், ஓக. 22

குருநாகல் மாவட்டம், பொத்துஹெர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்டோம்புவ பிரதேசத்தில் ஆண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் கொடூரமாகத் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தியடோர்வத்த, கல்டொம்புவ பிரதேசத்தைச் சேர்ந்த நபரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுள்ளதுடன் அவர் மீது கல்வீச்சுத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்குள்ளான நபர் படுகாயங்களுடன் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

தனிப்பட்ட பகையே இந்தத் தாக்குதலுக்குக் காரணம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பெண்ணொருவர் உட்பட இருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொத்துஹெர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# மதுபானப் போத்தல்களுடன் மூவர் சிக்கினர்

நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளை பொகவந்தலாவைப் பகுதியில் விற்பனைக்காக சட்டவிரோதமாகக் கொண்டு செல்லப்பட்ட 100 மதுபானப் போத்தல்களுடன் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவைப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய பொகவந்தலாவைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாந்த பண்டார தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த மதுபானப் போத்தல்கள் மீட்கப்பட்டன. (இ)

## யாழ்.குடாநாட்டில்...

தில் 413 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் விவரம் வருமாறு:

யாழ்.மாவட்டத்தில் 80 பேர்

யாழ்.போதனா வைத்தியசாலையில் 24 பேர், தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 10 பேர், மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 10 பேர், காரைநகர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேர், சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 08 பேர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், யாழ்.மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர், பண்டத்தரிப்பு பிரதேச வைத்தியசாலையில் 05 பேர், அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் ஒருவர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை யில் 02 பேர், சங்கானை பிரதேச வைத்தியசாலை யில் 04 பேர், நொதேர்ன் சென்ரல் வைத்தியசாலையில் ஒருவர்,

கிளிநொச்சி மாவட்டத்தில் 28 பேர்

அக்கராயன்குளம் பிரதேச வைத்தியசாலையில் 17 பேர், பளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 09 பேர், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 02 பேர், மன்னார் மாவட்ட வைத்தியசாலையில் 12 பேர்,

வவுனியா மாவட்டத்தில் 18 பேர்

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலை யில் ஒருவர், செட்டிகுளம் ஆதார வைத்தியசாலை யில் 02 பேர், பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் 02 பேர்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் 09 பேர்

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் 04 பேர், முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை யில் 03 பேர், மாந்தை கிழக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 02 பேர் தொற்றாளர் களாக அடையாளம் காணப்பட்டுள்ளது டன், வவுனியா விமானப்படை முகாமில் 03 பேர்,

முழுங்காவில் கடற்படை முகாமில் 02 பேர், முல்லைத்தீவு விமானப்படை முகாமில் ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## நிலைமை மிகவும்...

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“இலங்கையில் கொரோனா பரவல் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை இரவு முதல் 10 நாட்களுக்கு நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நாட்களில் பொதுமக்கள் பாதுகாப்பாக வீட்டில் இருக்க வேண்டும். மக்கள் வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மக்கள் மீறக்கூடாது.

கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால், சுகாதாரத் துறையினர் பல்வேறு சிரமங்களுக்கும் முகங்கொடுத்து வருகின்றனர்” - என்றார். (இ)

## உண்மைகளை மூடி...

தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் குறித்து அரசு அதன் பொறுப்புக்கூறலையும் கடமைகளையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்றும், இல்லையேல் சர்வதேசத்தை நாடுவோம் என்றும் பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்து வருகின்றார்.

அத்துடன் இந்தத் தாக்குதலுக்கு நீதியை வலியுறுத்தும் விதமாக வீடுகள், வர்த்தக நிலையங்கள், வணக்கஸ்தலங்கள் என்பவற்றில் நேற்று கறுப்புக் கொடி ஏற்றுமாறு கத்தோலிக்க திருச்சபை கேட்டுக்கொண்டிருந்தது.

அதற்கமைய பொதுமக்கள் நேற்று வீடுகளிலும், வர்த்தக நிலையங்களிலும், வணக்கஸ்தலங்களிலும் கறுப்புக் கொடிகளை ஏற்றினர்.

இதேவேளை, “உண்மையை மூடி மறைப்பது மாபெரும் அரசியல் சூழ்ச்சி உண்மையைக் கண்டறிய ஒன்றிணைவோம்” என்று வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகள் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தின் வாசற்பகுதியில் நேற்று தொங்கவிடப்பட்டிருந்தன. தேவாலயத்தில் நேற்று விசேட பிரார்த்தனையும் இடம்பெற்றது.

நேற்று நடைபெற்ற இந்தக் கறுப்புக் கொடி போராட்டம் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விவகாரம் தொடர்பாக நாட்டு மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது என்று கத்தோலிக்க திருச்சபை தெரிவித்துள்ளது. (இ)

## நாடு மீண்டும்...

2 ஆயிரம் ரூபா வழங்கப்படும் என்று அவர் கூறினார்.

நேற்று கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனை தெரிவித்தார். தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு 14 நாள்களுக்கு மேல் நீட்டிக்கப்படாது என்றும் அவர் கூறினார்.

2 ஆயிரம் ரூபா அல்லது 5 ஆயிரம் ரூபா போதுமானதாக இருக்காது என்றாலும், எதற்கும் மேலாக சில நிதிகளை வழங்குவது பாராட்டப்படவேண்டும் என்பதை அவர் ஒப்புக்கொண்டார்.

அரசின் தற்போதைய நிதிச் சிக்கல்கள் இருந்தபோதிலும், பொதுமக்களின் நல்வாழ்வை அரசு கவனிக்கவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் அமுனுகம கூறினார்.

அரச மற்றும் தனியார் துறையினரின் சம்பளத்தின் ஒரு பகுதியை நன்கொடையாக வழங்குமாறு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க முன்வைத்த யோசனை குறித்து அமைச்சர் திலும் அமுனுகம கருத்து தெரிவிக்கையில், அத்தகைய நடவடிக்கை மட்டும் தற்போதைய நிலைமையை ஆதரிக்காது.

இந்த முடக்கம் காரணமாக பலர் உணவை உண்ணமாட்டார்கள். எனவே நிதி இருப்பவர்களிடம் இருந்து எடுக்கப்படவேண்டும், இல்லாதவர்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டும் என்பதை ஒப்புக்கொண்டார்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசத் துறைகளும் இதற்கு பங்களிக்க வேண்டியிருக்கும். அத்தகைய தேவை இன்னும் எழவில்லை என்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம குறிப்பிட்டார்.

நாடு மீண்டும் மீண்டும் மூடப்பட்டால், நிதி குறைந்து வருவதால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சர் ரணதுங்க விடுத்த கோரிக்கைக்கு கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் இணக்கமாக இருப்பதாக அமுனுகம மேலும் கூறினார்.

## ஜனாதிபதி! திமிர்...

ஆயர்கள், பிரதேச மக்கள், உயிர்த்த ஞாயிறு தினமன்று கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் கொல்லப்பட்ட உறவுகளின் உறவினர்கள் உள்ளடங்களாகப் பலர் கலந்துகொண்டனர்.

இதில் கலந்துகொண்டவர்கள், உயிர்த்த ஞாயிறு தினத் தற்கொலைத் தாக்குதல் தொடர்பான முழுமையான விசாரணைகளைப் பூர்த்திசெய்யுமாறு வலியுறுத்தியும், இது தொடர்பான கத்தோலிக்கத் திருச்சபையின் கடிதத்துக்குத் தெளிவாகப் பதிலளிக்குமாறும் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், தீப்பந்தங்கள் மற்றும் கறுப்புக் கொடிகளையும் ஏந்தியிருந்தனர்.

இதன்போது ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கருத்துரைக்கையில்,

“நீர்கொழும்பு மக்கள், சமூக மற்றும் சமாதான அமைப்பு, ஏப்ரல் 21 நியாயக் கோரிக்கைக்கான நிதியம் ஆகியன இணைந்து இந்தக் கறுப்புக் கொடி போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். கத்தோலிக்க திருச்சபை அரசுக்கு அனுப்பிய கடிதத்துக்கு, அரசு பொறுப்பற்ற வகையில் பதிலளித்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கத்தோலிக்க திருச்சபையின் கோரிக்கைக்கு முறையாகப் பதிலளிக்குமாறும் வலியுறுத்தியுமே நாம் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கின்றோம்.

நாட்டில் மக்கள் உயிரிழப்பது தொடர்பிலும் காணாமல்போவது தொடர்பிலும் ஒருவரும் கருத்தில்கொள்வதில்லை

கட்டுவாப்பிட்டிய, கொச்சிக்கடை, மட்டக்களப்பு ஆகிய தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைக்கக் கத்தோலிக்க திருச்சபை மேற்கொண்டு வரும் முயற்சிகளை நாம் கைவிடப்போவதில்லை” - என்றனர். (இ)

## கொரோனா கட்டுப்...

ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகவியலாளர் சந்திப்பு அந்தக் கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார மேற்கண்ட விடயத்தை சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

கொரோனா வைரஸ் பரவல், கட்டுப்படுத்த முடியாத கட்டத்துக்கு வந்துள்ளது என்பது ஆட்சியாளர்களுக்குத் தெரியும். எனவேதான் இதற்கான பழியை எவர் மீதாவது திணித்துவிட்டு தப்பித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதன் பிரகாரமே வேலைநிறுத்தப்போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களே வைரஸ் பரவலுக்கு காரணம் எனவும், சுமார் 30 லட்சம்பேர்வரை வீதிகளில் இறக்கப்பட்டனர் எனவும் ஆளுந்தரப்பால் தகவல் வெளியிடப்படுகின்றது.

ஆசிரியர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் 99வீதமான ஆசிரியர்கள் பங்கேற்றனர். ஆசிரியர்களில் 85 வீதமானோர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கே வாக்களித்தனர். எனவே, எதற்காக ஆசிரியர்கள் போராடுகின்றனர் என்பது தொடர்பில் அரசு ஆராய்ந்து பார்க்கவேண்டும். அவர்களால் முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நாம் நாட்டை ஆளவில்லை. ஆனாலும் நாம்தான் ஆட்சியாளர்கள் என நினைத்துக்கொண்டே ஆளுந்தரப்பில் இருந்து விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

அதேவேளை, நாட்டின் உண்மை நிலைவரத்தை எடுத்துரைப்பதற்கு சுகாதார அமைச்சராக பதவி வகித்த பவித்ரா முயற்சித்துள்ளார். ஆனால் அவர் தடுக்கப்பட்டுள்ளார். நிலைமை மோசம், நாட்டை முடக்குமாறே அவர் வேண்டுகோள் விடுக்க சென்றுள்ளார். அவரின் கோரிக்கை செவிமடுக்கப்படவில்லை. இவ்வாறு தன்னிச்சையாக செயற்படும் அரசு, பழியை எதிரணிமீது சுமத்துவது நகைப்புக்குரிய விடயமாகும்.” - என்றார்.

## கனடிய பொதுத்...

பேர் முதல் தடவையாக இத்தேர்தலில் தான் களமிறங்குகின்றார்கள்.

லிபரல் கட்சியின் சார்பில் மூவரும், கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் இருவரும், தேசிய ஜனநாயகக் கட்சி, Bloc Quebecois ஆகியவற்றின் சார்பில் தலா ஒருவரும் என தமிழ் வேட்பாளர்கள் இம் முறை போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் ஐவர் முதல் தடவை யாக தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

லிபரல் கட்சியின் சார்பில் அனிதா ஆனந்த் மீண்டும் Oakville தொகுதியிலும், ஹரி அனந்தசங்கரி மீண்டும் ஸ்காபுரோ றோஜ் பாக் தொகுதியில் போட்டியிட, முதல் தடவையாக வைத்தியர் அல் போன்ஸ் ராஜகுமார் சஸ்கற்றூன் மேற்கு தொகுதியில் போட்டியிடுகிறார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் சஜந்த் மோகனகாந்தன் யோர்க் தெற்கு தொகுதியிலும், மல்கம் பொன்னையன் ஸ்காபுரோ மத்திய தொகுதியிலும் போட்டியிடுகின்றனர். இவர்கள் இரு வரும் போட்டியிடும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

கியூபெக் மாகாணத்தில் மாத்திரம் வேட்பாளர்களை களம் இறக்கும் Bloc Quebecois கட்சி சார்பில் ஷோபிகா வைத்தியநாதசர்மா றொவிமவுண்ட் Patrie தொகுதியில் இம்முறை போட்டியிடுகின்றார். ஒரு தமிழ் வேட்பாளர், Bloc Quebecois சார்பில் போட்டியிடுவதும், கியூ பெக் மாகாணத்தில் போட்டியிடுவதும் இதுவே முதல் தடவையாகும்.

தேசிய ஜனநாயக கட்சி (NDP) சார்பில் அஞ்சலி அப்பாதுரை வான்கூவர் கிரான்வில் தொகுதியில் போட்டியிடுகிறார். இவரும் முதல் தடவை யாக தேர்தல் அரசியலில் போட்டியிடுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பூப்புனித நீராட்டு...

பட்டதையடுத்து அதில் கலந்துகொண்ட 58 பேருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களிலேயே 21 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஒரே நாளில்...

சாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது. இலங்கையில் இதுவரை அடையாளம் காணப்பட்ட மிகக் கூடுதலான தொகையாக நேற்று அடையாளம் காணப்பட்ட தொகை பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா...

இவற்றுடன் நாட்டில் பதிவான மொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்தைக் கடந்து 7,183 ஆக அதிகரித்துள்ளது.

## மரண அறிவித்தல்

பிறப்பு
15 . 09 . 1943



இறப்பு
21 . 08 . 2021

### கந்தக்குட்டி இரத்தினம்

(ஓய்வு நிலைக் கிராம அலுவலர், பிரதேசசபை உறுப்பினர் – கரவெட்டி)

அண்ணாசிலையடி, கரணவாய், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தக்குட்டி இரத்தினம் (ஓய்வு நிலைக் கிராம அலுவலர், பிரதேசசபை உறுப்பினர் – கரவெட்டி) நேற்று (21.08.2021) சனிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தக்குட்டி – பொன்னி தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற கிருஷ்ணன் – தெய்வாணை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பாஸ்கரன், மனோகரன் மற்றும் பிறேமா, மணிமாறன் (சுவிஸ்), நெடுஞ்செழியன் (அலுவலக உதவியாளர் – யா/சென்திரேசா மகளிர் கல்லூரி), தமிழ்மாறன் (வலயக்கல்விப் பணிப்பாளர் – முல்லைத்தீவு), கரிகாலன் (சுவிஸ்), பாமிலா (அபிவிருத்தி உத்தியோகத்தர் – உபபிரதேச சபை, பருத்தித்துறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாந்தகலா, சங்கர், கோமதி (சுவிஸ்), மதிவதனா, நந்தினி, அதிஷ்டலக்ஷ்மி (ராதா – சுவிஸ்), சிவகாந்தன் (ஆசிரியர் – யா/கலட்டி றோ.க.பாடசாலை) ஆகியோரின் மாமனாரும், தயாளன் – சிந்துஜா (கனடா), நிஷாந்தன் (கட்டார்), வதீஜா, சுஜீவன் – கார்த்திகா (சுவிஸ்), நிதர்சன், சாருகன், சாரங்கா, சிபிக்கா, அபிநயன் (சுவிஸ்), நிதுனா (சுவிஸ்), கலிபரன், நூர்ஜிகா, செந்தாளன், ஆர்த்திகன், ஆரணன், அர்ஜீன் (சுவிஸ்), அம்சானி, ஆரணிகா, ஆரபி ஆகியோரின் பாசமிகு பேரனும், சாகித்தியன் (கனடா), கார்த்திகேயன் (கனடா), ஹரிட் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் கோவிட் – 19 சுகாதார முறைகளின் படி இடம்பெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணியளவில் வெல்லன் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :
**இ.தமிழ்மாறன் - 077 465 6973**
**இ.நெடுஞ்செழியன் - 077 291 1472**
**சி.சிவகாந்தன் - 077 989 7813**

தகவல்
**குடும்பத்தினர்.**

ஈழநாடு
Eelanadu

# யாழ். மாவட்டத்துக்கு தேவையான எரிபொருள் கையிருப்பில் உள்ளது



## மக்கள் அச்சமடையத் தேவையில்லை என்கிறார் மாவட்ட அரச அதிபர் மகேசன்

யாழ்ப்பாணம், ஓக. 22

**யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குத் தேவையான எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது என மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.**

**பொதுமக்கள் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படும் என அச்சம் கொள்ளத் தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.**

யாழ்ப்பாணத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொதுமக்கள் எரிபொருள் நிரப்புவதற்காக வரிசையில் காத்திருந்து எரிபொருள் நிரப்பியமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

எனினும், யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தரவின் படி மாவட்டத்துக்குத் தேவையான எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ - 03)

## பிரிட்டன் பல்கலையின் துணைவேந்தராக பேராசிரியர் நிஷான் கனகராஜா நியமனம்



லண்டன், ஓக. 22

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் பழைய மாணவரான பேராசிரியர் நிஷான் கனகராஜா பிரித்தானியாவின் லெஸ்ரர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக நியமனம் பெறுகின்றார். எதிர்வரும் நவம்பர் 04 ஆம் திகதி இந்தப் பதவியை அவர் பொறுப்பேற்கவுள்ளார்.

பேராசிரியர் கனகராஜா 1985 ஆம் ஆண்டு கணிதத் துறையில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி நான்கு பாடங்களிலும் அதிவிசேட சித்தி பெற்று கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகிக் கல்வியைப் பெற்றவர் ஆவர்.

1966இல் சுண்டிக்குளியில் பிறந்த பேராசிரியர் நிஷான் கனகராஜாவின் தந்தை கனகராஜா யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியராகவும், தாய் சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் ஆசிரியையாகவும் இருந்தவர்கள் ஆவர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 27 . 03 . 1940



பிறப்பு 19 . 08 . 2021

## காத்தலிங்கம் எரம்பமூர்த்தி

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை V.M Roadஐ வதிவிடமாகவும், நீர்கொழும்பை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட காத்தலிங்கம் எரம்பமூர்த்தி கடந்த (19.08.2021) வியாழக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காத்தலிங்கம் – அம்முனியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் வனசாட்சி ஸ்ரீதேவி தம்பதியரின் பாசமிகு மருமகனும், விஜயகுமாரியின் அன்புக் கணவரும், லிங்கமூர்த்தி (லிங்கம் – லண்டன்), சுந்தரமூர்த்தி (சுந்தா– லண்டன்), விஜிதா (விஜி– லண்டன்), விஜயலக்ஷ்மி (லச்சி– லண்டன்), காலஞ்சென்ற விஜயமூர்த்தி (ராஜன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குலவீரசிங்கம் (ரமணன்), அருந்த வராஜா (அருண்), கலா, யசோதா (சுகி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான செல்வமாணிக்கம், தங்கராசா, பாலகுருசாமி, மணிமேகலை, கதிரித்தம்பி, பொன்னம்பலம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற சிவராஜசுந்தரம்(ராசா), சிவபாலசுந்தரம் (பபி), காலஞ் சென்ற பரராஜசிங்கம்(ஜெயர்), ரதிகுமாரி, ரூபகுமாரி, காலஞ்சென்ற மோகனசுந்தரம்(மோகன்), சுகுமாரி, செல்வகுமாரி, செல்வசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,வினோத், மனோஜ், அபிராமி, விஜய், அருணியா, அவின், பூரணி, தினேஷ், சுவேதா, சுசிதா, சுஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (22.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
சுந்தரமூர்த்தி - மகன்
Mobile : +447985227998

தகவல்
குடும்பத்தினர்.

# கல்முனை வடக்கில் 15 பேருக்கு தொற்று

கல்முனை, ஓக. 22

கல்முனை வடக்கில் நேற்று 15 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு சுகாதாரப் பணிமனையால் 62 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 15 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

பரிசோதனைகளில் குருந்தையடி சுனாமி தொடர்மாடிக் குடியிருப்பில் 8 பேருக்கும், கல்முனையில் 4 பேருக்கும், பெரிய நீலாவணையில் மூவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, கல்முனையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மீளக்குடியேறி வசித்து வரும் ரெட்குரோஸ் தொடர்மாடிக் குடியிருப்பில் ஏற்கனவே 26 பேர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியிருந்த நிலையில் நேற்று 47 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் மேலும் 8 பேர் தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஆர்.கணேஸ்வரன் தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் குடும்பநல உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் பிரதேசத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கான விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை, பாண்டிருப்பு, பெரியநீலாவணை, சேனைக்குடியிருப்பு, துறைவந்தியமேடு,நற்பிட்டிமுனை ஆகிய கிராமங்களில் ஏற்கனவே கொரொனாத் தொற்றாளர்களுடன் தொடர்புபட்டவர்கள், சுய தனிமைப்படுத்தலில் இருந்தவர்கள், தூர இடங்களில் இருந்த வருகை தந்தவர்கள் எனப் பலதரப்பட்ட வர்களுக்கும் தொடர்ச்சியாக அன்டிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## வீதிகளில் நடமாடியவர்களை மறித்து அன்டிஜன் சோதனை

### இருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம்

வவுனியா, ஓக. 22

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக நாடு முழுவதும் முடக்கப்பட்டுள்ள நிலையில் வீதிகளில் நடமாடியவர்களை வழிமறித்து வவுனியா சுகாதாரப் பிரிவினர் நேற்று மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணி முதல் எதிரவரும் 30 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதும் முடக்க நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இதனை மீறிச் செயற்படுபவர்கள் மீது பொலிஸாரும், சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அந்தவகையில், வவுனியா நகரப் பகுதிகளில் சுகாதாரப் பிரிவினரும், பொலிஸாரும் இணைந்து விசேட கண்காணிப்பு நடவடிக்கையில் நேற்று ஈடுபட்டதுடன், வீதியில் நடமாடியவர்களை வழிமறித்து அன்டிஜன் பரிசோதனையும் முன்னெடுத்திருந்தனர். இதனை மாவட்ட பதில் அரச அதிபர் தி.திரேஸ்குமார் நேரடியாக விஜயம் செய்து கண்காணித்தார்.

வவுனியா நீதிமன்றம் மற்றும் ரயில் நிலைய வீதி என்பவற்றில் சைக்கிள், மோட்டர் சைக்கிள் மற்றும் வாகனங்களில் நடமாடியவர்கள் வழிமறிக்கப்பட்டு 30 பேருக்கு அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதில் இருவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

தொற்று உறுதி செய்யப்பட்டவர்களைக் கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஏனையவர்கள் சுகாதாரப் பிரிவினராலும், பொலிஸாராலும் எச்சரிக்கப்பட்டு வீடுகளுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். (இ)

## கரவெட்டி பிரதேச சபையின் உறுப்பினர் கந்தன் இரத்தினம் நேற்று காலமானார்!

வடமராட்சி, ஓக. 22

வடமராட்சி தெற்கு மேற்கு (கரவெட்டி) பிரதேச சபை உறுப்பினர் கந்தன் இரத்தினம் (வயது 78) நேற்று பிற்பகல் காலமானார்.

கரணவாய் தெற்கு, அண்ணாசிலையடியைச் சேர்ந்த இவர் 2011ஆண்டும், 2018ஆம் ஆண்டும் நடைபெற்ற கரவெட்டிப் பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வட்டார மட்டத்தில் போட்டியிட்டு சபை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு சுமார் 11 வருடங்களாக சபை உறுப்பினராகப் பணியாற்றியுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நீண்டகால உறுப்பினரான இவர் சிறந்த சமூக சேவையாளரும் பிரபல தொழில் அதிபருமாவர்.

அத்துடன் இவர் நீண்ட காலம் கிராமசேவையாளராகக் கடமையாற்றி இளைப்பாறியுள்ளார். (இ - 02)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 22.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-காதலுக்கு மரியாதை
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்
**இரவு**
7.00 மணி : SPOTLIGHT - வட மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம்



8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி : செல்லாடுகளம் - அறத்தின் அறச்செயற்பாட்டுக்கு கரம் கொடுப்போம்



10.00 மணி: -நேர்கொண்ட பார்வை-விசேட வைத்திய நிபுணர் றியாஸ் மஜித்




**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : உ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு